32°c
கூடிய வெப்பநிலை 40°c
குறைந்த வெப்பநிலை 27°c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.

உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24

விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 கதிர்: 151 வள்ளுவர் ஆண்டு: 2045 சித்திரை 13, சனி 26.04.2014

26 APR 2014
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# வன்புணர்வை ஆயுதமாக பாவிக்கும் நாடு இலங்கை

## பட்டியலிட்டது ஐக்கிய நாடுகள் சபை



நியூயோர்க், ஏப்ரல் 26
பாலியல் வன்புணர்வுகளை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தும் நாடுகளில் இலங்கையும் அடங்கும் என்று அறிவித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை.

போரில் வன்புணர்வை ஆயுதமாகப் பயன்படுத்திய மற்றும் பயன்படுத்தி வருகின்ற நாடுகள் தொடர்பான ஐ.நா. பொதுச் செயலாளரின் பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. பாலியல் வன்முறைகள் தொடர்பிலான ஐ.நா. சிறப்புத் தூதுவர் சாய்னா ஹவா பங்குரா பட்டியல் உள்ளடங்கிய அறிக்கையை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் 21 நாடுகளின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இலங்கை, அங்கோலா, பொஸ்னியா, கெர்சகோவினா, கம்போடியா, கொலம்பியா, குனியா, லைபீரியா, லிபியா, நேபாளம், சியாராலியோன், சோமாலியா, சூடான், யேமன் ஆகியன உள்ளடங்கலாக 21 நாடுகளில் உள்ள 34 குழுக்கள் - அரச இராணுவப் படைகளும் அதற்குள் அடங்கும் - இனங்காணப்பட்டுள்ளன என்று அறிக்கை கூறுகின்றது.

நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பங்குரா, இலங்கையில் குறிப்பாக தமிழ்ப் பெண்களை இலக்கு வைத்து பாலியல் குற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாகக் கிடைக்கும் அறிக்கைகள்

21ஆம் பக்கம் பார்க்க

சாய்னா ஹவா பங்குரா போர் வலய பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிரான பிரிவின் விசேட பிரதிநிதியாக கடமையாற்றுகின்றார். அவர் போர் நடைபெற்ற காலத்திலும் அதன் பின்னரும் இலங்கையில் இடம்பெற்று வரும் பாலியல் வன்கொடுமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்புக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹணவுடன் பேச்சு நடத்தப்பட்டது என்று தெரிவித்துள்ளார். இந்தப் பிரச்சினைகள் குறித்து விரிவாக பேச்சு நடத்த, இலங்கைப் பிரதிநிதி இணக்கம் வெளியிட்டுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார். அதன்போது பாலியல் வன்கொடுமைகள் தொடர்பிலான விவகாரங்களுக்காக விசேட பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு இலங்கையிடம் கோரினேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## கோபியுடன் தொடர்பானவர் குருநகரில் கைதானாராம்

### பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.26
விடுதலைப் புலிகள் அமைப்பை மீளிணைக்க முயற்சிக்கின்றார் என்று கூறி இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட கோபியுடன் தொடர்பு வைத்திருந்தவர் என்று தெரிவித்து குருநகர் பகுதியில் நேற்று முன்தினம் மாலை பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க

21ஆம் பக்கம் பார்க்க

## மூவர் விடுதலைக்கு எதிரான வழக்கு அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றம்

2 ஆம் பக்கம் பார்க்க

## பதில் கூறிக்கொண்டிருக்க நேரமில்லை செய்கை மூலமே பதிலடி கொடுப்போம்

### தெரிவுக் குழு விவகாரம் தொடர்பில் இரா.சம்பந்தன் காட்டம்



யாழ்ப்பாணம், ஏப்.26
"அவர்களுக்கு இதற்கெல்லாம் பதில் கூறிக்கொண்டிருக்க முடியாது. நாம் நடத்தையால் அவர்களுக்கு உரிய பதிலடி கொடுப்போம் என்று 'உதயனுக்கு' காட்டமாக தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.
இனப்பிரச்சினையைத் தீர்ப்ப

21ஆம் பக்கம் பார்க்க

## குதிரை கடத்தல்;

## நெடுந்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.26
நெடுந்தீவில் இருந்து சட்ட விரோதமாக 5 குதிரைகளை கடத்திச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நெடுந்தீவுப்பொலிஸ் பொறுப்பதிகாரி முல்லைத்தீவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.
யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் குறித்த

21ஆம் பக்கம் பார்க்க

பின்தொடருங்கள் எம்மை...
முகநூல் www.facebook.com/uthayan.print
டுவிற்றர் https://twitter.com/UthayanPrint

## தமிழ் பெண்கள் பொலிஸில் இணைக்கப்படுவார்கள்

### வடக்கில் பணிபுரிவதற்காகவாம்

யாழ்ப்பாணம், ஏப்.26
வடக்கு மாகாணத்தில் பணியாற்றுவதற்காக அதேபகுதியைச் சேர்ந்த 400 பெண்கள் பொலிஸ் பிரிவில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று தெரிவித்துள்ளார் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.
யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது;
"வடக்கிலுள்ள பெண்களை இணைத்துக்கொள்ளும்பொருட்டு பெண் கொன்ஸ்டபிள்கள்400பேர் பொலிஸ் பிரிவில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். அவர்கள் 5 அடி உயரமாக இருத்தல் வேண்டும். ஜி.சீ.ஈ

21ஆம் பக்கம் பார்க்க

## முத்துஐயன் குளம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.26
முல்லைத்தீவின் மிக முக்கியமான குளமான முத்துஐயன் கட்டுக்குளம் உலக வங்கியின் நிதியுதவியில், 600 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது என்று தெரிவித்துள்ளார் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.
"முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் முத்துஐயன்கட்டுக் குளம் அந்தப் பகுதி விவசாயிகளின் மிக முக்கிய ஆதாரமாக இருந்து வரு

21ஆம் பக்கம் பார்க்க

## மே 18 ஆம் திகதி அணிதிரளுங்கள்

### இலங்கை அரசுக்கு பாடம் புகட்டுவோம் என்கிறது பிரிட்டன் தமிழர் பேரவை

யாழ்ப்பாணம், ஏப்.26
இலங்கை அரசு புலம் பெயர் தமிழர் அமைப்புகளைத் தடை செய்து தமிழர்களின் போராட்டத்தை முடக்குவதற்கு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், எதிர்வரும் 18ஆம் திகதி முன்னெடுக்கப்படும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 5

21ஆம் பக்கம் பார்க்க

## மிதிவெடி அகற்றியவர் மிதிவெடியில் சிக்கிக் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.26
முகமாலையில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் மிதிவெடி வெடித்ததால் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
ஹலோரெஸ்ட் நிறுவனத்தில் பணிபுரியும் கிளிநொச்சி கோணாவில் கிழக்கைச் சேர்ந்த ஸ்ரீகுமார் ஸ்ரீநாத் (வயது -30) என்பவரே காயமடைந்துள்ளார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

## ஊடகங்களில் தகவல் வந்ததால் சபையில் தீர்மானத்துக்குத் தடை

### அவைத் தலைவர் சிவஞானம் அதிரடி முடிவு

யாழ்ப்பாணம், ஏப்.26
வடமாகாண சபையில் நிறைவேற்றுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பில் ஊடகங்களில் செய்தி வெளியானதால், அந்த முன்மொழிவை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளாமல் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் நிராகரித்துள்ளார் என்று தெரிய வருகிறது.
வடக்கு மாகாணசபையின் எட்டாவது அமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இந்த அமர்வில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்காக ஆளுங்கட

21ஆம் பக்கம் பார்க்க

## கைதிகள் போன்று வாழும் ஈழத் தமிழ் அகதிகள்

பக்கம் 12

## தனுஷ்கோடிக்கு அண்மையில் இலங்கைக் கடற்படை முகாம்

### தமிழக மீனவர்கள் பெரும் அச்சத்தில் என்கின்றது 'தி ஹிந்து'

சென்னை, ஏப்.26
தனுஷ்கோடிக்கு அருகே உள்ள 7ஆவது மணல் திட்டில் இலங்கைக் கடற்படையினர் புதிய முகாம் ஒன்றை நிறுவியுள்ளனர் என்றுதகவல் வெளியிட்டுள்ளது

21ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பின் மே தினம் சாவகச்சேரியில் இம்முறை

யாழ்ப்பாணம், ஏப்.26

சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினக் கூட்டம் நடைபெறவுள்ளதுடன், மே தின ஊர்திகள் அனைத்தும் சங்கத்தானையிலிருந்து பேரணியாக கலசார மண்டபத்தை பி.ப 2 மணிக்குச் சென்றடையும் வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேதினக் கூட்டம் தொடர்பிலான முன்னேற்பாட்டுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தின நிகழ்வுகள் இந்த ஆண்டு சாவகச்சேரியில் இடம்பெறவுள்ளது என்றும், ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களிலிருந்தும் மே தின ஊர்திகள் புறப்பட்டு சங்கத்தானையில் ஒன்று சேருவதுடன், சங்கத்தானையிலிருந்து அனைத்து ஊர்திகளும் ஒன்றாகப் பேரணியாகப் புறப்பட்டு சாவகச்சேரி கலாசார மண்டபத்தை பி.ப 2 மணியளவில் அடையும் என்று அறிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி கலாசார மண்டபத்திலேயே கூட்டமைப்பின் பிரதான மேதினக் கூட்டம் இடம்பெறும். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், அமைச்சர்கள், முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் பங்கெடுக்கவுள்ளனர் என்றும் கூறப்பட்டது. (ற-5)

# மூவர் விடுதலைக்கு எதிரான வழக்கு அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றம்

சென்னை, ஏப்.26

இந்தியமுன்னாள்பிரதமர்ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை வழங்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் உட்பட 7 பேரைவிடுவிப்பது தொடர்பான வழக்கை, அரசியல் சாசன அமர்வுக்கு மாற்ற இந்திய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கியுள்ளது.

முருகன், சாந்தன், பேரறிவாளன் உட்பட 7 பேரையும் விடுவிக்கும் தமிழக அரசின் உத்தரவை எதிர்த்து மத்திய அரசு தொடர்ந்த வழக்கு, தலைமை நீதிபதி சதாசிவம் அடங்கிய 3 நீதிபதிகள் அமர்வு முன் விசாரணை நடைபெற்று வந்தது.

இந்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், இது போன்ற வழக்கை உயர் நீதிமன்றம் சந்திப்பது முதன்முறை என்று கூறிய நீதிபதிகள், வழக்கில் விரிவான விவாதங்கள் தேவைப்படுவதாக தெரிவித்தனர். எனவே வழக்கை உயர் நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றி பரிந்துரை செய்த நீதிபதிகள், அதனை 3 மாதத்திற்குள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினர். மேலும், அந்த அமர்வுக்கு 7 கேள்விகளையும் முன்வைத்துள்ளனர்.

குறிப்பாக, சிறையிலுள்ள ஒருவரின் தண்டனையை ரத்து செய்ய மத்திய அரசு அல்லது மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளதா என்பது பற்றி அரசியல் சாசன அமர்வு முடிவெடுக்க வேண்டும் என்று நீதிபதிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். இதற்கிடையே 7 பேரையும் விடுவிக்க தமிழக அரசுக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை தொடரும் என்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்டோரின் தூக்குத் தண்டனையை உயர் நீதிமன்றம் கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி ரத்துச் செய்தது.

இதைத்தொடர்ந்து, அவர்களை விடுவிக்க தமிழக அரசு முடிவெடுத்தது.

தமிழக அரசின் முடிவுக்கு எதிராக இந்திய மத்திய அரசு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. தமிழக அரசுக்கு அவர்களை விடுவிக்கும் அதிகாரம் இல்லை என்று மத்திய அரசு தெரிவித்திருந்தது. இதனை விட மூவரின் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்ததற்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. இதில் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்ததை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. .(ற-5)

## கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள் விரைவில் கூடிப் பேசவுள்ளனராம்

யாழ்ப்பாணம், ஏப்.26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்து கட்சித் தலைவர்களின் அவசர கலந்துரையாடல் ஒன்று விரைவில் இடம்பெறவுள்ளது என்று தெரியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் எதிர்வரும் 30 ஆம் திகதி திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலுக்கு முன்னதாக கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சித் தலைவர்களும் கூடிக் கலந்துரையாடவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய ஐந்து கட்சிகளின் தலைவர்களுமே திருகோணமலை கூட்டத்துக்கு முன்னதாக நாளை அல்லது நாளைமறுதினம் கூடிக் கலந்துரையாடவுள்ளனர் என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது. (ற-5)

## தந்தை செல்வா நினைவு தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.26

தந்தை செல்வாவின் 37ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மலரஞ்சலியும் நினைவுரையும் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் அமைந்திருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் இன்று மாலை 5 மணியளவில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## யுவதியின் சாவு தொடர்பில் மதகுருமார்கள் மன்றுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் யுவதி ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பில், யுவதியின் பெற்றோரால் குற்றஞ்சாட்டப்படும் இரு மதகுருமார்களும் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவித்தார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி. விமலசேன.

யாழ்.பொலிஸ் நிலையத்தில நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறும் போது,

"இரண்டு மதகுருமார் மீதும் உயிரிழந்த யுவதியின் பெற்றோரே குற்றச்சாட்டுச் சுமத்துகின்றனர். மதகுருமாரிடமும் தாம் வாக்குமூலம் பெற்றுள்ளோம். குற்றஞ்சாட்டப்படும் இரு மதகுருமார்களையும் வழக்கின் அடுத்த தவணையின் போது நீதிமன்றில் முற்படுத்தவுள்ளோம்.

யுவதியின் உடற்கூற்றுப் பரிசோதனையில் குறித்த யுவதி நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் மதகுருமாரை தாம் இன்னும் கைது செய்யவில்லை. உடற்கூற்றுப் பரிசோதனை மாத்திரமே தற்போது நிறைவடைந்துள்ளது. மரண விசாரணை தொடர்ந்து கொண்டிருக்கிறது."- என்று தெரிவித்தார். (ற-4- 86)

## போதையில் இடையூறு செய்தவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.26

மது போதையில் வீதியில் பெண்களுடனும் வழிப்போக்கர்களுடனும் கெட்ட வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டதோடு, தகாத முறையில் நடந்துகொள்ள முயன்ற ஒருவர் தெல்லிப்பழைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மல்லாகம் சந்தியில் நேற்று முற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சுமார் 60 வயது மதிக்கத்தக்க அந்த நபர் சில நாள்களாக அவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டு வந்த நிலையில் பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் படியே நேற்று அவர் கைது செய்யப்பட்டார் என்று கூறப்படுகின்றது. (ற-4- 86)




கிளிநொச்சி கரைச்சி வடக்கு தனியார் கூட்டுறவு நிறுவனத்தினரால் 'சேவாலங்கா' நிறுவனத்தின் நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப்பட்ட விதை நெல் சுத்திகரிப்பு நிலையம் நேற்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது. (ற-400-55)

## இலங்கையை எங்கும் கைவிடாது சீன அரசு

கொழும்பு, ஏப்.26

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் மாத்திரமல்ல, ஐ.நா பாதுகாப்புச் சபையிலும் இலங்கையை ஒரு போதும் சீனா கைவிடாது என்று தெரிவித்துள்ளார் சீன வெளிவிவகார பிரதி அமைச்சர் லியூ ஐஷமின்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுவந்துள்ள அவர், நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போதே அவர் இவ்வாறு உறுதியளித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் சபையில்கடந்த மாதம் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக சீனா வாக்களித்தமைக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது நன்றியைத் தெரிவித்துள்ளார். "நாங்கள் 30 வருட காலம் பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்தோம். உங்களின் உதவியுடன் அதனை வெற்றி கொண்டுள்ளோம்" என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அதற்குப் பதலளிக்கும் விதமாகக் கருத்துத் தெரிவித்த சீனாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர், "நீங்கள் சீனாவுடன் தொடர்பை பேணுவதற்கு - இறுக்கமான உறவை - தொடர்வதற்கு எடுத்துக் கொண்டுள்ள ஆர்வத்துக்கு நான் நன்றி சொல்கின்றேன். ஐ.நா மனித உரிமைகள் சபையில் மாத்திரமல்ல, ஐ.நா. பாதுகாப்புச் சபையிலும் இலங்கையை சீனா காப்பாற்றும்" என்று தெரிவித்துள்ளார். (ற-5)

## பிறரைத் தாக்கிய 34 பேர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.26

பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் யாழ். குடாநாட்டில் கடந்தவாரம் 34 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"சட்டவிரோதமான முறையில் மின்இணைப்புபெற்ற 6 பேரும், பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட 2 பேரும், குடி போதையில் வாகனம் செலுத்திய 8 ... அனுமதிப்பத்திரம் இன்றி ... யில் ஈடுபட்ட 6 பேரும், சந்தேகத்தின் பெயரில் 10 பேரும், வீதி விபத்துக்கள் தொடர்பாக 2 பேரும், குடி போதையில் கலகம் விளைவித்த 2 பேரும், களவு சம்பந்தமாக 5 பேரும், அத்துமீறி வீட்டுக்குள் நுழைந்த 2 பேரும், பொது இடத்தில் மது அருந்திய 3 பேரும், கொலை சம்பந்தமாக ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் உள்ள எட்டு பொலிஸ் நிலையங்களிலும் பெரும் குற்றம் சம்பந்தமாக 2 பேரும் சந்தேகத்தின் பெயரில் 23 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-4-86)

## பஸ் தரிப்பிடம் புனரமைக்கப்படுமா?



சேதமடைந்த நிலையில் காணப்படும் பஸ் தரிப்பிடம்

யாழ்ப்பாணம், ஏப்.26

அரியாலையில் ஏ-9 பிரதான வீதியில் மாம்பழம் சந்திக்கு அண்மையில் உள்ள பஸ் தரிப்பிடம் அண்மைக்காலமாக சேதமடைந்த நிலையில் உள்ளது.

குறித்த பஸ் தரிப்பிடக் கூரை மற்றும் சுவர்கள் சேதமடைந்துள்ளதால் பஸ்ஸுக்காகக் ... காத்து நிற்கும் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்தில் கொண்டு குறிப்பிட்ட பஸ் தரிப்பிடத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (கு-17)

## குடை பிடித்தபடி சைக்கிளில் சென்றவர் மோதினார் ஹன்ரரில்

தென்மராட்சி ஏப்.26

கொளுத்தும் வெயிலுக்கு குடை பிடித்துக் கொண்டு சைக்கிளில் சென்ற யுவதி வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஹன்ரர் வாகனத்துடன் மோதி வீழ்ந்ததில் கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் [illegible] வண்ணான் கேணியில் இடம்பெற்றது. பளை மாசாரைச் சேர்ந்த சோதிநாதன் சிந்துஜா (வயது-22) என்பவர் கையில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் பளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு மாற்றப் பட்டார். [illegible]

# வடக்கில் 52 மில். ரூ. செலவில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள்

## விவசாய அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.26
வடக்கு மாகாண விவசாய அமைச்சால் 52 மில்லியன் ரூபா செலவில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள் நடை முறைப்படுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரண்டு மாவட்டங்களிலுமே இந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முத்துஐயன் கட்டுக்குளத்திலிருந்து ஏற்று நீர்ப்பாசனத்தின் மூலம் வித்தியாபுரம் விவசாயக் குடியிருப்புக்கு குடிதண்ணீர் விநியோகிப்பதற்கான புனர்நிர்மாணப் பணிகள் 20 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதன்கிழமை இதற்கான பணிகள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.



முத்துஐயன் கட்டுக்குளத்திலிருந்து ஏற்று நீர்ப்பாசனத்தின் மூலம் வித்தியாபுரம் விவசாயக் குடியிருப்புக்கு குடி தண்ணீர் விநியோகத்துக்கான புனர்நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்தார் விவசாய அமைச்சர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிக முக்கிய குளமான முத்துஐயன்கட்டுக் குளத்திலிருந்து ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் 1965 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதனூடாக பல் வேறு குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, விவசாய நடவடிக்கைகளும் விரிவுபடுத்தப்பட்டிருந்தன. இருப்பினும் பின்னர் ஏற்பட்ட போர்க் கால சூழ்நிலை காரணமாக குறித்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் பாதிக்கப்பட்டிருந்தது. ஏற்று நீர்ப்பாசனத்துக்குரிய வாய்க்கால்களும் தூர்வடைந்திருந்தன. இந்தநிலையில் தற்போது குறித்த பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். இதனால் மீளவும் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய நீர்ப்பம்பி பொருத்துதல், நீர்த்தொட்டி அமைத்தல், நீர்க்குழாய்கள் பொருத்துதல், நீர் திசை திருப்பிகள் அமைத்தல், பழுதடைந்த நீர்க்கால்வாய்களை திருத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய புனர்நிர்மாணப் பணிகளுக்கு 20 மில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதி வடமாகாண விசேட மீண்டெழும் நிதியூட்டத்தில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் புனரமைப்புத் திட்டத்தின் மூலம் 35 குடும்பங் களுக்குரிய 105 ஏக்கர் விவசாய நிலமும், முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான நாலரை ஏக்கர் அளவிலான விவசாயப் பண்ணையும் பாசன வசதி பெறவுள்ளன.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் புழுதியாற்று ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் 32 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதி மத்திய நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-5)

## வாழ்வெழுச்சித் திணைக்களத்தின் வடமாகாண அலுவலகம் வவுனியாவில் திறப்பு

வவுனியா, ஏப்.26
பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வாழ்வெழுச்சித் திணைக்களத்தின் வட மாகாணத்துக்கான அலுவலக திறப்பு விழா நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு வவுனியா பிரதேச செயலகத்துக்கென அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைத்து அலுவலக செயற்பாடுகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (வ-421)

## சாவகச்சேரிக்கு நேற்று வந்தது பரீட்சார்த்த ரயில்

தென்மராட்சி, ஏப்.26
பளையிலிருந்து சாவகச்சேரி வரைக்கும் ரயில் சேவையை நீடிப்பதற்கான பரீட்சார்த்த சேவை நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பளையிலிருந்து சாவகச்சேரி வரையான ரயில் பாதை வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன. அதை அடுத்தே பரீட்சார்த்த சேவை நேற்று இடம்பெற்றது. கொடிகாமம், சாவகச்சேரி, மிருசுவில் ஆகிய ரயில் நிலையங்களின் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ள போதிலும் மேடைகளுக்கு கற்கள் பதிக்கும் வேலைகள் இன்னும் நிறைவுபெறவில்லை.

இதேவேளை சங்கத்தானை, மீசாலை, எழுதுமட்டுவாழ் ஆகிய ரயில் நிலையங்களில் ரயில் தரிப்பதற்கான மேடைகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் நிலையக் கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த நிலையில் பரீட்சார்த்த ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதால் கால்நடைகளின் உரிமையாளர்கள் தமது கால் நடைகளைக் கட்டி வைத்திருக்குமாறு நேற்று ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. (ஒ-9)

## சித்திரை மாத முழுநிலா கலைவிழா

யாழ்ப்பாணம், ஏப்.26
வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சித்திரை மாத முழு நிலா கலை விழா இன்று சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு மன்னார் கல்வி வலயத்தால் மன்னார் அல்-அஸ்ஹர் மகா வித்தியாலய மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியான் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும், கௌரவ விருந்தினர்களாக ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் கே.எம்.வஹீர், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் அ.அந்தோனிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-9)

## சாரதிக்கு பிணை

தென்மராட்சி, ஏப்.26
அனுமதிப் பத்திரமின்றி பனை மரங்கள் ஏற்றி வந்த வாகனச் சாரதியை 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்லுமாறு சாவகச்சேரி நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வாகனச் சாரதியை பிணையில் செல்ல உத்தரவிடப்பட்டது. (வ-9)

## விதிமுறைகளை மீறிய சாரதிகள் செலுத்தினர் அபராதத் தொகை

தென்மராட்சிப் பிரதேசத்தில் மோட்டார் போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்களைச் செலுத்திய சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் மது போதையில் டிப்பர் வாகனம் செலுத்திய சாரதியொருவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், வாகனத்துக்கான இந்த வருட வரி மற்றும் காப்புறுதி ஆவணங்கள் இல்லாது வாகனம் செலுத்திச் சென்ற சாரதிக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும், சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதி மற்றும் வாகன வரி ஆகியவை இல்லாத நிலையில் வாகனம் செலுத்திய மற்றொரு சாரதிக்கு 14 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது. (வ-9)

# வடக்கில் 101 குளங்கள் புனரமைத்து பாவனைக்கு

## மீள் எழுச்சித் திட்ட வடமாகாண மேலதிக பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா.ஏப்.26
வடமாகாணத்தில் பராமரிப்பற்ற நிலையிலும், இராணுவ காவல் அரண்களாகவும் இருந்த 101 குளங்கள் உலக வங்கியின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்ட வடமாகாண மேலதிக பணிப்பாளர் றொபேட் வி.பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

"கடந்த கால போர் சூழ்நிலையால் வடமாகாணத்தில் உள்ள பல முக்கிய குளங்கள் பராமரிப்பற்றதாகவும் இராணுவ காவல் அரண்கள் அமைக்கப்பட்ட நிலையில் நீண்டகாலமாக புனரமைப்பு இன்றிய நிலையிலும் இருந்துள்ளன.

இந்த நிலையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் வேலைகளில் குளங்கள் புனரமைப்பு தொடர்பில் உலக வங்கியின் நிதி உதவியுடன் வட மாகாணத்தில் 101 குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு விவசாயப் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. 101 குளங்களுள் முக்கியமானவையாக மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள கட்டுக்கரைக் குளம், யாழ்ப்பாணத்தில் வழுக்கையாறுகுளம், வவுனியாவில் பாவற்குளம், கிளிநொச்சியில் பிரமந்தனாறுகுளம், முகுந்தன்குளம் போன்றவை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 19 சிறுகுளங்களும், பாவற்குளம் பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் உள்ள 25 குளங்களும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதனைவிட மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் 409 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றுக்கு கிராம அபிவிருத்தி அமைப்பு ஏற்படுத்தப்பட்டு அந்த அமைப்புகள் மூலம் கிராமத்தில் மேற்கொள்ள வேண்டிய முக்கிய வேலைத் திட்டங்களை அமைச்சு மேற்கொண்டு வருகின்றது" என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-421)

# அனுமதிக்கப்பட்ட ஆளணிகள் பிரிவுக்குள் சுகாதார பரிசோதகர் பதவிகள் இணைப்பு

## வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.26
வடமாகாணத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் பொது சுகாதாரப் பரிசோதகர் பதவிகளை அனுமதிக்கப்பட்ட ஆளணிகள் பிரிவுக்குள் இணைக்க நடவடிக்கை எடுக்குமாறு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளில் அனுமதிக்கப்பட்ட ஆளணியினுள் பொது சுகாதார பரிசோதகர் பதவியைச் சேர்த்துக் கொள்வதற்கான பிரேரணையை நிதிப் பிரமாணம் 71 க்கு அமைவாக உரிய விண்ணப்பத்தில் (எப்ஆர்71) போதுமான நியாயப்படுத்தலுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

★ மலேசியாவில் படிக்க மாதம் 70,000/= வரை உழைக்க
O/Lஉம் தேவையில்லை. 35 வயது வரை
ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.
**வெறும் 5 இலட்சம் போதும்.**
**இவ்விசா விசிற் விசா அல்ல.** படிக்கும் உழைக்கும்
விசா என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
2 வருட விசா, இருப்பிடம் இலவசம். 2 மாதங்களில்
பறக்கலாம்.
★ ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படிக்க
ஒரு இலட்சம் வரை உழைக்க, வெறும் 5 இலட்சம்
போதும். (ஆண்/பெண்40வயதுவரைவிண்ணப்பிக்கலாம்)
★ மொறிசியசில் படித்துக்கொண்டே ஒரு இலட்சம் வரை
உழைக்க, வெறும் 6 இலட்சம் போதும்.
★ இத்தாலி 2 வாரங்களில் நாட்டை விட்டுப்பறக்கலாம்.
(நிபந்தனைகளுடன்) (C/13561)(3.6.4)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016, 021 4993502 www. thisaivisa.com

## இலங்கைப் பெண்ணிடம் தங்கம் பறிமுதல்

திருச்சி, ஏப்.26

இலங்கையில் இருந்து திருச்சி சென்ற ஸ்ரீலங்கன் ஏயர் லைன்ஸ் விமானத்தில் பயணித்த பெண்ணிடம் இந்திய ரூ.11 லட்சம் மதிப்புள்ள தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. திருச்சியில் இருந்து டுபாய், சிங்கப்பூர், மலேசியா உட்பட வெளிநாடுகளுக்கு விமானங்கள் இயக்கப்படுகின்றன.

இந்த நிலையில் கொழும்பில் இருந்து திருச்சிக்கு ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் விமானம் நேற்றுமுன்தினம் நண்பகல் பயணித்தது. இதில் பயணித்த பயணிகளின் ஆவணங்கள் மற்றும் உடைமைகளை குடிவரவு குடியகல்வு மற்றும் சுங்க அதிகாரிகள் சோதனை செய்துள்ளனர்.

அப்போது ஒரு பெண் அணிந்திருந்த நகையில் சுங்க அதிகாரிகளுக்கு சந்தேகம் வந்தது. அதையடுத்து அந்த பெண் அணிந்திருந்த சங்கிலி மற்றும் வளையல்களை சோதனை செய்தபோது, கலப்படம் இல்லாமல் சுத்தமான தங்கத்தில் செய்து கடத்தி வந்துள்ளமை தெரிய வந்தது. அதையடுத்து அந்த பெண்ணிடம் இருந்து ரூ.11 லட்சம் இந்திய மதிப்புள்ள 396 கிராம் தங்கத்தை பொலிஸார் பறிமுதல் செய்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில் குறித்த பெண் கொழும்பைச் சேர்ந்த ஸ்ரீவாணி என்று தெரிய வந்தது. தொடர்ந்து ஸ்ரீவாணியிடம் சுங்க அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

**"பெண் அணிந்திருந்த சங்கிலி மற்றும் வளையல்களை சோதனை செய்தபோது, கலப்படம் இல்லாமல் சொக்க தங்கத்தில் செய்து கடத்தி வந்தது தெரிந்தது. அதையடுத்து அந்த பெண்ணிடம் இருந்து இந்திய ரூ.11 லட்சம் மதிப்புள்ள 396 கிராம் தங்கத்தை பொலிஸார் பறி முதல் செய்து விசாரணை நடத்தினர்.**

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், "தற்போது பெண்கள் மூலம் தங்கம் கடத்தல் நடக்கிறது. அவர்களுக்கு சங்கிலி மற்றும் வளையல்களை செய்து அணிவித்து கடத்தி வந்து பின்னர் அவற்றை அதிக விலைக்கு விற்று விடுகின்றனர்" என்று தெரிவித்தனர். (வ)

# அரசு கடமையாற்ற தவறுவதாலேயே நாங்கள் களத்தில் இறங்குகின்றோம்

கொழும்பு, ஏப்.26

எமது செயற்பாடுகள் குறித்தோ நடவடிக்கை தொடர்பிலோ எவரிடமும் மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியம் எமக்கில்லை. அரசு தனது கடமையினை சரிவரச் செய்திருந்தால் பௌத்த தேரர்கள் வீதியில் இறங்கி போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. இன்று நாம் பௌத்த தர்மத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவே போராடுகின்றோம்- இவ்வாறு தெரிவித்துள்ளது பொதுபலசேனா. இதுகுறித்து அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கூறுகையில்.

"பௌத்த மதத்துக்கு எதிராக நாட்டில் பல வேலைத் திட்டங்கள் இடம்பெறுகின்றன. பௌத்தர்களை மத மாற்றும் வேலைத்திட்டத்தில் முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்கள் செயற்படுவதோடு சட்டவிரோத முஸ்லிம் குடியேற்றத்தினை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் செய்வதை கண்டித்தே கடந்த காலங்களில் நாம் குரல் கொடுத்தோம். எனினும் அதை கவனத்தில் கொள்ளாது எம்மையே தொடர்ந்து குறை கூறி வருகின்றனர்.

பௌத்த தர்மத்திற்கு எதிராகச் செயற்படும் வட்டரக விஜித தேரர், ரிஷாத் பதியுதீனின் அமைச்சில் ஒழிந்துள்ளார் என்ற தகவல் கிடைத்ததுமே எமது அமைப்பின் உறுப்பினர்கள் அமைச்சின் வளாகத்தை சூழ்ந்தனர். எனினும் அமைதியான முறையிலேயே பௌத்த தேரர்கள் செயற்பட்டனர். இறுதியில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் ஊடகங்களுக்கு பெரிய விடயமாக தென்பட்டு விட்டது. மத வாதத்திற்கு எதிரான தர்மயுத்தத்தினை நாம் ஆரம்பித்துள்ளோம். நாட்டில் புதிய மாற்றமொன்றினைக் கொண்டு வந்து பௌத்த தர்மத்தை காப்பாற்றுவோம். பௌத்த அமைப்பு யாரிடமும் மன்னிப்பு கேட்கப் போவதில்லை. அமைச்சர் ரிஷாத் பதியுதீன் எம் மீது வழக்கு தொடுத்தாலும் நஷ்ட ஈடு கேட்டாலும் ஒரு ரூபாய் கூட நாம் வழங்கமாட்டோம். அமைச்சரால் இயன்றவரை வழக்குத் தொடரட்டும். நாமும் எமது பலத்தைக் காட்டுகின்றோம். நாம் ஒரு போதும் பொய் கூறி பாவச் செயல்களை செய்ய விரும்பவில்லை. பாவச் செயல் செய்வதை தடுக்கும் பொறுப்பு எமக்கு உண்டு. அதனையே நாம் செய்து வருகின்றோம். இந்த நாடு பௌத்த சிங்கள நாடு என்றாலும் இங்கு அனைத்து மதங்களுக்கும் உரிமை உண்டு."- என்று தெரிவித்தார். (ந-10)

# மூவர் விடுதலை வழக்குத் தீர்ப்பில் அரசியல் செல்வாக்கு இருக்கின்றது

பழ.நெடுமாறன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.26

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நேற்று வழங்கப்பட்ட உயர் நீதிமன்றத் தீர்ப்பில் அரசியல் செல்வாக்கு இருக்கின்றது என்று உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இந்திய உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கு வதற்கு இரண்டு மாத காலம் இழுத்தடித்திருக்க தேவையில்லை. இந்த வழக்கில் மனிதநேயம் என்பதற்கு அப்பால் அரசியலே செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளது. இந்தத் தீர்பு வழங்கப்படுவதற்கு. உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு அரசியல் அழுத்தம் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.


இதேவேளை இந்தத் தீர்ப்புக் குறித்த என்ன சொல்வதென்றே தெரியவில்லை என்று, யாழ்ப்பாணத்திலுள்ள சாந்தனின் சகோதரர் சுதா தெரிவித்தார். (ந-5)

## கொடிகாமம் ரயில் நிலையத்துக்கு அருகில் மக்களின் வசதிக்காக மாற்றுப்பாதை


வரணி, ஏப்.26

கொடிகாமம் ரயில் நிலையப் பகுதியின் தெற்குப் பக்கத்தில் வசிக்கும் மக்களின் போக்குவரத்து வசதி கருதி தற்போது அமைக்கப்பட்டு வரும் ரயில் பாதையின் ஓரமாக கிழக்கு மேற்காக கொடிகாமம் கச்சாய் வீதியை சென்றடையும் வகையில் குறித்த ரயில் நிலைய புனரமைப்புப் பகுதியினரால் புதிய பாதை ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த பகுதியில் வசிக்கும் மக்கள் ரயில் சேவை இடம்பெற்ற காலத்தில் ரயில் பாதையின் குறுக்காக ஏ-9 வீதிக்கு பயணத்தை மேற்கொண்டு வந்தனர். இந்த நிலையில் தற்போது ரயில் நிலையம் மற்றும் மேடைகள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன. கொடிகாமம் ரயில் நிலையம் குடாநாட்டில் அதிகமான பயணிகள் நாளாந்தம் தமது பயணத்தை மேற்கொள்ளும் இடமாக இருந்து வந்துள்ளது. ஒரே சமயத்தில் இரண்டு ரயில்கள் தரித்து நிற்கும் நிலையமாகவும் உள்ளது. எனவே பரந்தளவு இடத்தில் ரயில் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக முன்பு பாவனையில் இருந்து வந்த பாதையை மூடி அதற்குப் பதிலாக மாற்றுப் பாதையாக குறித்த பாதை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வ-122)



மக்களுக்காக அமைக்கப்பட்ட மாற்றுப்பாதை





'நகர இடர் மீட்சித் திறனை கட்டியெழுப்புதல்' எனும் தொனிப்பொருளிலான செயலமர்வு யாழ்.பொது நூலகத்தில் நேற்று நடைபெற்றது. யாழ் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வுச் செயலமர்வில் யாழ். மாநகரத்துக்குட்பட்ட கிராம அலுவலர்கள், பிரதேச செயலர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள், சமூக அமைப்பைச் சேர்ந்தவர்கள் பலர் கலந்து கொண்டனர். (வ-10)

## வட்டக்கச்சி மருத்துவமனை வீதி புனரமைப்புப் பணிகள் இடைநடுவில்

கிளிநொச்சி, ஏப்.26

வட்டக்கச்சி மருத்துவமனை வீதியின் புனரமைப்புப் பணிகள் இதுவரை நிறைவடையாததால் மருத்துவமனை செல்லும் நோயாளிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த மருத்துவமனை வீதி கடந்த 2013 ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைப்புக்காகத் தெரிவு செய்யப்பட்டு, புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இன்றுவரை அந்தப் பணிகள் நிறைவடைய வில்லை. இதனால் குறித்த வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள், மருத்துவமனைக்குச் செல்வோர் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.



புனரமைப்புக்காக கற்கள் கொட்டப்பட்ட நிலையில்

குறித்த வீதி 2013 ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபா செலவில் 1.1 கிலோமீற்றர் தூரம் தாரிட்டு புனரமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தபோதும் ஆறு மாத காலத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வேலை இடை நடுவில் கைவிடப்பட்டுள்ளன.

குறித்த வீதியின் புனரமைப்புப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர் சுவீஸ்கரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது;

குறித்த வீதி கரைச்சி பிரதேச சபைக்குச் சொந்தமான வீதி. எனினும் புனரமைப்புப் பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை. அதையடுத்து வீதி அபிவிருத்தி அதிகார சபை அதனைப் பரிசோதித்து உரிய முறையில் புனரமைக்கப்படாததால், கிரவல் மண்ணை உரிய முறையில் போட்டு முறைப்படி புனரமைக்குமாறு அறிக்கை சமர்ப்பித்தது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பரிந்துரைக்க மைய புனரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் நடைபெற்ற பிரதேச சபை அமர்வுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோதும், அது இதுவரை பிரதேச சபையினால் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். (வ-55)

### சவூதி விபத்தில் இலங்கைச் சிறுமி உயிரிழப்பு

சவூதி அரேபியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கைச் சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

மொஹமட் பாத்திமா என்ற தம்பதியினர், தமது மூன்றுபிள்ளைகளுடன் ஜப்பான் நாட்டில் இருந்து புனித மக்காவுக்கு யாத்திரை சென்றிருந்தனர்.

இந்தநிலையில், அவர்களின் 6 வயதான சிறுமி விபத்தில் உயிரிழந்துள்ளதுடன், பாத்திமா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். உயிரிழந்த சிறுமியின் சடலத்தை காசிம் நகரில் அடக்கம் செய்ய அனுமதி வழங்கியதாக இலங்கைத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (வ)

# நெடுந்தீவு சென்ற கூட்டமைப்பு உறுப்பினர்களை நோட்டமிட்ட புலனாய்வாளர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.26

நெடுந்தீவு மக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகள், அபிவிருத்தி தொடர்பான விடயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக நெடுந்தீவுக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை குறிகாட்டுவானில் இருந்து சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களைக் கண்காணிக்கும் வகையில் புலனாய்வுப் பிரிவினர் பின் தொடர்ந்துள்ளனர்.

குறிகாட்டுவானில் இருந்து புலனாய்வுப் பிரிவினர் நெடுந்தீவுக்குச் சென்று கூட்டமைப்பு உறுப்பினர்கள்கலந்து கொண்ட நிகழ்வுகளுக்கும் பின் தொடர்ந்ததுடன் மீண்டும் நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் வரை படகில் பின் தொடர்ந்ததாகக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

**நெடுந்தீவு அபிவிருத்திக்கு வழங்கிய நிதி மாயம்**

இதேவேளை நெடுந்தீவில் கடலரிப்பு தடுப்பு அணை, மீன்பிடித் துறைமுகம் ஆகியவை அமைக்க வென வழங்கப்பட்ட ஒருகோடி 30 லட்சம் ரூபா நிதிக்கு என்ன நடந்தது என்பது தெரிய வில்லை. இது தொடர்பான எந்தவிதமான் பணிகளும் ஆரம்பிக்கப்படவும் இல்லை என்று மீனவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடமும் வடக்கு மாகாண அமைச்சர்கள் பா.டெனீஸ்வரன், ப.சத்தியலிங்கம் மற்றும் மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், இ.ஆனல்ட் ஆகியோரிடம் தெரி வித்தனர்.

நேற்று முன்தினம் நெடுந்தீவுக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர், வடக்கு மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பொது மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகள், தேவைகளைக் கேட்டறிந்தனர்.

இதன்போது: நூறுகோடி அபிவிருத்தி என்று வெறுமனே கட்டடங்களை அமைக்கின்றனர். அவற்றால் மக்கள் எதுவித பயன்களையும் பெறப் போவதில்லை. இன்று மக்கள் வறுமையால் சாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்க அவர்களுக்குத் தேவையான வாழ்வாதார உதவிகளை வழங்காது கட்டடங்களை அமைப்பதால் என்ன பயன் என்று கேள்வி எழுப்பினர் மக்கள்.

மீனவர்கள் தொழில் செய்ய முடியாதுள்ளது. படித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்களில் பாரபட்சம் காட்டப்படுகிறது. ஒரு பகுதி மக்களுக் கான நீர் விநியோகத்துக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதுபோன்ற பாகுபாடுகள் நிறுத்தப்பட்டு நெடுந்தீவின் அனைத்து மக்களுமே பயன் படக் கூடியதாக அபிவிருத்தித் திட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட வேண்டும். இவை தொடர்பில் உரிய நடவடிக்கை தேவை என்றும் வலியுறுத்தப்பட்டது. இதேவேளை கடலரிப்பு தடுப்பணைக்காக ஒதுக்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது என்பது குறித்து கண்டறிய தாம் நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார். அபிவிருத்தி எல்லா மக்களுக்குமானது. அதில் நாம் கவனம்செலுத்துவோம்என்று உறுப்பினர்கள் தெரிவித்தனர். (வ-7)

## காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் குற்றச் செயல்கள் மிகக் குறைவே

### யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 26

காங்கேசன்துறைப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் உள்ள 8 பொலிஸ் நிலையங்களிலும் கடந்த வாரம் குற்றச்செயல்கள் குறித்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்து காணப்பட்டதாகவும் 2 திருட்டுக்களே கடந்த வாரம் இடம்பெற்றுள்ளதாகவும் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமல சேன தெரி வித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

காங்கேசன் துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவிட்டபுரம் கந்தசுவாமிஆலயத்தின் உண்டியல் கடந்த 16 ம் திகதி திருடப்பட்டள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் கடந்த 16 ஆம் திகதி தொலைபேசி திருத்தும் கடை ஒன்று உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டிருந்தது. அவற்றைத் தவிர அங்கு வேறு எந்தத் திருட்டுக் களோ கொள்ளைகளோ இடம் பெறவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-4-86)

# அழைத்தும் சந்திக்க தவறிய நெடுந்தீவு மீனவ நிர்வாகிகள்

## வடமாகாண மீன்பிடி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.26

நெடுந்தீவில் மீனவர்களுடனான சந்திப்பொன்றில் கலந்து கொள்ளுமாறு நெடுந்தீவு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தும், மீனவர் சங்கத் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் எவரும் அதில் கலந்து கொள்ளவில்லை என்று வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

மீனவர்களின் பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவும், ஏனைய அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடவும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நெடுந்தீவுக்குச் சென்ற வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர், நெடுந்தீவு 11 ஆம் வட்டாரத்தில் மீனவர்களைச் சந்தித்தார்.

அந்தச் சந்திப்பில் மீன்பிடிச் சங்கங்கள் சமாசத்தின் நிர்வாகிகள் எவரும் கலந்து கொள்ளாத நிலையில் சமுகமளித்திருந்த மீனவர்களிடம் அவர்களது பிரச்சினைகள் குறித்துக் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

இதேவேளை மீன்பிடிச் சங்கங்கள் சமாசத்தின் பிரதிநிதிகள் சந்திப்பின் போது கலந்து கொள்ளாததற்கு ஆளும் கட்சி ஆதரவாளரான யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே காரணம்.

மீனவர்களை இந்தச் சந்திப்புக்குச் செல்ல வேண்டாம் என்று மீன்பிடிச் சங்கங்களினூடாக மீனவர்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அச்சுறுத்தல் காரணமாகவே பெருமளவு மீனவர்கள் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ-7)

## ரூ.12 லட்சம் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன


### கடந்த வாரத்தில் மட்டும்

யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த வாரம் சுமார் 12 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விம லசேன தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரியாலை அம்மன் வீதியில் வீடு புகுந்து 8 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. மற்றொரு இடத்தில் கடையொன்று உடைக்கப்பட்டு 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் கே.கே. எஸ்வீதியில் கடையொன்று உடைக்கப்பட்டு 16 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. ஊர்காவற்றுறை மண் கும்பானில் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 மாடுகளும் வட்டுக்கோட்டையில் 15 ஆயிரம்ரூபாபெறுமதியானஒருமாடும் திருடப்பட்டுள்ளன என்று அவர் மேலும்தெரிவித்தார்.(வ-4-86)



நல்லூர் பிரதேச சபையால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கொக்குவில் பொதுச் சந்தை அடுத்த மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.40 மணிக்கு திறந்து வைக்கப்படும் என்று பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார். வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் புதிய சந்தைக் கட்டடத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கவுள்ளனர். (ஒ-17)

## நகை திருடியவர் கைது

தென்மராட்சி, ஏப்.26

கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில்வீட்டொன்றினுள்புகுந்து 21 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான தங்க நகையைத் திருடிய நபரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபரை கடந்த புதன் கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது 25 ஆயிரம் ரூபா பெறு மதியான இரு ஆள்பிணையில் செல்ல உத்தரவிடப்பட்டது. (வ-9)

## அனுமதியின்றி மரம் தறித்தோர் மாட்டினர்



தென்மராட்சி, ஏப்.26

வரணிப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி பனை மரங்கள் தறித்த இருவர் கொடிகாமம் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

பொது மக்கள் கொடுத்த தகவலை அடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸார் இருவரையும் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் குறித்த இருவரையும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டார். (வ-9)

## மாணவருக்குக் குறைந்த கட்டணத்தில் நிழற் பிரதி

### சாவகச்சேரி பொது நூலகத்தில் ஏற்பாடு

தென்மராட்சி, ஏப்.26

சாவகச்சேரி நகர சபை பொது நூலகத்துக்கு வழங்கப்பட்ட நிழற்படப் பிரதி இயந்திரத்தில் மாணவர்களுக்குத் தேவையான பிரதிகளை குறைந்த கட்டணத்தில் செய்து வழங்க நகர சபையால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொது நூலக உடனுதவும் பகுதியில் வழங்கும் நூல்களில் மாணவர்கள் தமக்குத் தேவையான பகுதியை நிழற் படப் பிரதி செய்து பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்;

இதுவரை காலமும் மாணவர்கள் உடனுதவும் பகுதியில் நூல்களைப் பெற்று தமக்குத் தேவையான பகுதிகளை எழுதிக் கொண்டு சென்றனர். புதன்கிழமை தென்மராட்சி அபிவிருத்திச் சங்க லண்டன் கிளையினர் பொது நூலகத்துக்கு நிழற் படப் பிரதி இயந்திரமொன்றை வழங்கியதையடுத்து மாணவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் சேவை களை வழங்கவுள்ளோம் -என்றார். (வ-9)

## பருத்தித்துறை மருத்துவமனையில் சேவைகள் திருப்திகரமான நிலையில்

வடமராட்சி, ஏப்.26


பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு நோயாளர்களை சிகிச்சைக்காக இடம்மாற்றும் வீதம் கடந்த 7 வருடங்களில் படிப்படியாக குறைவடைந்துள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு மேலதிக சிகிச்சைகளுக்காக 18.5 வீத நோயாளர்கள் யாழ். போதனா மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். 2008 ஆம் ஆண்டில் இது 12 வீதமாகவும், 2009 ஆம் ஆண்டில் 12.8 வீதமாகவும், 2010 ஆம் ஆண்டில் 11.1 வீதமாகவும், 2011 ஆம் ஆண்டில் 12.3 வீதமாகவும்,2012 ஆம் ஆண்டில் 9.1 வீதமாகவும், 2013 ஆம் ஆண்டில் 8.2 வீதமாகவும் நோயாளர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்ததாக பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனையில் புள்ளி விவரங்கள் தெரிவித்துள் ளன.

பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனை பௌதிக வளங்கள் அதிகரிப்பும், மருத்துவர்களின் அதிகரிப்பைத் தொடர்ந்து மருத்துவ சேவைகள் தகுந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாலும் மேலதிக சிகிச்சைக்காக நோயா ளர்களை யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக் கும் வீதம் குறைவடைந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-173)

# மோடி அலை எங்கும் இல்லை

## பிரதமர் மன்மோகன் சிங்



புதுடில்லி,ஏப் 26
தேசத்தில் 'மோடி அலை' வீச வில்லை. அப்படி ஒன்று இருப்பதாக ஊடகங்கள் மிகைப் படுத்துகின்றன எனப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித் துள்ளார்.

அசாம் மாநிலம் திஸ்பூர் அரசுப் பள்ளியில் தனது மனைவி குர்சரன் கவுருடன் பிரதமர் மன்மோகன் சிங் வாக்களித் தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்: தேசத்தில் 'மோடி அலை' வீசவில்லை. அப்படி ஒன்று இருப்பதாக ஊடகங் கள் மிகைப்படுத்துகின்றன. காங்கிரஸ் கட்சி தேர்தலில் தோற்றுவிடும் எனக் கூறப் படுகிறது. அதற்கு சாத்தியம் இல்லை. மே 16ஆம் திகதி தேர்தல் முடிவுகள் வரை காத்திருங்கள்.

காங்கிரஸ் பெரும்பான்மை பெறும். நாட்டு மக்கள் அனை வரும் தேர்தலில் வாக்களித்து ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும் என்றார்.

முன்னதாக லோகபிரியா கோபிநாத் பொர்டோலி சர்வ தேச விமான நிலையத்துக்கு வந்த பிரதமர் மன்மோகன் சிங் அங்கிருந்து ஹெலி மூலம் கனபாரா சென்றார். அங்கு, அசாம் முதல்வர் தருண் கோகோய், அசாம் காங்கிரஸ் தலைவர் புவனேஸ்வர் கல்டியா ஆகி யோர் பிரதமரை வரவேற்ற னர். அங்கிருந்து வாக்குச் சாவடிக்குக் காரில் சென்றார். (து)

# தமிழகத்தில் 73 %, புதுச்சேரியில் 83% அமைதியாக நடந்தது வாக்குப் பதிவு

சென்னை,ஏப். 26
மக்களவைத் தேர்தலில் தமிழ கத்தில் 72.8 சதவீத வாக்குக ளும் புதுச்சேரியில் 83 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன. வாக்குப் பதிவு விறு விறுப்பாக வும் அமைதியாகவும் நடந்த தாக தகவல்கள் தெரிவிக்கின் றன.

தமிழகத்தில் உள்ள 39 தொகு திகள் மற்றும் புதுச்சேரியில் உள்ள ஒரு தொகுதி உள்ளிட்ட 40மக்களவைத்தொகுதிகளுக்கு கடந்த வியாழக்கிழமை ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெற் றது. தமிழகத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு மக்கள வைத் தேர்தலில் பதிவான வாக்கு விகிதத்துக்கு (72.46 சதவீதம்) ஓரளவு இணை யாக இந்த முறையும் 72.8 சதவீத வாக்குகள் பதிவாகியுள் ளன. தபால் வாக்குகளின் எண்ணிக்கை கணக்கிடப்பட வேண்டியிருப்பதால் இது 74 சதவீதம் வரை உயரக்கூடும் என்று சொல்லப்படுகிறது.

புதுச்சேரியில் 83 சதவீத வாக்கு கள் பதிவாகியுள்ளன. கடந்த 2009 ஆம் ஆண்டு மக்கள வைத் தேர்தலில் புதுவையில் 79.70 சதவீத வாக்குகளும் பதிவாகியிருந்தன. அதனுடன் ஒப்பிடுகையில் வாக்குப் பதிவு 3சதவீதம்அதிகமாகும்.

சென்னை ஆலந்தூர் சட்டப் பேரவை தொகு திக்கு நடை பெற்ற இடைத் தேர்தலில் 63.98 சதவீத வாக் குகள் பதி வாகியுள்ளன.

வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் சீலிடப்பட்டு அந் தந்த மாவட்டங்களில் குறிப் பிட்ட இடங்களில் பாதுகாப்பு டன் வைக்க ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன. வாக்கு எண் ணும் பணி எதிர்வரும் மே 16 ஆம் திகதி நடைபெறுகிறது. இந்தத் தகவலை தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை இரவு நடந்த செய்தியாளர்கள் சந்திப்பின்போது தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி பிரவீண்குமார் வெளியிட்டார்.

### தருமபுரிக்கு முதலிடம் பின்தங்கிய தென் சென்னை:

தமிழகத்திலேயே தருமபுரி யில் அதிகபட்சமாக 81 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. குறைந்த அளவாக தென் சென்னை தொகுதியில் 57.86 சதவீத வாக்குகள் மட்டுமே பதி வாகியுள்ளன. கடந்த 2009 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுடன் ஒப்பிடும்போது தென் சென்னை மக்களவைத் தொகுதியில் இந்த முறை வாக்குப் பதிவு விகிதம் 5 சத வீதம் குறைந்துள்ளது.

### தேர்தலைப் புறக்கணித்த 5 கிராமங்கள்

குடிதண்ணீர் உள்ளிட்ட அடிப் படை வசதிகளை அரசு நிறை வேற்றித் தர வேண்டும் என்று கோரி தமிழகத்தில் உள்ள 5 கிராமங்களைச் சேர்ந்த 2,780 வாக்காளர்கள் வாக்குப்பதிவை கடந்த வியாழக்கிழமை புறக் கணித்தனர். திண்டுக்கல் மாவட்டம், காரியாம்பட்டி, ஈரோடு மாவட்டம், மருதூர், கிருஷ்ணகிரி மாவட்டம், ஏக் கல் நத்தம், அரியலூர் மாவட் டம், கருவிடைச்சேரி, அரக்கோ ணம் உரியூர் ஆகிய ஐந்து கிராமங்களைச் சேர்ந்த மொத் தம் 2,780 வாக்காளர்கள் தேர்தலைப் புறக்கணித்தனர்.

### சென்னை தொகுதிகள் மந்தம்

சென்னைக்கு உட்பட வட சென்னை, மத்திய சென்னை, தென் சென்னை ஆகிய மூன்று மக்களவைத் தொகுதிகளிலும் வாக்குப் பதிவு விகிதம், தமி ழகத்தின் பிற தொகுதிகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறை வாக இருந்தது. அதாவது, வட சென்னையில் 64.63 சதவீதம் (2009 இல் 63.5 சதவீதம்), மத் திய சென்னை 60.90 சத வீதம் (2009 இல் 61.13 சத வீதம்), தென் சென்னை 57.86 சதவீதம் (63 சதவீதம்) என வாக்குகள் பதிவாகியுள்ளன.(து)

# மோடி ஒரு ஹிட்லர்

## நடிகர் சிரஞ்சீவி காட்டம்



நடிகர் சிரஞ்சீவி

ஆந்திரா,ஏப் 26
தனது முன்னேற்றத்துக்காகக் கட்சியின் மூத்த தலைவர் களை ஓரம் கட்டிய பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந் திரமோடி ஒரு ஹிட்லர் என ஆந்திர மாநிலத்தின் காங் கிரஸ் பிரசாரக் குழுத் தலை வர் சிரஞ்சீவி கூறியுள்ளார்.

விசாகபட்டினத்தில் அவர் அளித்த பேட்டியில் கூறிய தாவது:-

மோடி ஒரு ஹிட்லர். அவர் தனது சுயநலத்துக்காக கட்சி யின் மூத்த தலைவர்களை ஓரம் கட்டினார். அவர் பிரதம ரானால், தொழிலதிபர்கள் நாட்டை ஆட்சி செய்வர். சாதா ரண மக்களுக்கு எந்த இட மும் இல்லை. அவருடன் சந் திரபாபு நாயுடு எப்படி கூட்டு சேர்ந்தார்?

கடந்த 2004ஆம் ஆண்டு பா.ஜ.க மீது குற்றம் சுமத்தி தே.ஜ.க கூட்டணியில் இருந்து விலகியவர்தான் இந்தச் சந் திரபாபு நாயுடு. பா.ஜ.கவுடன் கூட்டு வைத்தது வரலாற்றுப் பிழை என்றார். தற்போது பா.ஜ.கவுடன் மீண்டும் கூட் டணி சேர்ந்துள்ளார்.

வை.எஸ்.ஆர் காங்கிரஸ் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி, சந்திரபாபு நாயுடு ஆகியோர் சட்டசபை மற்றும் மக்களவைத் தொகுதி இடங் களை விற்றுள்ளனர். பணத் தைப் பெற்றுக்கொண்டு வேட் பாளர்களை நிறுத்தியுள்ள னர். பணம் மூலம் ஆட்சிக்கு வர முயற்சிக்கின்றனர். ஆட் சியைக் கைப்பற்ற அவர்கள் வெறித்தனமாக இருக்கின்றனர்.

மேலும் இந்தியாவின் ஒட்டு மொத்த வளர்ச்சியில் குஜராத் மாநிலம் 8ஆவது இடத்தில் உள்ளது என்றும் காங்கிர சுக்கு வீழ்ச்சி என்ற தேர்தல் கருத்து கணிப்புகள் எல்லாம் மக்களை திசை திருப்புவதற் காகச் சில கட்சிகள் செய்த ஏற் பாடு எனவும் கூறியுள்ளார்.(து)

# தயாளு அம்மாள் மீதும் குற்றப்பத்திரிகை தாக்கல்

## 2-ஜி முறைகேடு வழக்கில்

புதுடில்லி,ஏப் 26
2-ஜி ஸ்பெக்டரம் முறைகேடு வழக்கில், முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா, 'கனி மொழி உள்ளிட்டோருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.



கனிமொழியுடன் தயாளு அம்மாள்

2-ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கு, டில்லி பாட்டியாலா ஹவுசில் உள்ள சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இந்த நிலையில், அமுலாக்கத் துறை நேற்று குற்றப்பத்திரி கையை நீதிமன்றத்தில் தாக் கல் செய்தது. அதில், முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா, தி.மு.க நாடாளுமன்ற உறுப் பினர் கனிமொழி, ஸ்வான் ரெலிகாம் முகாமையாளர் ஷாகித் பால்வா ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அவர்களுடன், இந்த வழக்கில் தி.மு.க தலைவர் கருணாநிதி யின் மனைவி தயாளு அம் மாள், கலைஞர் தொலைக்காட் சியின் சரத்குமார் உட்பட மொத்தம் 19 பேர் குற்றம் சாட்டப்பட்டவர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

ஸ்வான் ரெலிகாம் நிறுவனம் ரூபா 200 கோடி தொகையை, கலைஞர் டிவி நிறுவனத்துக்கு அளித்ததாகக் குற்றப்பத்திரி கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்தக் குற்றப்பத்திரிகையை ஏற்பதா அல்லது வேண்டாமா என்பது குறித்து டில்லி நீதி மன்றம் இம் மாதம் 30ஆம் திகதி முடிவு எடுக்கும்.

முன்னதாக, இந்த வழக்கில் மத்திய தொலைத்தொடர்புத் துறை முன்னாள் அமைச்சர் ஆ.ராசா, தி.மு.க நாடாளு மன்ற உறுப்பினர் கனிமொழி உள்ளிட்டோர் நீதிபதி ஓ.பி.சைனி முன்பு முன்னிலையாகி, வாக்குமூலம் அளிப்பதாக இருந்தது.

இந்த வழக்கு கடந்த திங்கட் கிழமை விசாரணைக்கு வந்தபோது, ராசா, கனிமொழி தரப்பில் முன்னிலையான வழக்கறிஞர் விஜய் அகர்வால், வாக்குமூலத்தை எழுத்து வடிவில் பதிவு செய்ய கூடுதல் அவகாசம் கேட்டார்.

நீதிமன்றம் தரப்பில் தரப்பட் டுள்ள 824 பக்கங்களில் உள்ள 1,718 கேள்விகளுக் குப் பதிலளிக்க வேண்டும் மற்றும் தேர்தல் பிரசாரம் நடைபெறுவதால் கால அவ காசம் அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டார். அதற்கு சம்மதித்த நீதிபதி ஓ.பி.சைனி, இனிமேல் அவகாசம் கேட்க கூடாது என்று எச்சரித்து வழக் கினை ஒத்திவைத்தமை குறிப்பிடத்தக்கது. (து)

# தி.மு.கவுக்கு வெற்றி பிரகாசமாக உள்ளது

## கருணாநிதி கூறுகிறார்



சென்னை,ஏப் 26
மக்களவைத் தேர்தலில் தி.மு.கவுக்கு வெற்றி வாய்ப் புப் பிரகாசமாக இருப்பதாக அந்தக் கட்சித் தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

தி.மு.க. தலைவர் கருணா நிதி, மத்திய சென்னை தொகு திக்கு உட்பட்ட கோபாலபுரம் சாரதா பள்ளியில் தனது வாக்கை பதிவு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசியதாவது:

மக்களவைத் தேர்தலில் தி.மு.கவுக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாக இருக்கிறது என நம்புகிறேன். இந்தத் தேர்தல் ... கவுக்குச் சாதகமாக இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். கடந்த முறை பெற்றதைவிட அதிக மான இடங்களை தி.மு.க. பெறும். அ.தி.மு.க. பணத்தில் புரளுகிற கட்சி. எனவே அவர்கள் பணம் வழங்கு கிறார்கள். தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறி அ.தி.மு.கவினர் வாக்காளர் களுக்கு பணம் வழங்கப் படுவதாகத் தேர்தல் ஆணை யத்திடம் பலமுறை முறைப் பாடு செய்யப்பட்டது. ஆனால் தேர்தல் ஆணையம் எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை என்றார். (து)

# வாக்களிக்க தடுமாறிய விஜயகாந்த் ஓடி வந்தார் மனைவி பிரேமலதா

சென்னை,ஏப் 26
தே.மு.தி.க தலைவர் விஜய காந்த் வாக்களிக்கத் திண றியதால் அவரது மனைவி பிரேமலதா உதவியுள்ளார்.

சென்னை, சாலிகிராமம் காவேரி மேல் நிலைப் பள் ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடிக்கு, விஜய காந்த் வாக்களிக்கச் சென்றார். மனைவி பிரேமலதா, மகன் கள் பிரபாகரன், சண்முக பாண்டியன் ஆகியோர் உடன் சென்றனர்.

பிரேமலதாவும், இரு மகன் களும் முதலில் வாக்குப் போட்டனர். கடைசியாக சென்ற விஜயகாந்த், சின்னம் சரியாகத் தெரியாததால் தடு மாறினார்.

**கண்ணாடியைக் கழற்றிப் பார்த்த பிறகும் அவருக்குக் குழப்பம் தீராததால் சில விநாடிகள் யோசித்தபடியே நின்றார்.**

கண்ணாடியைக் கழற்றிப் பார்த்த பிறகும், அவருக்குக் குழப்பம் தீராததால், சில விநாடிகள் யோசித்தபடியே நின்றார்.

இதையடுத்து, அருகே சென்ற பிரேமலதா, விஜயகாந்துக்குச் சின்னத்தைச் சுட்டிக் காட்டி வாக்களிக்க உதவினார். அதற்குள் அங்கிருந்த பெண் தேர்தல் அதிகாரி, தனித்தனி யாகச் சென்று வாக்களிக்க வேண்டும் என விஜயகாந்தி டம் கூறியுள்ளார். அவரிடம், நடந்ததை விளக்கிய விஜய காந்த், அதன்பிறகு வாக்குச் சாவடியில் இருந்து குடும்பத் தினருடன் வெளியேறினார். (து)

## ஒபாமாவை மிரட்டும் வடகொரியா

பியோங்யாங்,ஏப். 26
ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வரும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்று தென் கொரியாவைச் சென்றடைந்தார்.

இந்த நிலையில், அவர் சென்றடைவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்பு, வடகொரியா தனது நான்காவது அணு ஆயுதச் சோதனைக்குத் தயாராகி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அணு ஆயுத சோதனை மேற்கொள்வதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகக் கூறப்படும் வட கொரியாவின் முக்கிய அணுச் சோதனை மையம், கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னதாகச் செயற்கை கோளிலிருந்து பெறப்பட்ட புதிய புகைப்படங்களில் தென்படுவதாக அமெரிக்க- கொரிய கல்வி நிறுவனமான ஜான் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ஒபாமா சியோலுக்கு வருகை தரும் நேரத்தில் வெளியாகியுள்ள இந்தத் தகவல் அங்கு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (த)

## இராணுவப் பெண்களுடன் வடகொரியத் தலைவர்



வடகொரிய தலைவர் கிம் ஜாங்

பிஜோங்ஜாங்,ஏப். 26
வட கொரியா தலைவரைப் பார்த்த இராணுவப் பெண்கள் கட்டித் தழுவி அவரை கண்ணீரால் நனைத்துள்ளனர்.


வட கொரியாவின் தலைவர் கிம் ஜாங், பெண்களின் மத்தியில் எவ்வளவு பிரபலமாக உள்ளார் என்பதை மறுபடியும் நிரூபித்துள்ளார்.

கிம் ஜாங், தென் கொரியா எல்லையில் உள்ள கங்குவான் இராணுவ மகாணத்துக்குச் சென்றபோது அங்குள்ள இராணுவப் பெண்மணிகள் அவரைப் பார்த்த மகிழ்ச்சியில் அவரைக் கட்டித் தழுவி அழுதுள்ளனர்.

மேலும் அவர், இராணுவப் பெண்மணிகள் நடத்திய தீயணைப்புப் பயிற்சியை கண்டுகளித்துள்ளார்.

இந்நிலையில், அமெரிக்க அதிபர் ஒபாமா வடகொரியாவின் சியோல் பகுதிக்கு வரவிருக்கிறார்.

அப்போது ஒபாமாவுடன், கிம் ஜாங் அணுசக்தி ஒப்பந்தம் குறித்து பேச்சு நடத்தவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது. (த)



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது ஆசியப் பயணத்தின்போது நேற்று வடகொரியாவைச் சென்றடைந்தார். அவருக்கு சியோலில் ஜனாதிபதி மாளிகையில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. வடகொரிய ஜனாதிபதி பார்க் ஜெகுன் ஜே அவரை வரவேற்றார். (த)

# போதையில் பயணி கலாட்டா; ஆஸி. விமானம் தரையிறக்கம்

## கடத்தல் எனப் பரவிய செய்தியால் பரபரப்பு

அவசரமாகத் தரையிறக்கப்பட்ட விமானம்




கான்பரா,ஏப். 26
ஆஸ்திரேலியாவிலிருந்து புறப்பட்ட வேர்ஜின் நிறுவனத்தின் விமானம் கடத்தப்படவில்லை எனவும் மதுபோதையிலிருந்த பயணியொருவர் விமானியின் அறைக்குள் நுழைய முயற்சித்ததால் குழப்பம் ஏற்பட்டதாகவும் வேர்ஜின் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவிலின் பிரிஸ்பேன் நகரிலிருந்து பாலி தீவுக்குச்சென்ற விமானமொன்று அவசரமாக தரையிறங்க நிர்ப்பந்திக்கப்பட்டதாக ஆஸ்திரேலிய விமானப் படை பேச்சாளர் ஹாதி ஜஹாஜன்டோ, அந்நாட்டு தொலைக் காட்சியொன்றுக்குத் தெரிவித்திருந்தார்.

விமானம் கடத்தப்பட்டுள்ளதாக விமானி சமிக்ஞை தெரிவித்தார் என இந்தோனேஷிய போக்குவரத்து அமைச்சு அதிகாரியொருவரும் கூறினார்.

ஆனால், மதுபோதையில் பயணியொருவர் ஒழுங்கீனமாக நடந்துகொண்ட சம்பவமே இடம்பெற்றதாக வேர்ஜின் ஆஸ்திரேலியா நிறுவனத்தின் அதிகாரியான ஹெரு சுஜாத்மிகோ தெரிவித்துள்ளார்.

அதிக மதுபோதையிலிருந்த மேற்படி பயணி கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, விமானம் கடத்தப்பட்டுள்ளதாக இந்தோனேஷிய இராணுவத்தினர் தகவல் வெளியிடவும் இந்தப் பயணியே காரணமாகியுள்ளார்.

குறித்த பயணி மதுபோதையில் இருந்ததாகவும் விமானிகளின் கட்டுப்பாட்டு அறையின் கதவை ஓங்கித் தட்டியதாகவும் அதன் பின்னர் அந்தப் பயணி மடக்கிப் பிடிக்கப்பட்டதாகவும் வேர்ஜின் விமான சேவையின் பேச்சாளர் ஒருவர் கூறினார். இந்தத் தகவல் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டமையே விமானம் கடத்தப்பட்டதாக முன்னதாக செய்திகள் வரக் காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

விமானம் பாலியில் தரையிறங்கியபோது, விமானத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த இராணுவத்தினர் பயணிகளையும் பணியாளர்களையும் வெளியேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## ஒபாமாவை உதைபந்து ஆட அழைத்த ரோபோ

ரோக்கியோ,ஏப். 26
ஜப்பானில் உள்ள அறிவியல் கண்காட்சியில் அமெரிக்க அதிபர் ஒபாமா ரோபோவுடன் விளையாடியுள்ளார்.

அமெரிக்க அதிபர் ஒபாமா, தனது ஆசியப் பயணத்தின் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் ஜப்பானுக்கு சென்ற அவர், ரோக்கியோவில் நடந்த 'மிரைகான்' அறிவியல் கண்காட்சியை பார்வையிட்டார். அங்கு 'ஹொண்டா' நிறுவனம் தயாரித்துள்ள மனிதனைப்போன்றே ஓடி, ஆடி, குதித்து விளையாடும் 'அசிமோ' என்ற ரோபோ கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது.

அது பார்ப்பதற்கு 10 வயது குழந்தை ஒன்று விண்வெளி வீரரின் உடையை அணிந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது. அதிபர் ஒபாமாவைக் கண்டதும் அந்த ரோபோ ஜப்பான் நாட்டு முறையில் தலையை குனிந்து வணக்கம் தெரிவித்தது.



ரோபோவுடன் விளையாடும் ஒபாமா

இதைக் கண்டு ஆச்சரியமடைந்த அதிபர் ஒபாமா, உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி என்று அந்த ரோபோவைப் பார்த்து கூறினார். இதைக் கேட்டவுடன் அந்த ரோபோ எனக்கும் உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி என்று கூறி அவரை வரவேற்றது. மேலும் ஆச்சரியமடைந்த ஒபாமா, என்னால் உதைபந்தை எட்டி உதைக்க முடியும் என்று ரோபோவிடம் கூறியுள்ளார். உடனே என்னாலும் உதைபந்தை உதைக்க முடியும் என்று ரோபோ பதிலளித்தது. அப்படியென்றால் 'விளையாடு பார்க்கலாம்' என்று ஒபாமா சொல்ல, உடனே அந்த ரோபோ ஒரு பந்தை எடுத்து ஒபாமாவை நோக்கி செல்லும் விதத்தில் தனது காலால் எட்டி உதைத்தது. அவரும் ரோபோவுடன் விளையாடினார். சிறிது நேரத்துக்குப் பிறகு, அங்குள்ள மாணவர்களிடம் கலந்துரையாடிய ஒபாமா, உயிருள்ள மனிதர்களை போலவே ரோபோக்கள் இவ்வாறு விளையாடுவது ஆச்சரியமாக இருந்தாலும் சிறிது பயமாகவும் இருக்கிறது என்று கூறியுள்ளார். (த)

## ஒன்பதாம் வார வெற்றியாளர்கள் (20.04.2014)

# வாரம் 50 பரிசுகள்

பரிசு மழை யில் நனையுங்கள்

உதயன் சூரியகாந்தி

## ESOFT METRO CAMPUS Jaffna. 10,000/=

15 பெறுமதியான பரிசு கூப்பன்கள்

**01. பிரம்மஸ்ரீ கணபதி சுவாக்குரு சுதர்சனக்குரு,**
சிவன்கோவிலடி, ஆவரங்கால், புத்தூர்.
**02. சிறீதரன் பிரதீசன்,**
20/4, சிவகுருநாதர் லேன், பிறவுண்றோட், யாழ்ப்பாணம்.
**03. திருமதி ஜீ.சுகிர்தா,**
30, சங்கிலியன் வீதி, நல்லூர்.
**04. வேர்ஜின் ஐஸ்வர்யா றெஜினோல்ட் கிறிஸ்ரோப்பர்,**
3 ஆம் ஒழுங்கை, சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.
**05.தங்கேஸ்வரன் பிரதாப்,**
1 ஆம் வட்டாரம், சுரேஸ்திட்டம், புதுக்குடியிருப்பு.
**06. ஸ்ரீகாந்தன் ரிஷிகேசன்,**
சந்தை வீதி, உடுப்பிட்டி.
**07. ருத்ரா விஜேந்திரன் திவ்யபாரதி,**
இல.4/2, உழவனூர், தருமபுரம், பரந்தன்.
**08. இராசசிங்கம் ஸ்ரீதரன்,**
வற்றாப்பளை, முள்ளியவளை, முல்லைத்தீவு.
**09. செல்வி அன்பழகன் ஜனனி,**
2/1, செல்வநகர், எழுத்தூர், மன்னார்.
**10. இளையதம்பி வீரசிங்கம்,**
இல.9/21, இராசதுரை வீதி, வைரவப்புளியங்குளம்.
**11.சிவசுப்பிரமணியம் சஞ்சயகரன்,**
நெல்லியோடை வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
**12. ஸ்ரீஜெனா ஈஸ்வரதேவன்,**
'இலக்குமிவாசா' பழைய வீதி, கோப்பாய் தெற்கு.
**13. மாணிக்கராசா காஞ்சனா,**
பாலாவி வடக்கு, கொடிகாமம்.
**14. ஜெறாட் ஜெயந்தன் ஜெவ்றி ஜானுஜன்**
'ஜீன் வில்லா', சில்லாலை, பண்டத்தரிப்பு.
**15. அம்பிகைபாகன் நிர்மலன்,**
3 ஆம் கட்டையடி, காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.

## MCS IT CAMPUS 10,000/=

34, Sir Pon Ramanathan Road, Jaffna. 021 222 4070

10 பெறுமதியான பரிசு கூப்பன்கள்

**01. குணசேகரன் லகீசன்,**
வேரவில், பூநகரி.
**02. குணேஸ்வரன் ஜெயகுமாரி,**
'தினைப்புலம்' அல்வாய், மயிலிட்டி.
**03. பரமேஸ்வரன் மாரிமுத்து,**
முதலாம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு.
**04. வரதன் கவி,**
வாரிவளவு, காரைநகர்.
**05. சுவே ஈசன்,**
அனிஞ்சியன்குளம், மல்லாவி.
**06. கணேசன் லோகேஸ்வரன்,**
இலகடி, கோப்பாய் வடக்கு.
**07. செல்லையா இந்திரராசன்,**
செபமாலை மாதாகோவில் வீதி, உடுவில் வடக்கு.
**08. க.ஜெயரத்தினம்,**
தச்சன் தோப்பு, கைதடி.
**09. சுந்தரமூர்த்தி ஜெயகுமார்,**
மட்டுவில் நாடு கிழக்கு, கறுக்காய்ப் பள்ளம், பூநகரி.
**10. சாந்தகுமார் ராதிகா,**
பரமேஸ்வரி பவனம், கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.

## NALIN Information Technologies Pvt Ltd. 5,000/=

பரமேஸ்வராச் சந்தி யாழ்ப்பாணம்.

2 பெறுமதியான பரிசு கூப்பன்

வெற்றி நிச்சயம்

**01. சந்திரசேகரம் சதீசன்,**
கச்சாய் வடக்கு, கொடிகாமம்.
**02. சுதர்சினி வித்யபாலா,**
இல.50, ஜி.பி.எஸ்.வீதி, கல்வியங்காடு.

# வெல்லுங்கள் கொண்டாடுங்கள்

## கிருஷ்ணா ஆவரங்கால் / கனன் போட்டோ பருத்தித்துறை. 200/=

9 பெறுமதியான பரிசு கூப்பன்கள்

**01. பாலசாமி ஈசன்,**
45/2, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
**02. அஜந்தனா திரவியநாதன்,**
மருதங்கேணி தெற்கு, தாளையடி.
**03. நாராயணபிள்ளை சிறீதரன்,**
8 ஆம் வட்டாரம், மண்டைதீவு மேற்கு.
**04. கிருஷ்ணபிள்ளை இந்திராணி,**
55, மணல்தறை ஒழுங்கை, கந்தமர்மடம், யாழ்ப்பாணம்.
**05. துரை குலநாயகம்,**
சித்தன்கேணி.
**06. செல்வி அபிராமி கனகசபை,**
'கலாஜோதி புத்தக நிலையம்', பிரதான வீதி, சங்கானை.
**07. சிவகுமாரன் சம்பூரணி,**
முகாமைத்துவபீடம், 2 ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்.
**08. சிவலிங்கம் குணசேகரன்,**
603, செல்வாநகர், கிளிநொச்சி.
**09. ஞானசம்பந்தன் செந்தமிழ்செல்வன்,**
குப்பிளான் தெற்கு, ஏழாலை.

## 500/=

அபி பேபி மாட்ஸ் 55, கே.கே.எஸ்.வீதி சுன்னாகம்.

அபி என்ரபிறைஸஸ் பிரதான வீதி முல்லைத்தீவு

உதயன் 361, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

14 பெறுமதியான பரிசு கூப்பன்கள்

**01. நாகேஸ்வரன் பவித்ரன்,**
மதவடி ஒழுங்கை, தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.
**02. இராகவன் கார்த்திகா,**
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
**03. துரைசிங்கம் லக்ஸ்மன்,**
நரியிட்டான், மல்லாகம்.
**04. சு.குகாஜினி,**
அம்பன், குடத்தனை.
**05. கிருஷ்ணசாமி இரவீந்திரன்,**
2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.
**06. காமதேனு குமாரகுலசிங்கம்,**
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
**07. மயில்வாகனம் நாகேஸ்வரன்,**
18/1, கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
**08.சதீஸ்கண்ணா ரஸ்மிகா,**
வரணி இயற்றாலை, வரணி.
**09. சடையர் வாரித்தம்பி,**
கைதடி மேற்கு, நேவத்தை.
**10. தேவானந்தன் நந்தரூபி,**
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.
**11. நாவேந்தன் மயூகரன்,**
46/3 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
**12. வசந்தினி செல்வரத்தினம்,**
கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை
**13. சிவ.பத்மயோகன்,**
22/18, விதானை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
**14. தனபாலசிங்கம் ஆராதிகன்,**
18/2, சிவராசா அவனியு, பலாலி வீதி, திருநெல்வேலி.

உதயனுடன் இணைந்திருக்க மறவாதீர்கள்

# பொதுபல சேனாவுக்கு எதிராகத் தீர்மானம்

*முசலி பிரதேச சபையில் நிறைவேற்றம்*

மன்னார் ,ஏப்.26
நாட்டில் இனங்களுக்கிடையில் பிரச்சினையை ஏற்படுத்தி வரும் பொது பல சேனாவின் நடவடிக்கையை கண்டித்து முசலி பிரதேச சபையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கண்டனத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

முசலி, மரைக்கார் தீவில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அவர்களின்சொந்தக்காணியை வழங்க நடவடிக்கை வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்கு மாற்றுக் காணி வழங்கப்பட வேண்டும் என்று தீர்மானம் சபையால் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முசலி பிரதேச சபை தலைவர் எம்.எஹியான் தெரிவித்ததாவது:-

> "முசலி, மரைக்கார் தீவில் மீளக்குடியமர்ந்த் மக்களுக்கு அவர்களின் சொந்தக் காணியை வழங்க நடவடிக்கை வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்கு மாற்றுக் காணி வழங்கப்படவேண்டும்.

கடந்த முறை இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்த மரைக்கார் தீவு மக்களும் முசலி பிரதேசத்தில் உள்ள அனைத்து முஸ்லிம் மக்களும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்குத்தான் வாக்களித்தனர்.

பொது பல சேனாவின் நடவடிக்கையை கட்டுப்படுத்தவில்லை என்றால் மன்னார் மாவட்டத்தில் மட்டுமன்றி இந்த நாட்டிலேயே சுதந்திரக் கட்சி பின்னடைவை சந்திக்க வேண்டி ஏற்படும்.

முசலி பிரதேசத்துக்கு வந்து மரைக்கார் தீவு மக்களை வெளியேறுங்கள் என்று சொல்வதற்கு பொது பல சேனா அமைப்புக்கு என்ன அதிகாரம் உள்ளது.

இந்தக் கண்டன தீர்மானத்தின் பிரதிகள், ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலர் மற்றும் வன்னி அபிவிருத்தி குழு தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆகியோருக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார்.

(ச-56)

## உயிரிழந்த கழுதைகளின் உடல்களை அகற்றவில்லை

*மக்கள் விசனம்*



உயிரிழந்த கழுதைகள்

மன்னார்.ஏப்.26
தலைமன்னார், பிரதான வீதியில் விசேட அதிரடிப் படை முகாமுக்கு அண்மையில் உயிரிழந்த நிலையில் காணப்படும் இரண்டு கழுதைகளின் உடல்களை அகற்ற நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அதனால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்த இரண்டு கழுதைகளின் உடல்களையும் குறித்த இடத்திலிருந்து அப்புறப்படுத்த மூன்று நாள்கள் ஆகியும் மன்னார் நகர சபை இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்த கழுதைகளின் உடற்பாகங்கள் தற்போது பழுதடைந்து துர்நாற்றம் வீசுகிறது. காகங்கள் கழுதைகளின் உடற்பாகங்களை இழுத்து வீதியில் போடுவதால் வீதியால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கூறுகின்றனர்.

இந்த விடயம் குறித்து மன்னார் நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ச)



மன்னார், பெரிய காசல் மக்களுக்கான வீட்டுத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை சவூதி அரேபியாவின் இலங்கைக்கான தூதர் எச்.இ.அப்துல் அசீஸ் அப்துல் ரகுமான் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (ச)



பஸ் இன்றி நடந்து செல்லும் மக்கள்

## பஸ் சேவை இல்லாததால் நடந்து செல்லும் மக்கள்

துணுக்காய், ஏப்.26
துணுக்காயிலுள்ள அமதிபுரம் கிராம மக்கள் பஸ் சேவைகள் இடம்பெறாததால் நடந்து செல்ல வேண்டிய அவல நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

சுமார் 25 குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக் கிராமம் திருமுறிகண்டி - அக்கராயன் வீதியில் அமைந்துள்ளது. மீளக்குடியமர்வு இடம்பெற்ற நாளிலிருந்து இவர்கள் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை திருமுறிகண்டியிலிருந்து அக்கராயன் வரையான 10 கிலோமீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்பட்ட போதிலும் பஸ் சேவை இடம்பெறாமையால் மக்கள் நடந்து செல்ல வேண்டிய அவலநிலை தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## கடந்த ஆண்டில் பாம்பு தீண்டி 530 பேர் சிகிச்சை

கிளிநொச்சி,ஏப்.26
கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் கடந்த ஆண்டு 530 பேர் பாம்பு தீண்டி சிகிச்சை பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாள்களாக பாம்புக்கடிக்கு இலக்காவோர் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த 2013 ஆம் ஆண்டு 530 பேர் இவ்வாறு பாம்புக் கடிக்கு இலக்காகி கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்த தொகையை 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகமாகவே காணப்படு கின்றது. 2012 ஆம் ஆண்டு 283 பேர் பாம்புக்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ச-55)

## வடக்கின் வசந்தத்தின் கீழ் மக்களுக்கு மின்சாரம்

*வட மாகாண சபை உறுப்பினர் நடவடிக்கை*

மன்னார்,ஏப்.26
வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் மன்னார், ஜீவபுரம் கிராம மக்களுக்கு இலவச மின்சார இணைப்பை வழங்குவதற்கு வட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தக் கிராமத்தில் 98 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். எனினும் அவர்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் நீண்ட நாள்களாக குறித்த கிராம மக்கள் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பல்வேறு தரப்பினரிடமும் வேண்டுகோளை முன்வைத்தனர்.

இந்த மக்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து தருவதாக பல்வேறுபட்ட தரப்பினரும் வாக்குறுதிகள் வழங்கியுள்ளனர்.

எனினும் இதுவரை இந்தக் கிராம மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையே காணப்படுகிறது.

இந்த நிலையில் வட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதன் அடிப்படையில் முதற்கட்டமாக 60 குடும்பங்களுக்கு வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் இலவச மின்னிணைப்புகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## இரணைதீவு பிரதேசத்தில் மீள்குடியேற்றம் இல்லை

*கூட்டமைப்பு தெரிவிப்பு*

கிளிநொச்சி, ஏப்.26
தமிழர்களின் பூர்வீக இடமான பூநகரி, இரணைதீவில் ஏன் மக்களை இன்னும் மீள்குடியேற்றம் செய்யவில்லை என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் மிதிவெடி அபாயம் உள்ள இத்தாவில், முகமாலை, வேம்பொடுகேணியின் சில பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளின் மீள்குடியேற்றம் [illegible] ளனஎன்று [illegible] அரச அதி[illegible]

அரச அதிபரின் இந்தக் கருத்தையடுத்து 1990 ஆம் ஆண்டு இரணைதீவிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் இதுவரை ஏன் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர். எனவே இரணைதீவில் மக்களை மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இரணைதீவில் மீள்குடியேற யாரும் இதுவரை அனுமதி கோரவில்லை என்று அரச அதிபர் தெரிவித்தார்.

இரணைதீவிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு மீள்குடியேற்றத்துக்காக முழங்காவில், பகுதியிலுள்ள இரணைமாதா நகர் என்ற கிராமம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இரணைதீவு தமிழர்களின் பூர்வீக நிலம். கடற்றொழிலை வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்ட மக்களே அங்கு வாழ்ந்து வந்துள்ளனர்.

எனவே அங்கு வாழ்ந்த மக்களை அங்கேயே மீள்குடியமர அனுமதித்தால் அவர்கள் மீள்குடியமர்வார்கள் என்று வட மாகாண கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

இரணைதீவு மீள்குடியமர்வு குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச அதிபர் கூறினார். (ச-18)

## கொக்கட்டிச்சோலையில் மீன்பிடியில் பெண்கள்



மீன்பிடிக்கும் பெண்கள்

மட்டக்களப்பு.ஏப்.26
மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்கட்டிச்சோலை பகுதியில் மீன்பிடித் தொழிலில் 60 வயதுக்கும் மேற்பட்ட பெண்கள் மிகவும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
இந்தப் பகுதியில் உள்ள கால்வாய்களிலும் நீரோடைகளிலும் பெண்கள் நீரினுள் மூழ்கி மீன்களை பிடித்து வருகின்றனர். சுமார் 10 வருடங்களுக்கு மேலாக இவர்கள் இவ்வாறு மீன் பிடித்து வருவதாகத் தெரி விக்கப்பட்டது இவ்விதம் தாம் நாளாந்தம் பிடிக்கும் சிறிய மீன்களை 100 முதல் 150 ரூபாவுக்கு விற்பனை செய்து வருவதாக அவர்கள் கூறினர். (ச)

# 8,000 குடும்பங்களுக்கு இன்னும் இல்லை வீடுகள்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் அவல நிலை

மட்டக்களப்பு.ஏப்.26
மட்டக்களப்பு மாவட்டத்தில் அடிக்கடி ஏற்படுகின்ற இடர்களால் மக்களின் வாழ்விடங்கள் பாதிக்கப்படுகின்றன. அதனால் மட்டக்களப்பில் 8 ஆயிரம் குடும்பங்கள் வீடு இல்லாத நிலையில் வாழ்ந்து வருகின்றன.
இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

**சுமார் 23 ஆயிரம் வீடுகளிலே 11 ஆயிரம் வீடுகள் புனரமைத்து மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த வருடம் நாலாயிரத்து நானூறு வீடுகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.**

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த காலங்களில் ஏற்பட்ட மழை, வெள்ளம், போர், சுனாமி ஆகிய இடர்களால் அழிக்கப்பட்ட சுமார் 23 ஆயிரம் வீடுகளிலே 11 ஆயிரம் வீடுகள் புனரமைத்து மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த வருடம் நாலாயிரத்து 400 வீடுகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இதனை விட இன்னமும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டு வீடிழந்து போயுள்ள 8 ஆயிரம் பேருக்கு வீட்டு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது.
இந்திய அரசின் அடுத்த கட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 1500 வீடுகளைக் கட்டிக் கொடுக்க எதிர்பார்த்திருக்கின்றோம் -என்றார். (ச)

# மண்முனைப் பாலத்தில் போக்குவரத்து; நாளொன்றுக்கு ரூ.5000 வருமானம்

மட்டக்களப்பு.ஏப்.26
புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட மண்முனைப் பாலத்தினூடாக கொக்கட்டிச்சோலையிலிருந்து மட்டக்களப்புக்கு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் மூலம் நாளொன்றுக்கு 5000 ரூபா வருமானம் கிடைக்கின்றது.
இவ்வாறு கிழக்கு மாகாண வீதி போக்குவரத்து அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் ருத்திரமூர்த்தி யுவநாதன் தெரிவித்தார்.
கொக்கட்டிச்சோலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையே எட்டு தனியார் பஸ்கள் காலை 5.50 மணி தொடக்கம் மாலை 6.40 மணிவரை பாலத்தினூடாக சேவையில் ஈடுபட்டு வருகின்றன என்று அவர் கூறினார்.
ஒவ்வொரு அரை மணித்தியாலங்களுக்கு ஒரு முறைகொக்கட்டிச்சோலையிலிருந்தும்அதேபோன்று மட்டக்களப்பிலிருந்தும் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.



மண்முனைப் பாலம்

இதேவேளை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான இரண்டு பஸ்கள் கொக்கட்டிச்சோலைக்கும் மட்டக்களப்புக்குமிடையில் சேவையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தண்ணீர் இல்லாது நெற்செய்கை பாதிப்பு

மட்டக்களப்பு.ஏப்.26
மட்டக்களப்பு, படுவான்கரை பிரதேசத்தில் சிறுபோக நெற்செய்கை தண்ணீரின்றி முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.
இந்தப் பிரதேச வயல் கண்டத்தைச் சூழ்ந்திருந்த சிறிய குளங்களில் இருந்த நீரை நம்பியே விவசாயிகள் காலபோக நெற்செய்கையை மேற்கொண்டு வந்தனர். எனினும் சிறியகுளங்களில்தேங்கியிருந்த தண்ணீர் வற்றியுள்ளதால் நெற்பயிர்கள்தண்ணீர்இன்றிப் பாதிக்கப்பட்டுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (ச)

## துணுக்காய் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) துணுக்காய்

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களை தெரிவு செய்வதற்கான விதிகளுக்கு அமைய கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2009.04.08ஆம் திகதிய 1596/17 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 28 இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளுக்கும் கிளைக்குழு தெரிவிற்கான கிளைப் பொது சபைக் கூட்டங்களை பின்வரும் கால அட்டவணையின்படி நடத்துவதற்கும் இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்குமாக கீழ்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

1. கிளைக்குழு தெரிவு நடைபெறும் திகதி - 2014.05.10 சனிக்கிழமை
2. நேரம் - முற்பகல் 10.00 மணி
3. கிளைப் பொதுச் சபைக்கூட்டம் நடைபெறும் இடங்கள்.

| தொடர் இல. | கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர்கள் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | 01 | துணுக்காய் | திருமதி கு.சிவகெங்காதேவி | துணுக்காய் அ.த.க. பாடசாலை |
| 02 | 02 | கல்விளான் | சி.பாலசுந்தரம் | கல்விளான் அ.த.க.பாடசாலை |
| 03 | 03 | கொத்தம்பியாகுளம் | ந.நாவேந்தன் | கொத்தம்பியாகுளம் கிளை நிலையம் |
| 04 | 04 | திருநகர்(யோகபுரம்2-4) | திருமதி மு.புஸ்பலட்சுமி | திருநகர்(யோகபுரம்2-4) கிளை நிலையம் |
| 05 | 05 | பாரதிநகர்(யோகபுரம்1-5) | இ.விஜயகுமார் | R.D.Sபொதுநோக்கு மண்டபம்,பாரதிநகர் |
| 06 | 06 | புத்துவெட்டுவான் | இ.தனுசன் | புத்துவெட்டுவான் கிளை நிலையம் |
| 07 | 08 | தென்னியன்குளம் | ஜனாப்.எஸ்.எம்.சாமித் | தென்னியன்குளம் அ.த.க பாடசாலை |
| 08 | 09 | புகழேந்திநகர் 1-9 | இ.ஜெகதீபன் | புகழேந்திநகர் 1-9 கிளை நிலையம் |
| 09 | 10 | கோட்டை கட்டியகுளம் | பா.பாலரவி | கோட்டை கட்டியகுளம் கிளை நிலையம் |
| 10 | 11 | பழைய முறிகண்டி | ஜெ.சதீஸ் | பழைய முறிகண்டி அ.த.க பாடசாலை |
| 11 | 12 | அமைதிபுரம் | அ.சஞ்சயன் | ஆரோக்கியபுரம் அ.த.க பாடசாலை |
| 12 | 13 | ஸ்ரீமுருகன் | அ.சீராளன் | ஸ்ரீமுருகன் கிளை நிலையம் |
| 13 | 14 | அணிஞ்சயன்குளம் | செல்வி.ச.லாவண்யா | அணிஞ்சயன்குளம் அ.த.க பாடசாலை |
| 14 | 15 | தேறாங்கண்டல் | ச.பாஸ்கர் | தேறாங்கண்டல் கிளை நிலையம் |
| 15 | 16 | ஐயன்கன்குளம் | சோ.தங்கேஸ்வரன் | ஐயன்கன்குளம் அ.த.க பாடசாலை |
| 16 | 17 | அம்பலப்பெருமாள்குளம் | வி.முகுந்தன் | கோட்டை கட்டியகுளம் கிளை நிலையம் |
| 17 | 18 | ஆரோக்கியபுரம் | கு.ஹஜந்தன் | ஆரோக்கியபுரம் அ.த.க பாடசாலை |

கிளைப் பொதுச் சபைக்கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் 1998.05.19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவுறுத்தலுக்கமைய கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளைக்குழு தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொதுஇடங்களிலும் பார்வையிடலாம். கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களிற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்கள் குறித்த அறிவிப்புக்களின்படி கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களிற்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையை பயன்படுத்திக் கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன். (43449)(7.6.3)

சி.தவராசா - மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கிளிநொச்சி
மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி.

## கல்முனைக்கு ரூ.161 மில்லி. நிதி ஒதுக்கீடு

பொருளாதார அபிவிருத்திஅமைச்சினால் கல்முனை தொகுதி அபிவிருத்திக்காக இந்த வருடம்161மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கல்முனைப் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த வருட அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்பட்டதுடன், தற்போது மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தக் கூட்டம் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கிழக்குமாகாண சபை உறுப்பினர்களான ஏ.எம்.ஜெமீல், சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன், கல்முனை மாநகர ஆணையாளர் ஜெ.லியாக்கத்அலி உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

RALEIGH
மகளிர்களிற்கான புத்தம்புதிய நவீன
தொழில்நுட்பத்துடன் கூடிய
றலி துவிச்சக்கரவண்டிகள் விற்பனையில் உள்ளன.
வியாபாரிகளிற்கு விசேட கழிவு வழங்கப்படும்.



Ride a Raleigh and
feel the Difference
A tradition since 1887
ஆதுஸ் என்ரபிறைசஸ் பிறைவேற் லிமிட்,
30, கன்னாதிட்டிறோட், (சிவன்கோயில் முன்பாக), யாழ்ப்பாணம்.
TP:077 742 7322
(சி13076)(12.3.6)

## யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

### பழைய மாணவர் சங்கம்

### வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

தலைவர் : ம.மணிசேகரன் (அதிபர்)
காலம் :11.05.2014 ஞாயிற்றுக்கிழமை
இடம் : துரையப்பாபிள்ளை கேட்போர் கூடம், யா/மகாஜனக் கல்லூரி
நேரம் : மு.ப.09.30

மேற்படி கூட்டத்தில் பாடசாலையின் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் புதிதாக இணைந்துகொள்ள விரும்பும் அங்கத்தவர்களையும் அன்றைய தினம் சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: பிரேரணைகள் ஏதும் இருப்பின் 02.05.2014ஆம் திகதிக்கு முன்பாக தலைவரிடம் அல்லது செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

ம.மணிசேகரன்,
தலைவர்.

ந.சிவகரன்,
வே.ஸ்ரீவரூபன்,
இணைச் செயலாளர்கள்.

# ஆஸி. வழங்கிய கப்பல் வந்தது கொழும்புக்கு

## கடல்வழிப் போக்குவரத்து கண்காணிப்புக்குப் பேருதவி

கொழும்பு.ஏப்.26
சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு ஆஸ்திரேலியா அரசு இலங்கைக்கு அன்பளிப்புச் செய்துள்ள கடல் ரோந்து கப்பல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இலங்கை வந்தடைந்துள்ளது.
இலங்கை தேசியக் கொடி மற்றும் கடற் படை கொடிகளை தாங்கிய நிலையில் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இந்தக் கப்பலுக்கு கடற்படையினரால் சம்பிரதாய முறைப்படி விசேட வரவேற்பு வழங்கப்பட்டது.
கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை தந்திருந்த இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயனாத் கொலம்பகே, இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதர் ரொபின் மூடி ஆகியோர் தலைமையில் இரு நாட்டு உயர் அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கப்பலை உத்தியோகபூர்வமாக வரவேற்றனர்.
கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை வந்திருந்த ஆஸ்திரேலிய பிரதமர் ரொனி பெர்ட் கடற்படைத் தளபதியின் அழைப்பின் பேரில் கொழும்பு துறைமுகத்துக்கு சென்று இலங்கை கடற்படையின் சயுர என்ற ரோந்து கப்பலை பார்வையிட்டதுடன் கடல் வழியை பயன்படுத்தி ஆஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாக செல்பவர்களைத் தடுக்கும் பொருட்டு இலங்கைக் கடற்படையினரும் ஆஸ்திரேலியக் கடற்படையினரும் இணைந்து மேற்கொள்ளும் கூட்டு செயற்பாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது இலங்கை அரசும் கடற்படையினரும் முன்னெடுக்கும் நடவடிக்கைகளைப் பாராட்டிய ஆஸ்திரேலிய பிரதமர். கடல் ரோந்து. பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் சிறப்பாக முன்னெடுக்கும் பொருட்டு தமது நாட்டிலிருந்து இரண்டு ரோந்து கப்பல்களை அன்பளிப்பாக வழங்குவதாக உறுதியளித்தார். அவ்வாறு வாக்குறுதியளிக்கப்பட்ட இரு கப்பல்களில் முதலாவது கப்பல் கடந்தமாதம் 30 ஆம் திகதி ஆஸ்திரேலியாவின் கேன்ஸ் நகரத்தில் வைத்து இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயனாத் கொலம்பகேயிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது. (ச)



ஆஸி. வழங்கிய கடல் ரோந்துக் கப்பல்

# ஹெரோயின் வைத்திருந்த இருவர் கைது

தெஹிவளை, கல்கிஸ்ஸ பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 6 கிராம் 450 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இதே வேளை அதே பகுதியில் 4 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயினுடன் மற்றொரு இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# குற்றச்செயல்கள் இடம்பெற ஊக்குவித்து வருகிறது அரசு

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு.ஏப்.26
குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்குத் தேவையான பின்னணியை அரசு ஏற்படுத்திக் கொடுக்கிறது என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.
ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.



சரத் பொன்சேகா

வன்புணர்வு, சிறுவர் துஷ்பிரயோகம், போதைப் பொருள் பயன்பாடு போன்றவற்றை ஊக்குவிக்கும் வகையில் அரசு சட்டங்களை இயற்றி வருகின்றது என்று அவர் கூறினார்.
கசினோ சூதாட்ட சட்டம் மிகவும் ஆபத்தானது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# நாட்டில் கடும் வறட்சி; சிறுபோகம் பாதிப்பு

## அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தெரிவிப்பு

கொழும்பு. ஏப்.26
தற்போது நிலவும் வறட்சியில் இனிவரும் காலத்தில் மாற்றம் ஏற்படாத நிலைமை தொடருமானால் இந்த முறை சிறுபோகத்தில் கடந்த ஆண்டை விட வீழ்ச்சி நிலை ஏற்படும்.
நெல் விளைச்சலில் நூற்றுக்கு 60 வீதம் வரையில் வீழ்ச்சி ஏற்படக்கூடும் என்று அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.
அதிகளவில் நெற் செய்கையை மேற்கொள்ளும் அநுராதபுரம், பொலனறுவை, அம்பாறை, குருநாகல் போன்ற மாவட்டங்கள் அனைத்திலும் நூற்றுக்கு 75 வீதம் வரையிலான விளை நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவில்லை என்று அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.
அதற்குப் பிரதான காரணம் தற்போது நிலவும் வறட்சியே என்றும் இந்தச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.
தற்போது இடைக்கிடை மழை வீழ்ச்சி காணப்பட்டாலும் அது விவசாயத்தில் ஈடுபடக் கூடிய அளவுக்குப் போதுமானதாக இல்லை என்று சம்மேளனம் தெரிவித்துள்ளது.
பாதிக்கப்பட்ட இந்த விவசாயிகளுக்காக நட்ட ஈடு வழங்கும் செயற்றிட்டத்தை அரசு இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை என்று சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது. (ச-22)

# இளைஞர் மாநாட்டுக்காக ரூ.500 மில்லியன் செலவு

கொழும்பு.ஏப்.26
கொழும்பில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச இளைஞர் மாநாட்டுக்காக 500 மில்லியன் ரூபா செலவிடப்பட உள்ளது. இதற்கான 250 மில்லியனை அரசும், 250 மில்லியனை தனியார் நிறுவனங்களும் வழங்க உள்ளன என்று பிரதிக் கல்வி அமைச்சர் மொஹான் லால் கிரேரு தெரிவித்தார்.
கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை சர்வதேச இளைஞர் மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் இலங்கையின் சார்பில் 200 பிரதிநிதிகளும், 150 நாடுகளிலிருந்து 550 பிரதிநிதிகளும் பங்கேற்க உள்ளனர் என்று அவர் கூறினார். (ச)

# மலேரியாவைத் தடுக்க சுற்றுலா செல்வோர் மருந்தைப் பெறுங்கள்

## சுகாதார அமைச்சு கோரிக்கை

கொழும்பு.ஏப்.26
மலேரியா நோய்த் தாக்கமுள்ள நாடுகளுக்கு சுற்றுலா செல்வதாயின், அதற்கு முன்னர் அந்த நோயில் இருந்து பாதுகாத்துக் கொள்ளத் தேவையான மருந்துகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் பாலித்த மஹிபால வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இவ்வாறான மருந்துகளை மலேரியா தடுப்பு அதிகாரிகளிடம் பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார்.
மலேரியா நோயை இலங்கையில் இருந்து ஒழிக்கும் காலம் நெருங்கியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருபவர்கள் மூலம் இந்த நோய் பரவாமல் இருப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
ஸ்ரீஸ்கந்தராஜா
கஜரூபன் (ரூபன்)
தோற்றம் 16.07.1984
மறைவு 06.05.2013
திதி: துவாதசி (26.04.2014)

அன்பு முகம் கண்டு ஆண்டொன்று ஆனாலும்
இனிய நினைவுகளும் இழந்தவலியும் இதயம் துடிக்கும்வரை
இறுதி மூச்சுவரை எம்முள் சுமப்போமையா
உயிருக்குள் உயிராய் உறைந்து எம் உயிருடன் - கலந்திருக்கும்
உயிரோட்டமான உங்கள் இனிய நீங்கா நினைவுகளுடன் வாழும்:
செ.சீவரெத்தினம் (மாமன்),
கஜரூபன் சுகிர்தா (மனைவி),
கஜரூபன் துவாருஜன் (மகன்).

இல. 06, கற்பகவிநாயகர் வீதி,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பதினொராம் ஆண்டு நீங்காத நினைவுகள்

வண்ணார் பண்ணை, தட்டாதெரு
அமரர் கனகசபை அரசரத்தினம்
(ரிப்போட்டர்)
தோற்றம் 26.04.1938
மறைவு 26.04.2003



பதினொரு ஆண்டுகள் ஆனாலும் உங்கள் ஆடம்பரமில்லாத பேச்சும் செயல்களும் இன்னமும் எம் இதயங்களில் நீங்காது நித்தம் உங்கள் நினைவில் வாழும்எமக்கு வழிகாட்டியாய் வகைப்படுத்தி அன்போடு எமை அரவணைத்துமேதினியில் எம்மை உயர்நிலையில் வாழச்செய்தவரை நன்றி உணர்வுடன் நினைக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Mrs. J.Arasaratnam,
56,Thorndon Gardens,
EPSOM,SURREY, KT19 0 Qw
LONDON.UK.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(46048)(45.6.3)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் சண்முகவடிவேல் வேல்நாதன் (ஐயா)
(ஓய்வுபெற்ற இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)
கடந்த 15.03.2014 சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் அமரர் சண்முகவடிவேல் வேல்நாதன் (ஐயா) அவர்களின் சபிண்டீகரணம் இன்று (26.04.2014) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் 28.04.2014 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியக்கிரிகைகளும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் வீட்டுக்கிருத்திய பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## செயற்றிறனின்மை நல்லதல்ல; உடனடி நடவடிக்கை தேவை

பிரிட்டிஷாரிடம் இருந்து இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் விடுதலை பெற்றபோது தமக்கும் விடிவு வந்துவிட்டதாக மக்கள் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் பின்னர் வந்த காலங்களில், பிரிட்டிஷ் ஆட்சியே பரவாயில்லை என்று பலர் சொல்லும்படியாகிவிட்டது.

அதற்கு முக்கியமான காரணம், சுதந்திரம் பெற்ற பின்னர் சொந்தத் தலைமைகள் பிரிட்டிஷ் மேலாதிக்க சொகுசுகளையும் அதிகாரங்களையும் விட்டுவிடாமல், அதேநேரத்தில் அரசியல் ஆதரவுக்காக மக்களின் கோரிக்கைகளுக்கும் செவிசாய்க்க விரும்பினார்கள். இவ்வாறு அவர்கள் இரண்டு தோணிகளில் கால்வைத்து நகர்ந்ததால், அவர்களால் சிறந்த நிர்வாகத்தைக் கொடுக்க முடியவில்லை.

காலனி ஆதிக்கத்தில் இருந்த விடுபட்ட பல நாடுகளில் இந்த நிலையைத் தொடர்ந்தும் அவதானிக்கலாம். இன்று வரைக்கும் மூன்றாம் உலக நாடுகளாகவும், வளர்ந்து வரும் நாடுகளாகவும் இவை இருப்பதற்கு இதுவே காரணம்.

இப்போது இதைப்பற்றிப் பேச வேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது?

50 நாள்களுக்கு மேலாகியும் பொது சுகாதார பரிசோதகர்களின் பிரச்சினை வடக்கில் தீர்க்கப்படாமலேயே தொடர்கின்றது. இந்தப் பிரச்சினை இரு நபர்களுக்கு இடையிலான தனிப்பட்ட பிரச்சினையாக ஆரம்பமானது. பின்னர் அது அவரவர் சார்ந்த தொழிற்சங்கங்களினால் பொறுப்பேற்கப்பட்டு பெருமெடுப்பிலான போராட்டங்களாக உருமாற்றப்பட்டது.

இப்போதோ, அது மருத்துவர்களுக்கும் சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் இடையிலான 'ஈகோ' பிரச்சினையாகப் பரிணமித்திருக்கிறது. இதனால் முடிவின்றி அது தொடர்கின்றது.

பிரதேச சபைகளுக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தேவையா இல்லையா என்ற விவாதங்கள் இந்தப் போராட்டங்களின் பின்னணியில் எழுந்திருக்கின்றன. காலத் தேவை கருதி பிரதேச சபைகளுக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தேவை என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

நடைமுறையில் பிரதேச சபைகளுக்குரிய பல பணிகளைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களே ஆற்றி வருகின்றனர். பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகளின் கீழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பணியாற்றினாலும் அவர்களின் களப் பணிகள் பலவும் பிரதேச சபையினால் குறித்தொதுக்கப்படுபவையாகவே உள்ளன.

இந்த நிலையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பிரதேச சபைகளுக்கு அவசியமாகவே உள்ளனர். அண்மையில் வடமாகாண முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்கூட இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை பிரதேச சபைகளுக்குள் உள்வாங்குவதற்கான ஆளணித் தேவையை உருவாக்குவதற்கும் இணக்கம் காணப்பட்டிருந்தது.

அதுவரையில் தற்காலிக ஏற்பாடாக ஏற்கனவே பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடமையில் இருந்த பிரதேச சபைகளுக்கு அவர்களை மீண்டும் விடுவிக்கவும் இணக்கம் எட்டப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கமும் உடன் இருந்தார். ஆனால் இன்றுவரையில் இந்த இணக்கம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதனால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் போராட்டம் 50 நாள்களுக்கும் மேலாக நீடிக்கிறது. இது பொது மக்களின் வாழ்க்கையை அதிகம் பாதிக்கிறது. பிரதேச சபைப் பகுதிகளில் டெங்கு ஒழிப்புக் கண்காணிப்புப் பணி செயலிழந்துள்ளது. இறைச்சிக் கடைகள் மூடிக் கிடக்கின்றன. வீடு, கட்டடம் அமைப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்கள் அவற்றைப் பெறுவதற்குத் தவம் கிடக்க வேண்டி இருக்கிறது. அவர்கள் பிரதேச சபைக்கும் வீட்டுக்கும் நடையாய் நடக்கிறார்கள்.

அப்படி இருந்தபோதும் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடாயில்லை. 50 நாள்களாகியும் பிரச்சினையை வடமாகாண சபையால் தீர்க்க முடியவில்லை. இது வடமாகாண சபையின் குறிப்பாக, முதலமைச்சரினதும் சுகாதார அமைச்சரினதும் செயற்றிறன் இன்மையைக் காட்டுகிறது.

30 ஆண்டுகள் நீடித்த விடுதலைப் போரால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதி வடக்கு. அந்தப் பாதிப்பில் இருந்து மீண்டு, தமது நாளாந்த வாழ்வைக்கூட இயல்பு நிலையில் கழிக்க இயலாது இன்றும் ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு வாழ்கின்றனர்.

அப்படிப்பட்ட மக்கள், வடக்கு மாகாண சபையிடம் இருந்து இத்தகைய செயற்றிறன் அற்ற நிர்வாகத்தை, அல்லது பிரச்சினைகளைக் கிடப்பில் போட்டு ஆற விட்டு வேடிக்கை பார்க்கும் நிர்வாகத்தை எதிர்பார்க்க வில்லை. இந்தப் போக்கு நீடித்தால் மக்களின் அறச் சீற்றம் அடுத்த முறை வாக்குகளாகப் பொல்லடி களைத் தரவும் தவறாது.

எனவே உடனடியாக வடமாகாண சபையின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். மக்கள் தொடர்ந்தும் துன்பப்படுவதை அனுமதிக்கக்கூடாது.

# கைதிகள் போன்று வாழும் ஈழத் தமிழ் அகதிகள்

இலங்கையில் உள்நாட்டுப் போர் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக இலங்கை அரசு தெரிவித்துவரும் நிலையில், தமிழ் நாட்டு அகதி முகாம்களில் தற்போதும் குறைந்தது 120,000 ஈழத் தமிழ் அகதிகள் வாழ்ந்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. இந்தியாவில் ஈழத்தமிழர் மீதான கண்காணிப்புத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகிறது. இந்த அகதிகளில் பெரும்பாலானவர்கள் கண் காணிக்கப்படுகின்றனர்.

எவ்வித சட்ட நடவடிக்கைகளுமின்றி பல அகதிகள் சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பற்றிய தகவல்கள் வெளியில் தெரியப்படுத்தப்படுவதில்லை. எந்தவொரு தனிப்பட்ட அகதியினதோ அல்லது நாடு கடத்தப்படவேண்டியவர்களினதோ தகவல்கள் வெளியிடப்படக் கூடாது. அகதி அமைப்புக்கள் தொடர்பான தகவல்கள் வெளியில் தெரிய வரக் கூடாது. இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளவர்கள் தொடர்பான தனிப்பட்ட தகவல்கள் வெளியிடப்படக்கூடாது என தமிழ்நாட்டு அரசாங்கத்தின் புனர்வாழ்வுத் திணைக்களத்தின் கைநூலொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழர் பாதுகாப்பு அமைப்பு தமிழ்நாட்டில் குறிப்பாக சென்னையில் தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

சுமார் 11 செயற்பாட்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்த அமைப்பு செயற்படுகிறது. இது தனது செயற்பாடுகளின் மூலம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளதாக செயற்பாட்டாளரான செந்தில் கூறுகிறார். தேர்தல்களில் பங்கெடுக்காது அரசியலில் ஈடுபடுவதன் மூலம் தாம் அதிகம் சாதிக்க முடிவதாகவும், மக்களின் உணர்வுகளுக்கு அரசியற் கட்சிகள் பதிலளிப்பதற்கான அழுத்தத்தை உருவாக்குவதாகவும் ஈழத் தமிழ் அகதிகள் தொடர்பில் கரிசனை கொண்டுள்ளதாகவும் மக்கள் போராட்ட அமைப்பின் முக்கிய செயற்பாட்டாளரும் தமிழ்த் தேசிய விடுதலை அமைப்பின் பொதுச் செயலருமான தோழர் தியாகு தெரிவித்துள்ளார்.

1990 கள் வரை ஈழம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இருந்த தற்போதைய தமிழ்நாட்டு முதலமைச்சரும் அ.இ.அ.தி.மு.க. தலைவியுமான ஜெயலலிதா, 2012 இல் தமிழ்நாட்டு சட்டசபையில் இலங்கைக்கு அழுத்தம் வழங்குகின்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார். அதாவது மஹிந்த ராஜபக்ஷ ஒரு போர்க் குற்றவாளி என்பதையும் இவர் இனப்படுகொலையை மேற்கொண்டவர் எனவும் ஐ.நா. பிரகடனம் செய்ய வேண்டும் என இந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது என தோழர் தியாகு மேலும் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் இலங்கை மீது அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டு தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படுவதற்கான வாக்களிப்பு மேற்கொள்ளப்பட்ட போதும் இந்தியா அதில் கலந்து கொள்ளாது நடுநிலை வகித்தது. இதன் விளைவை இடம்பெறவுள்ள தேர்தலில் தற்போதைய இந்திய மத்திய அரசின் ஆளும் கூட்டணி பெற்றுக்கொள்ளும். காங்கிரஸின் எதிர்க்கட்சிகள் எந்தக் குதிரையில் சவாரி செய்வதற்கும் தயாராகவுள்ளன. இவை பாரதீய ஜனதாக் கட்சிக் குதிரையிலும் சவாரி செய்யும் என தி.மு.கவுக்கு எதிரான ஓர் உள்ளூர் வைத்தியரான பாலகிருஷ்ணன் தெரிவித்தார். அகதிகள் தொடர்பில் எந்தவொரு கட்சிகளும் போதியளவு அக்கறை எடுக்கவில்லை என்பது பாலகிருஷ்ணனின் கருத்தாகும்.

இந்தியக் குடிமக்கள் போன்று பாகிஸ்தானிய இந்து அகதிகளும் சமஉரிமைகள் பெறவேண்டும் என இந்தியாவின் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளரான நரேந்திரமோடி இந்த வாரம் தெரிவித்துள்ளார். ஆனால் இந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் ஈழத் தமிழ் அகதிகள் தொடர்பாக எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை. 1950 தொடக்கம் 1987 வரை இந்தியாவில் பிறந்த திபெத்தியர்களுக்கு இவ்வாண்டுக்கான தேர்தலில் வாக்களிப்பதற்கான உரிமை முதலாவது தடவையாக வழங்கப்பட வேண்டுமென கர்நாடக நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது. ஆனால் திபெத்தியர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புச் சலுகைகள் கூட ஈழத்தமிழர்களுக்கு வழங்கப்படாததேன் என தகவல் தொழில்நுட்பவாளரான இளங்கோவன் கேள்வியெழுப்பியுள்ளார். திபெத்தியர்கள் இந்தியாவில் சீனாவுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிராக பல்வேறு ஆர்ப்பாட்டங்களைச் செய்கின்ற போதிலும் இவர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதாக தமிழ் அகதிகள் தொடர்பில் கரிசனையுள்ள சென்னை வாசி ஒருவர் தெரிவித்தார்.

கும்மிடிபூண்டி அகதிகள் முகாமில் பணியாற்றுவதற்கு இரண்டு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இங்கு பணிபுரியும் பணியாளர் ஒருவர் தெரிவித்தார். இவர் தனது பெயரை வெளிப்படுத்த மறுத்துவிட்டார். இங்கு இவ்விரு நிறுவனங்களும் பணிபுரிவதற்கான அனுமதி வாயளவிலேயே வழங்கப்பட்டுள்ளதாகவும் அதனால் இவர்கள் எந்தநேரமும் அங்கிருந்து வெளியேற்றப்படலாம் என்பதும் முக்கிய தகவலாகும். நான் அந்த முகாம் அகதிகளை அணுகியபோது அங்கு கியூப் பிரிவு காவற்துறை உறுப்பினர் ஒருவர் குறிப்புக்கள் எடுத்துக்கொண்டிருந்தார். 2008 இல் அகதிகள் ஒரு வங்கியைக் கொள்ளையடித்ததாகக் கூறப்பட்டது. 2011 இல், மதுரையில் பணமோசடி எனக் கூறப்பட்டு அகதிகள் கைதுசெய்யப்பட்டனர். ஆனால் உண்மையில் உள்ளூர்த் தமிழர்களும் கியூப் பிரிவினருமே இதில் ஈடுபட்டனர் என அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர் தெரிவித்தார்.

மேலும் ஈழ அகதிகள் பொய்யாகக் குற்றம் சுமத்தப்பட்டே சிறப்பு முகாம்களுக்கு அனுப்பப்படுவதாகவும், இதற்கான சாட்சியங்கள் இருப்பதில்லை எனவும், இவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வருவதால் இவர்களைக் கைதுசெய்ய வேண்டும் என கியூப் பிரிவு விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய நாடுகளில் தமிழ் அகதிகள் அவர்களுக்கான உரிமைகள் மதிக்கப்பட்டு அவர்களின் அகதி நிலை ஏற்றுக் கொள்ளப்பட்டு வாழ்கின்றனர். கனடாவில் இரண்டு லட்சம் வரையான அகதிகள் அவர்களுக்கான அகதிகள் உரிமைகளுடன் குடிமக்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வாழ்வதாக தமிழரான கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் தெரிவித்துள்ளார். இதேதொகை ஈழத் தமிழர்கள் இந்தியாவில் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். இவர்கள் அகதிகள் என்ற வரையறை வழங்கப்படாது வெளிநாட்டவர் சட்டத்தின் கீழ் வெளிநாட்டவர்களாக கணிக்கப்படுகின்றனர்.

புலிகளைத் தோற்கடித்ததன் மூலம் தாங்கள் போரை வென்று விட்டதாக இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். இந்தியா இலங்கை கூறியதை ஏற்றுக் கொண்டுள்ளது போன்று செயற்படுகிறது. அதாவது இலங்கை விவகாரம் தொடர்பில் இந்தியா அமைதி பேணுவதன் மூலம் இலங்கையின் கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. அமெரிக்காவின் தலைமையில் ஐ.நாவில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை தான் ஏற்றுக் கொள்ளாததன் மூலம் தென்னாசியாவில் தான் ஒரு சக்தியாக நீண்ட காலம் நிலைத்திருக்க முடியாது என்பதை இந்தியா இன்னமும் உணரவில்லை என பேராசிரியர் மணிவண்ணன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களின் உணர்வலைகள் மூலம் இந்தியா தனது பிராந்தியத்தில் செல்வாக்குச் செலுத்தும் நாடாக உள்ளது. ஆனால் தற்போது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாததன் மூலம் இந்தியாவின் பங்களிப்பு கேள்விக்குறியாகிறது. அதாவது இந்தியா இலங்கையின் இறையாண்மையைக் கருத்திற் கொண்டே வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை எனக் கூறுகிறது. அனைத்துலக அரங்கில் தென்னாபிரிக்க ஆங்கிலேய அரசு தனிமைப்படுத்தப்பட்டமை போன்று இலங்கை அரசு தனது ஆட்சியுரிமையை இழப்பதற்கான நகர்வுகளை புலம்பெயர் சமூகம் மேற்கொண்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் தமது வாழ்வு அச்சுறுத்தலுக்கு உட்பட்டாலும் தாம் அங்கே திரும்பிச் செல்ல வேண்டும் என்பதே தமிழ்நாட்டு அகதி முகாம்களில் வாழும் அரைவாசிப் பேரின் ஆவலாகும். தமது குழந்தைகளின் எதிர்காலத்துக்காக இவர்கள் ஐரோப்பாவில் தஞ்சம்புக விரும்புகிறார்கள்.

சாதாரண அகதிகள் முகாம், மக்களின் நகர்வுகள் மீது சில கட்டுப்பாடுகளைக் கொண்டு இயங்குகின்றது. மக்கள் மூன்று விதமான காவற்துறையினரின் அனுமதியைப் பெற்ற பின்னர் வேலைக்கென முகாமை விட்டு வெளியில் செல்ல முடியும். ஆனால் சிறப்பு முகாம்களில் உள்ளவர்களுக்கு இவ்வாறு சலுகைகள் இல்லை. இவர்கள் சாதாரண முகாம்களில் வாழும் மக்களைப் போன்று நிவாரணத்தைப் பெறமுடியாது. இவர்களை உறவினர்கள் சென்று பார்வையிட முடியாது. இவர்கள் கூலி வேலைகளில் ஈடுபட முடியாது. இவர்கள் நூலகங்களுக்குச் செல்ல முடியாது. சிறப்பு முகாம்களில் உள்ள்வர்கள் புலி உறுப்பினர்கள் என தமிழ்நாட்டு காவற்துறையினர் கூறுவது மிகவும் பொய்யானது. இங்கு பல்வேறு மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதால் இந்த முகாம்களை மூடவேண்டும்என வலியுறுத்திக் கூறப்படுகின்றது.

இவ்வாறு சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்படுபவர்கள் தொடர்பில் குற்றவியல் வழக்குகள் முன்வைக்கப்படுவதில்லை. சிலர் நீதிச்சேவையின் கட்டளையின் பிரகாரம் விடுதலை செய்யப்படும் போது இவர்களை விடுவிப்பதற்கு வெளிநாட்டவர் சட்டத்தை தமிழ்நாட்டு காவற்துறை பிரயோகிக்கும். இவ்வாறான மிகவும் பாதுகாப்புக் கூடிய சிறைச்சாலைகளில் வெளிநாட்டவர்களைத் தடுத்து வைப்பதற்கான அனுமதியை மாநில மற்றும் மத்திய அரசுக்கு வெளிநாட்டவர் சட்டம் வழங்குகிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்யும் ஈழத் தமிழருக்குப் பிறக்கும் குழந்தைகள் இந்தியக் குடியுரிமையைப் பெறமுடியும். இலங்கையில் இருந்து 1980களில் முதலாவது தொகுதி அகதிகள் இந்தியாவுக்குச் சென்றனர். ஆனால் இவர்கள் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்து 30 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இவர்களில் 90 சதவீதமானவர்களுக்குத் தற்போதும் இந்தியக் குடியுரிமை வழங்கப்படவில்லை.

நன்றி: புதினப்பலகை

# மறைந்தும் மறையாத ஈழத்துக் காந்தி

ராஜராஜன்

ஈழத்துக் காந்தி, தமிழினத்தின் தந்தை எனப் போற்றப்படும் தந்தை செல்வாவின் 37 ஆவது ஆண்டு நினைவு நாள் இன்றாகும்.

தந்தை செல்வா அறவழிப் போராட்டங்கள் மூலமாகத் தமிழர்களின் உரிமைகளைப் பெறுவதற்காக அயராது பாடுபட்டார். ஆனால் வெறிகொண்ட சிங்கள இனத் தலைவர்கள் அவரது உயர்ந்த கோட்பாடுகளை உணர்ந்து கொள்ளாததால் இந்த நாடு கொலைக்களமாக மாறியது. தந்தையின் அறநெறிக் கருத்துக்கள் எந்தக் காலத்துக்கும் உரியவை. வன்செயல்களை அவர் ஒருபோதுமே ஏற்றுக் கொண்டதில்லை. அற நெறிகளின் ஊடாக பெரும்பான்மை மக்களின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற அவரது நம்பிக்கை இறுதிவரை நிறைவேறாமல் போய் விட்டமை தமிழர் களுக்குப் பெரும் இழப்பபை ஏற்படுத்தி விட்டது.

ஓர் அரசியல்வாதியாக அவர் இருந்த போதிலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நேர்மையை கைவிட்டாரில்லை. தமது சுய இலாபத்துக்காக அரசியலை அவர் பயன்படுத்தியதுமில்லை. அவர் தமது இறுதிக் காலத்தில் தமக்கென ஒரு வாகனம் கூட இல்லாத நிலையில் வாழ்ந்திருக்கிறார். அவரது பொருளாதார நிலை பூச்சியமாகவே காணப்பட்டது.

உண்மையும், நேர்மையும், அறநெறிக் கொள்கைகளும் நிறைந்த இந்த அற்புதமான தலைவர் தமிழ் மக்களின் மனங்களில் எப்போதுமே நிறைந்திருப்பார். அவரது வாழ்வு எமக்கெல்லாம் நல்லதொரு வழிகாட்டியாக அமைந்துள்ளது என்பதில் சந்தேகம் எதுவும் கிடையாது.

**தந்தை செல்வாவின் 37 ஆவது ஆண்டு நினைவு நாள் இன்றாகும்.**



மு.தர்மலிங்கம்
காப்பாளர்,சதாவதானி
கதிரைவேற்பிள்ளை ச.ச. நிலையம்.

107 ஆவது ஆண்டு நினைவு தினத்தில்

# சதாவதானியின் சாதனைகளை நினைவு கூருவோம்

ஈழத்தில் ஆங்கிலேயர் ஆட்சி செலுத்திய காலத்தில் ஆங்கில மொழியும் கிறிஸ்தவ சமயமும் முக்கியத்துவம் பெறத் தமிழ் மொழியும் இந்து சமயமும் நலிவடைந்து சென்று கொண்டிருந்த வேளை ஆறுமுக நாவலர் தோன்றித் தமிழையும் சைவத்தையும் வளர்த்தெடுப்பதில் பெரும்பணி ஆற்றினார். அதனால் தான் "நல்லைநகர் ஆறுமுக நாவலரில்லையேல் சொல்லு தமிழெங்கே" என அவருக்குப் புகழாரம் சூட்டப்பட்டது. 1879 நாவலர் இறையடி எய்தியபோது கதிரைவேலர் 8 வயதுடைய சிறுவனாய் இருந்தார். மேலைப் புலோலியில் சிறந்த முருக பக்தராக வாழ்ந்த நாகப்பிள்ளை - சிவகாமி தம்பதியருக்கு 1871 இல் சற்புத்திரனாய் கதிரைவேலர் பிறந்தார். கதிர்காமக் கந்தன் மீது கொண்ட காதலால் குழந் தைக்கு 'கதிரைவேல்' எனப் பெயர் சூட்டிப் பெற்றோர் மகிழ்ந்தனர்.

மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வி கற்ற கதிரைவேலர் வறுமை காரணமாக ஆறாம் வகுப்புடன் பாடசாலைக் கல்வியை நிறுத்தினார். சிறிது காலம் நொத்தாரிசு சிதம்பரப்பிள்ளை என்பவரிடம் எழுதுநராகச் சிறு வயதிலேயே பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து தான் கல்வி கற்ற மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாசாலையில் சில வருடங்கள் உதவி ஆசிரியராய் பாடம் புகட்டினார். பாடசாலைக் கல்வியைத் துறந்தாலும் தமிழ் மீது கொண்ட காதலால் மரபுத் தமிழ்க் கல்வியை நாவலரின் சிறந்த இரு மாண வர்களான வித்துவான் தியாகராசபிள்ளையிடமும் நல்லூர் சதாசிவப்பிள்ளையிடமும் கற்றுத் தேறினார். தமிழ் ஆர்வ மேலீட்டி னால் தமிழகம் சென்று புகழ் பெற்ற தமிழ் அறிஞர்களான கனகசுந்தரம்பிள்ளை, காசிவாசி செந்தில்நாதையர் போன்றோரிடம் இலக்கிய இலக்கணங்களை ஐயந்திரிபறக் கற்றார். அயராத முயற்சியினால் வட மொழியிலும் புலமை பெற்றார். தமிழகம் சென்ற புதிதில் தமது வருவாய் கருதி சென்னை றிப்பன் அச்சகத்தில் ஒப்பு நோக்கித் திருத்தும் பணியில் ஈடுபட்டார். இருந்தும் ஆசிரியத் தொழிலையே அவர் பெரிதும் விரும்பிய மையால் வேப்பேரி உயர் நிலைப் பள்ளியிலும், சென்தோம் உயர்நிலைப் பள்ளியிலும் தமிழ் ஆசிரியராய் பணிபுரிந்தார். பின்னர் புகழ்பூத்த வெஸ்லி கலாசாலையின் தமிழ் ஆசிரியராகி வி.க. போன்ற மாணவர் கூட்டத்தை தலை சிறந்த தமிழ் அறிஞர்களாய் வளர்த்தெடுத்தார்.

நாவலர் பெருமானின் மறைவுக்குப் பின் அவரது வெற்றிடத்தை நிரப்பித் தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதில் நாவலரையே விஞ்சியவராக கதிரைவேலர் காணப்படுகின்றார். இராமலிங்க வள்ளலாரின் பாடல்கள் பற்றிய அருட்பா மருட்பா விவாதம் ஆறுமுகநாவலரின் காலத்திலேயே ஆரம்பித்து இராமலிங்கரின் பாடல்கள் மருட்பாக்களே என வாதிட்ட நாவலரின் பணியைக் கதிரைவேலர் தொடர்ந்தும் மேற்கொண்டு நீதிமன்றிலும் வாதாடி வழக்கிலே வெற்றி பெற்றார். வழக்கின் சாட்சிக்காரர்களில் ஒருவராக வி.க.சேர்க்கப்பட்டிருந்தார். வழக்கு நடந்த தினமே வி.கவின் பள்ளிப் பரீட்சையும் நடந்தது. மாணவர் வி.க. பரீட்சை எழுதவில்லை. நீதிமன்றம் சென்று தமது ஆசானுக்குச் சார்பாய் சாட்சி பகர்ந்தார். கரைவேலர் வென்றார். இவரது கண்டனச் சிறப்பைக் கண்டவர்கள் இவரை "எதிர்வேலில்லாதுலவுங் கதிர்வேல்" என்றழைத்தனர்.



இன்று சனிக்கிழமை மேலைப் புலோலி சதாவதானி சனசமூக நிலையத்தில் சதாவதானியின் நினைவுப் பெருவிழா நடைபெறுவதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

இவர் நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் பெரும் பணி ஆற்றினார்.

சிவசேத்திராலய மசோற்சவ விளக்கம், திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் சரிதம், சைவ சித்தாந்தச் சுருக்கம், சைவ சித்தாந்த சந்திரிகை, கருவூர் மான்மியம், சுப்பிரமணிய பராக்கிரமம், கதிர்காம மான்மியம் ஆகியன அன்னார் இயற்றிய நூல்களில் சில. புத்தமத கண்டனம், மருட்பா மறுப்பு ஆகிய கண்டன நூல்களையும் இயற்றியுள்ளார்.

நைடதம், கூர்மபுராணம், சிவராத்திரி புராணம், திருவானைக் கலம்பகம், யாப்பருங்கலம் ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். இவைகளிலே நைடத விருத்தியுரையின் சிறப்பியல்புகளைப் பெரும் புலவர்களே வியந்து பாராட்டியுள்ளனர்.

கதிர்காமம் கலம்பகம், அகத்தியர் தேவாரத் திரட்டு, திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியன அன்னார் பதிப்பித்த நூல்களாகும். அன்னாரது பணிகளையும் சாதனைகளையும் பாராட்டிப் பல விருதுகள் பல சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டன. சைவசித்தாந்த ஞானத்தைப் பாராட்டி சைவசித்தாந்த மகாசரபம் என்னும் விருது வழங்கப்பட்டது. மாயாவாததும் சகோளரி, அத்துவித சித்தாந்த மகோத்தாரணர், மகா வித்துவான் பெருஞ் சொற் கொண்டல் ஆகிய விருதுகள் அன்னாரது சாதனைக்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டவையாகும்.

கதிரைவேலரின் பிரசங்கத்தில் திளைக்கும் பக்தர்கள் பிரசங்க மேடையில் வைத்தே அன்னாருக்குப் பூமாலை அணிவித்துப் பட்டு பரிவட்டம் சாத்திப் பெருமைப்படுத்தினார்கள்.

சதாவ்தானியின் பேச்சு வன்மையை அவர்தம் தலைமாணாக்கரான வி.க. என அழைக்கப்படும் கல்யாணசுந்தர முதலியார் சிறப்புறக் குறிப்பிட்டுள்ளார்.

முதன் முதல் எனக்குக் கல்விக் கண் திறந்தவர் யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி நா.கதிரைவேற்பிள்ளை என நன்றி பாராட்டும் வி.க.நெற்றியில் நீறணிந்து, கழுத்தில் உருத்திராட்ச மாலை பூண்டு, இடுப்பில் பீதாம்பரம் புனைந்து சொல் மழை பொழிந்ததைக் கண்டோம். அந்த மழை வெள்ளத்தில் இலக்கியமும் இலக்கணமும், தர்க்கமும், சாஸ்திரமும், பொன்னும் மணியும் அகிலும் தேக்குமென உருண்டு மிதந்தன. காளமேகமெனக் காட்சி தந்த கதிரைவேற்பிள்ளையின் கோலமும் பேச்சும் என்னை ஆண்டன. அன்று முதல் அவர் தம்பேச்சு மேடைகள் என்னைக் காந்தமென ஈர்த்தன என்று கதிரைவேற்பிள்ளையின் பேச்சு வன்மையைப் பாராட்டுகின்றார்.

கதிரைவேலரின் தமிழ்ப் புலமையை அறிந்து வியந்த ஆரணி அரசர் அன்னாரை விரும்பி வரவழைத்து ஆரணி சமஸ்தான வித்துவானாக நியமித்துப் பெருமைப்படுத்தினார். கதிரைவேலரின் தமிழ்ப் பணி ஆரணி சமஸ்தானத்தையும் அலங்கரித்தாலும் பின்னர் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவராய்ப் பவனி வந்து சங்கத்துக்கும் பெருமை சேர்த்தார்.

மேற்கூறப்பட்ட அருமை பெருமை வாய்ந்த பணிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்று விளங்குவது அன்னாரது பேரகராதிப் பணியேயாகும். 1899 இல் இவ்வகராதி சென்னை வித்தியாரத்னாகரம் அச்சகத்தின் பதிப்பாக வெளியானது. இதற்கு முன்னர் மானிப்பாயில் இருந்து வெளியிடப்பட்ட யாழ்ப்பாண அகராதியே தமிழகத்திலும் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. அவ்வகராதியும் சொற்கள் விடுபட்டும் அச்சுப் பிழைகளுடனும் காணப்பட்டது. பேரகராதியானது அதிக சொற்களைக் கொண்டதாகவும் அச்சுப் பிழையற்றதாகவும் இருந்தமையால் பர வலாகப் பயன்படுத்தப்பட்டது. இதன் காரணமாகப் பேரகராதியின் கேள்வி அதிகரித்து விரைவிலேயே 2 ஆம் பதிப்பையும் கண்டது. கதிரைவேலரின் பேரகராதியானது சைவசித்தாந்தம் வைணவ சித்தாந்தம் சார் தத்துவச் சொற்களுக்கான விரிவான விளக்கங்களையும் செவ்வனே தருகிறது. அகராதி முயற்சியில் பொருள் மற்றும் தொகைச் சொற்களைப் பல தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் இருந்தும் கதிரைவேலர் தனி ஒருவராகத் திரட்டித் தொகுத்துள்ளார். பல நூல்களையும் பயின்ற காரணத்தினால் அன்னாரது அகராதித் தொகுப்பில் சொற்களுக்கெல்லாம் பல்துறை விளக்கங்களைக் கொடுத்திருப்பதானது ஏனைய தமிழ் மொழி அகராதிகளுக்கில்லாத தனிச் சிறப்பாகும். தத்துவச் சொற்கள் தொகைச் சொற்கள் ஆகியவற்றின் அரிய விளக்கங்களால் பேரகராதியானது உசாத்துணையாக உயர்ந்து நிற்கின்றது என்றார் பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளை அவர்கள்.

குறுகிய காலமே (36 ஆண்டுகள் 1871-1907) வாழ்ந்த கதிரை வேலர் ஏனைய பெரும்பணிகளையும் செவ்வனே மேற்கொண்டு தனி ஒருவனாக இந்தப் பென்னம் பெரிய பேரகராதியைப் பிழையேனும் இன்றித் தொகுக்க இயலும் என்பதை எண்ணிப்பார்க்கவும் இயலவில்லை.

சதாவதானி நிகழ்த்திய சாதனைகளின் மணி மகுடமாய் விளங்குவது செயற்கரிய சதாவதானம் செய்த புதுமையாகும். 24.02.1907 இல் சென்னை இலக்குமி விலாச மண்டபத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் பல்துறைசார் வல்லுநர்களினால் ஒரே நேரத்தில் தொடுக்கப்பட்ட நூறு வினாக்களுக்கும் உடனுக்குடன் பிசகேதும் இன்றி விடை பகர்ந்து சதாவதானம் செய்தமையும் அதிசயமானதே. சதாவதானம் நிகழ்த்திய போது சபையிலே வீற்றிருந்த தமிழ்ப் புலவர்களும் பண்டிதர்களும் கதிரைவேலருக்கு நிபந்தனைகள் விதித்துக் கவிபாடக் கேட்டனர். இந்த எழுத்தில் தொடங்கி இந்தப் பொருள் தோன்ற இந்த எழுத்தில் முடியுமாறு நேரிசை வெண்பா பாடுமாறு கேட்டதும் சட்டென்று வெண்பாவில் விடை பகர்ந்து அவையடக்கி உயர்ந்தே நின்றார். இதேபோன்று இன்னும் தொடுக்கப்பட்ட மிகக் கடும் வினாக்களுக்கெல்லாம் விரைவாகவும் சரியாகவும் பேச்சாலும், பாட்டாலும் உடனுக்குடன் விடை பகர்ந்த வித்தகனே! சதாவதானியே! சதா வாழ்க; வாழ்கவே.

"செந்தமிழ் அணங்கின் சிந்தையில் என்றும் தங்கும் தமிழ் ஒளித் துங்கவன்" என்று சதாவதானியை ஏற்றிப் போற்றியுள்ளார் தமிழறிஞர் வி.க.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: வாழ்க்கைத் துணையுடன் விவாதம் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச் சலையும் காரிய தாமதத்தையும் சந்திக்க வேண்டி இருக்கும்.



**இடபம்**: தொழில் வியாபாரப் போட்டிகள் குறையும். பணவரவு இருக்கும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். உறவினர்கள் வருகை இருக்கும்.வெளியூர் பயணங்களின்போது கவனம் தேவை. அடுத்தவர்களுக்காக பொறுப்புகளை ஏற்கும்போது ஒரு முறைக்கு பலமுறை யோசித்து முடிவு எடுப்பது நல்லது.



**மிதுனம்**: வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். புதிய நபர்களிடம் எச்சரிக்கை தேவை. வீண் அலைச்சலைக் குறைத்துக் கொண்டு கடமைகளில் கவனம் செலுத்துவது நல்லது. பெரியோர்களின் உதவியும் கிடைக்கும்.



**கடகம்**: உடல் ஆரோக்கியம் உண்டாகும். மனதில் தைரியம், தன்னம்பிக்கை உண்டாகும். துணிச்சலுடன் எந்தக் காரியத்திலும் ஈடுபட்டு சாதகமாகச் செய்து முடிப்பீர்கள்.



**சிங்கம்**: தொழில் வியாபாரம் திருப்திகரமாக இருக்கும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வருமானம் அதிகம் கிடைக்கப் பெறுவீர்கள். வராது என்று எண்ணிய பணம் வந்து சேரும்.



**கன்னி**: சகோதர வழியில் வேண்டிய உதவி கிடைக்கும். பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். மனத் தைரியம் கூடும். துணிச்சலுடன் எந்தக் காரியத்திலும் ஈடுபட்டு சாதகமாகச் செய்து முடிப்பீர்கள்.



**துலாம்**: வேலைகளை முடிப்பதில் - வேகம் இருக்கும். தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு எதிலும் வெற்றி பெறுவீர்கள். சமூகத்தில் மரியாதை உயரும். பணவரவு பலவழிகளில் இருக்கும். அதே நேரத்தில் செலவும் வரும். வாக்கு வன்மையால் புகழ் கூடும்.



**விருச்சிகம்**: புதிய நபர்களை நம்பி எதையும் செய்யும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலைச் சந்திக்க வேண்டி இருக்கும். எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். வெளியூர், வெளிநாட்டு பயணம் திட்டமிட்டபடி அமையும்.



**தனுசு**: குடும்பத்தில் திடீர் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்களுடன் சுமுகமான போக்குக் காணப்படும். அவர்களால் நன்மையும் உண்டாகும். நீண்ட தூர தகவல்கள் நல்ல சேதி தரும்.



**மகரம்**: உங்களது செயல்களை மற்றவர்கள் பாராட்டுவார்கள். மரியாதையும் அந்தஸ்தும் அதிகரிக்கும். புதிய நபர்களிடம் கவனம் தேவை. உத்தியோகத்தில் முன்னேற்றம் காணப்படும். குழந்தைகளுக்கு மேற்படிப்பு நல்ல விதத்தில் அமையும்.



**கும்பம்**: மனதில் தைரியமும் புதிய உற்சாகமும் உண்டாகும். புதிய முயற்சிகளில் இழுபறியான நிலை காணப்படும். நிர்ப்பந்தத்தின் பேரில் மனதுக்குப் பிடிக்காத வேலை செய்ய வேண்டி இருக்கலாம். தொழில் வியாபாரத்தில் விழிப்புடன் இருப்பது நன்மைதரும்.



**மீனம்**: எதிர்காலம் பற்றிய சிந்தனையும் மனக்கவலையும் ஏற்படும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். அரச தொடர்புடைய முக்கிய நபர்களின் அறிமுகமும், அவர்களால் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள்.

## நாளை

**சித்திரை-14 ஞாயிற்றுக்கிழமை | 27.04.2014**

திதி: திரயோதசி பி.ப. 02.17 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.ப.10.12 வரை

சுபநேரம்: 08.59-10.29 வரை
இராகுகாலம்:.04.29-05.59 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




### புத்தர் வகுத்த தத்துவ முறை

'உங்கள் கொள்கை என்ன?' என்று நேரடியாக பௌத்த பேரறிஞர்கள் மூவரை நாங்கள் கேட்டபோது, இறைவன், மனிதன், இயற்கை— இவற்றைப் பற்றிய கற்பாறை போன்ற அடித்தளத்தில் ஆழ்ந்து ஊன்றி நிற்கும் தங்கள் கொள் கையைத் தெள்ளத் தெளிவாக அழகிய மொழியில் அவர்கள் கூறினார்கள்.

[இதை ஒட்டி தர்மபாலர் எழுதிய 'புத்தருக்கு உலகம் கொண்ட கடன்' என்ற கட்டுரையின் சுருக்கம் படிக்கப்பட்டது. இதற்கு அணிந்துரையாகச் சிங்கள மொழியில் இயற்றப்பட்ட மங்கல வாழ்த்துப் பாடலை இவர் பாடினார் என்ற செய்தியை வேறு வாயிலாக நாங்கள் அறிகிறோம். பிறகு இந்தக் கட்டுரை தொடர்கிறது.]

இவரது [தர்மபாலரின் ]முடிவுரை, சிக்காகோப் பேரவையினர் அதுவரை கேட்டிருக்காத அளவு சிறப்பாக இருந்தது. அதை டெமஸ்தனீஸ்கூட மிஞ்சவில்லை.

# மனித வாழ்க்கை வாழும் நாய்



பிரிட்டனில் நாய் ஒன்று மனிதர்களைப் போன்று வாழ்ந்து வருகின்றது. பிரிட்டனில் உள்ள வட டைன் சைட் நகரில் மெல் ஸ்டோக்ஸ் மற்றும் எலியட் அலெக் சாண் டர் ஆகியோர் வளர்த்து வரும் இந்த நாய்க்கு 2 வயதாகிறது. Ollie the Weimaraner என்று பெயரிட்டுள்ள இந்த நாய் 4 அடி உயரமும் 37 கிலோ எடையும் கொண்டது. இந்நாய் ஐஸ்கிறீம் மற்றும் தேநீர் என மனிதர்கள் உட்கொள்ளும் அனைத்துப் பொருள்களையும் உண்கிறது. மேலும் தானாகவே சென்று குளித்துக் கொள்கிறது. வீட்டுக்கு வெளியில் வீதியில் ஐஸ்கிறீம் விற்கும் வாகனம் வந்தால் போதும், உடனே ஓடிச்சென்று மற்றவர்களை முந்திக்கொண்டு ஐஸ்கிறீம் வாங்கிச் சாப்பிடும்.

இதுகுறித்து நாயின் உரிமையாளர் அலெக்சாண்டர் கூறுகையில், தமது இந்த நாய், ஏனைய நாய்கள் போல் இல்லாமல் தனி மாதிரியான வாழ்க்கை வாழ்வதால், அதன் கழுத்தில் ஒரு பணப்பை கட்டிவிட யோசிக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | | | | | 3 |
| 9 | 4 | | | 2 | 6 | | | |
| | 2 | 5 | 9 | | | | | |
| | 7 | 9 | | 6 | | | 8 | 4 |
| | | | 4 | 9 | 5 | | | 1 |
| 1 | 3 | | | 8 | | 6 | 9 | |
| | | | | | 9 | 5 | 4 | |
| | | | 2 | 3 | | | 6 | 9 |
| 2 | | | | | | 7 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 4 | 7 | 8 | 3 | 9 | 6 | 1 |
| 1 | 8 | 7 | 2 | 6 | 7 | 3 | 4 | 5 |
| 3 | 6 | 9 | 5 | 4 | 1 | 2 | 8 | 7 |
| 8 | 4 | 6 | 1 | 5 | 2 | 7 | 3 | 9 |
| 7 | 3 | 5 | 8 | 9 | 6 | 4 | 1 | 2 |
| 9 | 1 | 2 | 3 | 7 | 4 | 6 | 5 | 8 |
| 6 | 5 | 1 | 4 | 2 | 7 | 8 | 9 | 3 |
| 2 | 9 | 8 | 6 | 3 | 5 | 1 | 7 | 4 |
| 4 | 7 | 3 | 9 | 1 | 8 | 5 | 2 | 6 |

# கோழிகளுக்கு ஆடைகள் தயாரித்து அணிவித்த மூதாட்டி



முதியோர் இல்லமொன்றில் வாழ்ந்து வரும் வயோதிபப் பெண்ணொருவர் கோழிகள் மீது கொண்ட அதீத விருப்பத்தால் அவற்றுக்கு கம்பளி ஆடைகளைத் தயாரித்து அணிவித்த சம்பவம் பிரிட்டனில் இடம்பெற்றுள்ளது. இவரது இத்தகைய செயற்பாடு பலரது கவனத்தை ஈர்த்துள்ளது. முதியோர் இல்லமொன்றுக்கு கொண்டு வரப்பட்ட கோழிகளுக்கே ஜோன் பெரட் என்ற வயோதிபப்பெண் ஆடைகளைத் தயாரித்து அணிவித்துள்ளார்.

கோழிகளுக்கு அணிவிக்கப்பட்ட ஆடைகள் மிகவும் வண்ணமயமானதாக காணப்படுவதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

"இந்தக் கோழிகள் எமது இல்லத்தில் இருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அவை எங்களுடன் எதையோ பேசுகின்றன. அப்போது நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்" என்று அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தினங்களில் கோழி இறைச்சி சமைப்பதற்காக கோழிகள் இவ்வாறான முதியோர் இல்லங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இதன்போது அந்தக் கோழிகளை இந்த மூதாட்டி விருப்புடன் அரவணைப்பதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# தந்தையின் செல்லப்பிள்ளைக்கு அறிவாற்றல் அதிகம்



தந்தையுடன் அதிக நேரம் செலவிடும் குழந்தைகள், கூர்மையான அறிவாற்றல் கொண்டவர்களாக இருப்பது ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. இதுகுறித்து பிரிட்டன் நியூகாஸ் பல்கலைக்கழக மருத்துவ ஆய்வாளர்கள் ஆய்வு நடத்தினர். பிரிட்டனைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் என 11 ஆயிரம் பேரிடம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதில், பெற்றோர்களுடன் சேர்ந்து வாழும் குழந்தைகளுக்கு அறிவாற்றல் அதிகமாக இருந்தது. அதிலும் குறிப்பாக தந்தையுடன் அதிக நேரம் செலவிடும் குழந்தைகள் கூர்மையான அறிவாற்றல் கொண்டவர்களாக இருப்பது தெரியவந்தது. பெரும்பாலும் ஆண் குழந்தைகள் அம்மாவிடமும், பெண் குழந்தைகள் அப்பாவிடமும் அதிக அன்புடன் ஒட்டிக்கொள்கின்றன என்பது தெரியவந்தது.

எனவே, அலுவலகம் என்று ஓடிக்கொண்டே இருக்கும் ஆண்கள், தங்கள் குடும்பத்தினருக்கும் நேரம் ஒதுக்கி குழந்தைகளுடன் அதிக நேரம் செலவிடவேண்டும். இது, குழந்தைகளின் அறிவாற்றலுக்கு வழிவகுக்கும் என்று ஆய்வு முடிவுகள் கூறுகின்றன.



# ஆரோக்கியம் பேணுவதற்கு இலத்திரனியல் சாதனம்




இது குருதியில் காணப்படும் ஒட்சிசன் மட்டத்தை துல்லியமாக எடுத்துக் காட்டவல்லது

நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு பல்வேறு இலத்திரனியல் சாதனங்கள் தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தப்பட்ட வண்ணம் உள்ளன.

இவற்றின் வரிசையில் தற்போது புதிய சாதனமொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இது குருதியில் காணப்படும் ஒட்சிசன் மட்டத்தை துல்லியமாக எடுத்துக் காட்டவல்லது. இவை தவிர தூக்கத்தின் அளவு, இதயத்துடிப்பு என்பவற்றையும் அறிந்து சொல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் விலை 120 டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



# அதிக நன்மைகள் நிறைந்த நுங்கு

இந்தியாவில் கோடை காலத்தில் வீதிகளில் விற்கப்படும் பழங்களில் ஒன்று தான் நுங்கு. இந்த நுங்கு மிகவும் சுவையாக இருப்பது மட்டுமின்றி, இதில் எண்ணற்ற நன்மைகள் நிறைந்துள்ளன. கோடையில் உடலுக்கு வேண்டிய நீர்ச்சத்துக்களை இது தன்னுள் அதிகம் உள்ளடக்கியுள்ளது. உடலின் கனிமச்சத்து மற்றும் குளுக்கோசின் அளவை சீராக வைத்து, சுறுசுறுப்புடன் செயற்படுவதற்கு பெரிதும் உதவியாக இருக்கும்.


அதிலும் கோடையில் அதிகப்படியான வெப்பத்தினால் சின்னம்மை வரும் வாய்ப்பு அதிகம் உள்ளது. அப்போது நுங்கு சாப்பிட்டால், சின்னம்மையினால் ஏற்படும் அரிப்புக்களைத் தடுத்து, உடலை குளிர்ச்சியாக வைத்துக் கொள்ளலாம். இதுபோன்று நுங்கில் நிறையச் சத்துக்கள் நிறைந்துள்ளன.

**எடையைக் குறைக்கும்**

நுங்கு சாப்பிட்டால் உடல் எடை குறையும்.ஏனெனில் உடல் எடையை குறைக்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். அதில் ஒன்றுதான் நுங்கு சாப்பிடுவது. நுங்கு சாப்பிட்டால், அதில் உள்ள அதிகப்படியான தண்ணீரானது வயிற்றை நிரப்பி, அடிக்கடி பசி ஏற்படுவதைத் தடுக்கும்.

**மார்பகப் புற்றுநோய்**

நுங்கில் ஆந்தோசையனின் என்னும் பைட்டோ கெமிக்கல் உள்ளது. இவை மார்பக புற்றுநோய் செல்கள் மற்றும் கட்டிகளின் வளர்ச்சியைத் தடுக்கும் சக்தி கொண்டவை.



## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், ஏப்.26
திருநெல்வேலி அருள்மிகு நீலாயதாஷி சமேத காயாரோஹண சுவாமிகள் கோயில் தேர்த்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.
காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி தேரில் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருட்காட்சி வழங்குவார். (ஓ-7)

◆ ◆ ◆


யாழ்ப்பாணம் அரியாலை புனித யூதா ததேயு ஆலய திருநாள் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியுடன் நிறைவு பெறும். (ஓ)

## மகா கும்பாபிஷேகம்

வரணி, ஏப்.26
மீசாலை வடக்கு அருள்மிகு இராமாவில் கந்த சுவாமி தேவாலய மகா கும்பாபிஷேக பெரும் சாந்தி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 10 மணி வரையான சுப வேளையில் இடம்பெறவுள்ளது.
நேற்று ஆரம்பமாகிய எண்ணெய்க்காப்பு நிகழ்வு இன்று வரை இடம்பெறும். கும்பாபிஷேக கிரியைகள் நாயன்மார்கட்டு சிவஸ்ரீ மகா லிங்கக் குருக்கள் தலைமையில் இடம்பெறும். தொடர்ந்து 15 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். (ஓ-122)

**காணி விற்பனை**
மூளாய் பிரதான சந்திக்கு அருகில் பொன் னாலை கிருஸ்ணன் கோயில் வீதியில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (வீதிக்கரையில்)
தொடர்பு: 021 205 1826, 078 608 1296 (47079) (3.5.4)

**மணமகள் தேவை**
மலையகத்தைச் சேர்ந்த 49 வயது வாழ்விழந்த இருப்பிடம் தொழில் வாய்ப்பு வசதிகள் யாழ்ப்பாணத்திலுள்ள ஆண் ஒருவருக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 071 654 7086 (சி/13541) (3.6.4)



கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்தின் தெற்கு வாசலுக்கென புதிதாக மணிமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே ஆலயத்தில் கிழக்கு வாசலுக்கு புதிதாக மணி மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-17)

## கடல் அட்டை வளர்ப்புக் குறித்த செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.26
யாழ்.மாவட்டத்தில் மீனவர்களுக்கான கடல் அட்டை வளர்ப்புத் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நடைபெறவுள்ளது.
யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் துறைத் தலைவர் பேராசிரியர் திருமதி சிவசாந்தினி குகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கடல் அட்டையின் பல்வகைமையும் அவற்றை வேறுபடுத்தி அறியும் இயல்புகளும், வாழிட மும், கடல் அட்டை காணப்படும் சூழலின் நீரியல் தன்மையும், அடித்தள இயல்பும் , கடல் அட்டை கொள்வனவு மற்றும் பதப்படுத்தல் ஆகிய தலைப் புக்களில் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.
இந்தச் செயலமர்வில் கடற்றொழில் சங்க, சமாசத்தலைவர், பொருளாளர், செயலாளர் உட்பட துறைசார்ந்த ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

**வீடு வாடகைக்குண்டு**
கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 19 ஆம் இலக்க வீடு சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு. நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு:077 394 0997 (47175) (4.3.6)

## பொதுச் சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.26
நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குப் புதிய இயக்குநர் சபையைத் தெரிவு செய்வதற்கான பொதுச்சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.
இந்தப் பொதுச்சபைக் கூட்டத்தில் இரண்டு அணிகள் போட்டியிட்டு இயக்குநர்களாக வருவதற்கு முனைப்புடன் செயற்பட்டும் வருகின்றன.
இந்த இரண்டு அணிகளும் ஏனைய பொதுச் சபை உறுப்பினர்களை சந்தித்து தமக்கு ஆதரவு வழங்குமாறும் கேட்டு வருகின்றன. (க-17)

◆ ◆ ◆

வவுனியா, ஏப்.26
வவுனியா மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வைரவப் புளியங்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சங்க தலைவர் ஸ்ரீபன் தலைமையில் இடம்பெறவுள்ளதாக சங்கச் செயலாளர் ஆ.பிரதீபன் தெரிவித்துள்ளார். (வ-402)

## வாழ்வாதாரப் பயிற்சி; விண்ணப்பித்தோர் கவனத்துக்கு

வரணி, ஏப்.26
வரணி இயற்றாலை கிராம சேவையாளர் பிரிவில் வேள்ட்விஷன் நிறுவனம் மூலம் வாழ்வாதார பயிற்சிகள் மற்றும் கொடுப்பனவுகள் பெறுவது தொடர்பில் விண்ணப்பம் செய்தோரை எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரணி இயற்றாலை கிராம அலுவலர் அலுவலகத்துக்கு பிற்பகல் 2.30 மணிக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.
விண்ணப்பதாரிகள் மட்டும் வருகை தருமாறும், வரும் பொழுது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் வருகை தருமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதுவரை தமது பெயர்களைப் பதிவு செய்யாதோரும் அன்றைய தினம் வருகை தந்து பதிவை மேற்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-122)

## அறிவோர் ஒன்று கூடல்

கிளிநொச்சி, ஏப்.26
கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் அறிவோர் ஒன்று கூடல் கரைச்சிப் பிரதேச சபையில் நாளைஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடை பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் கிளிநொச்சி கிளை முகாமையாளர் கு.சிவஞான சுந்தரம் 'தமிழ் ஆட்சி' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளார். (ச-18)


## தென்மராட்சி வலய மட்ட தமிழ்த்தினப் போட்டி

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட தமிழ் தினப் போட்டிகள் தனிநிலை மற்றும் குழு நிலைப் போட்டிகளாக இன்றும், நாளையும் மற்றும் மே 3ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.
இன்று சனிக்கிழமை வாசிப்பு, பேச்சு, பாவோதல், இசையும் அசைவும், இசை (தனி) , இசை (குழு) ஆகிய போட்டிகளும்-
நாளை இசை (தனி), நடனம் (தனி).நடனம் (குழு), நாட்டிய நாடகம், வில்லுப்பாட்டு, விவாதம், தமிழறிவு விவாதம் ஆகிய போட்டிகளும் - மே 3 ஆம் திகதி திறந்த போட்டிகளாக வடமோடி, தென்மோடி, சிந்து நடை, விசேட கூத்து, இசை நாடகம், நாட்டார் பாடல், மேடை நாடகம் ஆகிய போட்டிகளும் இடம் பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். வலய மட்ட எழுத்தாக் கற் போட்டிகள் கடந்த மார்ச் 15 ஆம் திகதி நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## நாயுடன் மோதுண்டு சைக்கிளிலிருந்து வீழ்ந்தவர் மருத்துவமனையில்

வலி. வடக்கு, ஏப். 26
வீதியில் குறுக்கே சென்ற நாயுடன் மோதுண்டு சைக்கிளில் இருந்து வீழந்தவர் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
புதன்கிழமை ஊரெழுப் பகுதியில் இடம் பெற்ற இந்த விபத்தில் காயங்களுக்கு உள்ளானவர் ஊரெழு பொக்கணையைச் சோந்த சுப்பையா சிவபாதம் (வயது- 48 ) என்பவராவார். (வ-86)




**அறிவித்தல்**
இங்கு காட்டப்பட்டிருக்கும் குடும்ப மருத்துவ காப்புறுதி அட்டை விநியோகித்தல் நிறுத்தப்பட்டுள்ளது. ஆதலால் எவரும் கொள்வனவு செய்ய வேண்டாமென கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
24.04.2014இற்குப் பின்பு கொள்வனவு செய்யப்படும் அட்டைகளுக்கு நொதேண் சென்றல் வைத்தியசாலை பொறுப்பல்ல என்பதை அறியத்தருகின்றோம்.
நொதேண் சென்றல் வைத்தியசாலை

# உயர் கல்வி வளர்ச்சிக்கான சகல வளங்களையும் பெற்றுத் தருவேன்

*கரவெட்டி விக்கினேஸ்வரா புதிய கட்டடத் திறப்பு விழாவில் உறுதியளித்தார் அமைச்சர் பந்துல*

வடமராட்சி, ஏப்.26

இருண்ட யுகம் முடிவடைந்து விட்டது. அனைவரும் அர்ப்பணிப்புடன் சேவை செய்து மாணவர்களுக்கு அறிவு சார்ந்த உயர் கல்வியை வழங்க முன்வரவேண்டும். உயர்கல்வியை வளர்ப்பதற்குத் தேவையான வளங்கள் அனைத்தையும் பெற்றுத் தருவேன் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய கட்டடம் ஒன்றை கல்வி அமைச்சர் புதன்கிழமை திறந்து வைத்தார்.

கல்லூரி அதிபர் கே.எம்.கனகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் கூறுகையில்:

நூற்றாண்டு விழாவை எதிர்நோக்கும் இந்தக் கல்லூரி பல அரசியல் வாதிகள், இலக்கிய கர்த்தாக்கள், அறிஞர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை கடந்த காலத்தில் எமக்குத் தந்துள்ளது. புகழ்பூத்த இந்தக் கல்லூரியின் கல்வித் தரம் அண்மைக் காலத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது.


போர்க் காலச் சூழ்நிலையின் பின்னர் மகிழ்ச்சியான ஒரு சூழலில் இன, மத, மொழி, பேதமற்ற நிலையில் கொழும்பு போன்ற நகரப் பாடசாலைகளுக்கு ஈடாக சிறிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்து வருகின்றோம். அந்த வகையில் இந்தக் கல்லூரியையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாணவர்களுக்கான விஞ்ஞான தொழில் நுட்பக் கல்வி வாய்ப்புக்களை மேம்படுத்த வேண்டும். அதற்காக ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 6 கோடி ரூபா செலவில் புதிய கட்டடமும், வளங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தில் தொழில்நுட்ப ஆய்வு கூடங்களும் அடங்குகின்றன.

மாணவர்களை சமூக மயமாக்கலுக்கு உள்ளாக்கும் போது கணினி அறிவு தேவை. கணினி அறிவு இன்றேல் சமூகத்துடன் இணைந்து செல்ல முடியாது. கணினியைத் தமது பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுக்க எல்லாப் பெற்றோர்களாலும் முடியாது. பாடசாலைகளில் கணினிகள் இல்லை. ஆகையால் இந்தக் கல்லூரி மாணவர்கள் கணினி அறிவைப் பெற்றுக்கொள்ள வசதியாக 40 கணினிகளை இரண்டு கட்டமாக இந்தக் கல்லூரிக்கு வழங்கவுள்ளேன்.

என்னதான் தமிழ், சிங்கள மொழிகள் எமக்குத் தெரிந்திருந்தாலும் அது போதாது. இவற்றால் உலகை வெல்ல முடியாது. தமிழ் சிங்கள மொழிகளுடன் ஆங்கில மொழி அறிவும் அவசியம். உலகுடன் போட்டி போட ஆங்கில மொழி அறிவும், கணினி அறிவும் மிக முக்கியமானவை. உள்நாட்டில் தனியார் நிறுவன வேலைவாய்ப்புகள் அதிகமாகக் கிட்டிவரும் நிலையில் ஆங்கில அறிவும், கணினி அறிவும் அத்தியாவசியமாகின்றன.

ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சையில் வடமாகாணம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளது. ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகளில் வடமாகாணம் முதல் இடத்திலும் அடுத்து ஊவா, மேல் மாகாணங்களும் இருக்கின்றன" -என்றார். (வ-173)

## தந்தை செல்வா நினைவு தினம் நாளை கொழும்பில்



தந்தை செல்வா

யாழ்ப்பாணம், ஏப்.26

தந்தை செல்வா நற்பணி மன்றத்தின், தந்தை செல்வா நினைவு தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொழும்பிலுள்ள விவேகானந்த சபை மண்டபத்தில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, நவ சமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன, தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயலாளர் சி.மோகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-5)




**கண்டெடுக்கப்பட்டுள்ளது**

23.04.2014 அன்று ராஜா தியேட்டரில் ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

தொ.பே: ராஜா தியேட்டர், யாழ்ப்பாணம். (47184) (3.6.4)

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலி பலாலி வீதியில் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் வீடு வாடகைக்குண்டு.

தொ.பே:076 679 7280 (47189)(3.6.4)

**வீடு வாடகைக்கு**

சுழிபுரம் காளுவன் சந்தியில் பிரதான வீதியில் வீடு வாடகைக்குண்டு.

தொ.பே:076 679 7280 (47186)(3.6.4)

**வெதுப்பக பொருள்கள் விற்பனைக்கு**

வெதுப்பக இலக்ரீசியன் உபகரணங்கள் அனைத்தும் (அவண், மா குழைக்கும் இயந்திரம், மேசை, தட்டு தளபாடங்கள் உட்பட) அனைத்து பொருள்களும் விற்பனைக்குண்டு.

* மொத்தமாகவும் அல்லது தவணை அடிப்படையிலும் பணம் செலுத்தலாம்.

தொ.பே: 071 490 5590 (43267) (7.6.3)

**அறைகள் நாள் வாடகைக்கு**

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=(Attached Bathroom)

Hotel Villa City
422 Galle Road, Wellawatte
T.P: 072 255 2222 (சி/12214)(3.6.4)



*சாவகச்சேரி நகர் முன்னாள் கிராம அலுவலர் வை.இராசரத்தினம் மற்றும் அரசநாதன் ஆகியோர் நிழல்பட இயந்திரத்தை நகர சபைத் தலைவரிடம் கையளித்தபோது.....*

## சாவகச்சேரி பொதுநூலகத்துக்கு நிழல் பிரதி இயந்திரம் அன்பளிப்பு

தென்மராட்சி, ஏப்.26

லண்டனில் வதியும் கலாநிதி வே.சிவகடாட்சம், தனது தந்தையார் சாவகச்சேரி கல் வயல் பண்டிதர் வேலுப்பிள்ளையின் நினைவாக சாவகச்சேரி நகர சபையின் பொது நூலகத்துக்கு நிழல்பட இயந்திரமொன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இயந்திரம் வழங்கும் நிகழ்வு புதன்கிழமையன்று நகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகர முன்னாள் கிராம அலுவலர் வை.இராசரத்தினம் மற்றும் அரசநாதன் ஆகியோர் நிழல்பட இயந்திரத்தை நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் லண்டனிலிருந்து வருகை தந்துள்ள சாவகச்சேரி கோயிற்குடியிருப்பைச் சேர்ந்த இரத்தினம் இரவீந்திரன் பொதுநூலகத்துக்கு ஒரு தொகுதி புத்தகங்களையும், நகர சபை எல்லைக்குட்பட்ட 50 வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கினர். (வ-9)

## ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 94 ஆவது ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம், ஏப்.26

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 94 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் இன்று மாலை 5 மணிக்கு சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரனும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-5)

## பட்டியிலிருந்து மாயமான பசு திரும்பியது வால் முறிந்த நிலையில்

*வரணியில் கால்நடை திருட்டு அதிகரிப்பு*

வரணி, ஏப்.26

மாட்டுப் பட்டியில் இருந்து திருடப்பட்ட பசுமாடு ஒன்று மறுநாள் அதன் வால் பகுதி முறிக்கப்பட்ட நிலையில் மீண்டும் பட்டிக்கு திரும்பி வந்த சம்பவம் வரணி இடைக்குறிச்சி பிரதேசத்தில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மாட்டுப்பட்டி உரிமையாளர் தெரிவித்ததாவது:

கடந்த சில தினங்களாக தென்னம் காணி ஒன்றில் மாடுகளை பசளைக்காக கட்டி வந்தேன். நாளாந்தம் காலையில் பட்டிக்குச் சென்று பார்வையிடுவேன். கடந்த வாரத்தில் ஒரு நாள் பசுமாடு ஒன்று காணாமற் போய் இருப்பது தெரியவந்தது. எல்லைவேலி முட்கம்பிகளும் வெட்டப்பட்டிருந்ததால் அந்தப் பசுமாட்டை எவரோ திருடிக் கொண்டு சென்றிருக்கலாம் என ஊகித்தேன். அந்தப் பசுமாட்டை பல இடங்களிலும் தேடி அலைந்தும் மாட்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அடுத்தநாள் அந்த பசு மாடு கழுத்தில் புதிய கயிற்றுடன் அதன் வால்பகுதி முறிக்கப்பட்ட நிலையில் திரும்பி வந்தது - என்றார்.

பசு மாட்டை திருடிச் சென்றவர்களுக்கு ஒத்துழைக்காமல் பசு வீழ்ந்து படுத்திருக்கலாம். இதன் காரணமாக அவர்கள் தமது முயற்சியை கைவிட்டு சென்றிருக்கலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

அண்மைக் காலமாக வரணிப் பிரதேசத்தில் கால்நடைகள் திருட்டுச் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-122)

## நற்பண்பு செயலமர்வு

வவுனியா, ஏப்.26

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நற்பண்பு செயலமர்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட கோதண்ட நொச்சிக்குளம் சிறிகந்தசாமி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-421)

**VACANCIES @ ESOFT**

*Shaping Lives, Creating Futures.*

**Join SriLanka's #1**

JAFFNA | KILINOCHCHI | NELLIADY

**Lecturers in IT** (Full Time only Required)

Would be responsible to conduct lecturers for Diplomas, Higher Diplomas and Degree Programmes. Must be a graduate in IT/Computing or a higher Diploma holder. Experience is not a must, but would be an advantage. Area of Expertise we are looking for include Programming in JAVA, C#,.Net, ASP.Net, C,C++, Software Engineering, Hardware, Networking & Database Management.

Good perfomers have the opportunity to advance to the level of Programme Manager.

**Receptionists**

Should be a fast learner to learn about our products and counsel students and / or parents on the best aducational programmes to suit their requirements. Similar experience would be an advantage. Should be able to work on weekends and have the self drive to achieve targets. Should be fluent in multiple language. Age between 20 - 28.

**Salary Benifits**

Successful candidates will bepaid a salary higher than industry rate. other benefits are also available

**How to Apply**

Mail your CV with a covering letter within 7 Days to below address or email to jaffna@esoft.lk

(C/13563)

**ESOFT METRO CAMPUS - JAFFNA**

No.137, K.KS, Road, Jaffna | Tel : 021 222 4142 | 077 300 9 308

web : www.esoft.lk E-mail : jaffna@esoft.lk



நல்லூர் பிரதேச செயலகம் புவி தினத்தையொட்டி நடத்திய ஓவியப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை யாழ். இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவி வழங்கிக் கௌரவிப்பதைக் காணலாம். (ஒ-7)

# வரணி மத்திய கல்லூரியில் இசுறு திட்டத்தின் கீழ் மாடிக் கட்டடங்கள் இரண்டு

வரணி, ஏப்.26

இசுறு பாடசாலைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மத்திய கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வரணி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டு வந்த மூன்று மாடிக் கட்டட வேலைகள் அண்மையில் முடிவடைந்துள்ளன. அத்துடன் மேற்குறிப்பிட்ட இசுறு திட்டத்தின் கீழ் ஒரே சமயத்தில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டட வேலைகள் ஏற்கெனவே முடிவடைந்துள்ள நிலையில் இந்த இரண்டு மாடிக் கட்டடங்களும் விரைவில் திறக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.



வரணி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டு வந்த மூன்று மாடிக் கட்டடம்.

குறித்த இரண்டு மாடிக் கட்டடத் தொகுதியில் நூலகம், விவசாய மற்றும் மனையியற் கூடங்கள், கணினியறை என்பனவும் மூன்று மாடிக் கட்டடத் தொகுதியில் அதிபர் அலுவலகம், ஆசிரியர் ஓய்வு அறை, உயர்தர பௌதிக, இரசாயன, உயிரியல் ஆய்வு கூடங்கள் என்பனவும் உள்ளடங்கியுள்ளன. (வ-122)


## மரண அறிவித்தல்

### திருமதி லீலாவதி சிவராஜா



சங்கிலியன் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி சிவராஜா 23.04.2014 புதன் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாமுத்து-மனோன்மணி தம்பதியரின் அன்புமருமகளும், காலஞ்சென்ற சிவராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமசாமி, பாலசுந்தரம் (பொன்னரியம்) மற்றும் பாலசிங்கம்(கனடா), சிவபாக்கியம் (லங்கா), சரஸ்வதி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவமோகன் (V.K.இராஜரட்ணம்), சிவசீலன்(கனடா), சிவஜீவன் (விஷ்ரா விஷன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், வினோதினி, மாலதி(கனடா), மாலினி ஆகியோரின் பாசமிகு மாமியும் சிவரஞ்ஜனி, சிவகணேஷ், சிவசங்கர், சிவஜனனி, சிவதாரிணி, நிலூக்கா, வர்வீன், பிரிகேஷ், சிவரதிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பவளராணி, செல்வராஜேஸ்வரி (கனடா), லோகேந்திராணி(கனடா), சிவராமலிங்கம், இராமநாதன் (கனடா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.04.2014) ஞாயிற்றுக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15/4, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(47214)(4.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.


# சந்திப்புக்கு சந்தர்ப்பம் வழங்குமாறு யாழ். வணிகர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.26

இலங்கை அரசு அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயித்தமை தொடர்பாக ஆராயும் பொருட்டு அவசர சந்திப்பு ஒன்றுக்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு கோரும் கடிதம் ஒன்றை யாழ்.வணிகர் கழகத்தினர் யாழ்.அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் ;

இலங்கை அரசு திடீரென அரிசி இறக்குமதி மீதான வரிகளை நீக்கியதுடன் அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலைகளையும் நிர்ணயித்துள்ளதாகப் ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம்.

எனினும் இவ்வாறான கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயிக்கையில் வட மாகாண மக்களின் பாரம்பரிய அரிசி வகைகளின் பயன்பாடுகள் பற்றியும், அவற்றின் உற்பத்திகள் பற்றியும் எதுவித அக்கறையும் செலுத்தாது கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளமையை யாழ்ப்பாண வர்த்தகர்கள் கவலையுடன் சுட்டிக்காட்டி யாழ்ப்பாண வணிகர் கழகத்துக்கு முறையிட்டுள்ளார்கள். இலங்கை அரசு இறக்குமதி செய்யப்படும் அரிசிகளின் விலைகளை கட்டுப்பாட்டு விலைகளில் விற்க முனைவது குறித்து எமக்கு ஆட்சேபம் இல்லை எனவும், ஆனால் வட மாகாணத்தில் நான்கரை மாத பயிராக பயிரிடப்படும் நெல் வகைகளில் இருந்து சில மேலதிக பதப்படுத்தும் முறைகளை தொடர்ந்து யாழ்ப்பாண மக்களுக்கு என விசேடமாக வழங்கப்படும் அரிசியின் விலை ஏனைய அரிசிகளின் விலைகளை விட அதிகமாக இருப்பது தவிர்க்கப்பட முடியாதவையாகும்.

இந்த நிலையில் தாங்கள் இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு உள்ளூர் உற்பத்தி அரிசிக்கு விசேடமாக யாழ்ப்பாண மக்களுக்கு என்று வழங்கப்படும் அரிசிகளின் விலைகளில் கட்டுப்பாட்டை விதிக்காமல் அல்லது பொருத்தமுடைய ஒரு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து உதவுமாறு தங்களைப் பணிவுடன் வேண்டுகின்றோம்.

மேலும் இது விடயமாக மேலதிக தகவல்களை தங்களுக்கு வழங்க வசதியாக அவசர சந்திப்பொன்றில் தங்களைச் சந்தித்து விளக்கமளிக்க நாம் தயாராகவுள்ளோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (க)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தாய் மடியில் 03.11.1944
இறைவனடியில் 27.03.2014

கடந்த 27.03.2014 பங்குனி 13 ஆம் நாள் வியாழக் கிழமை ஏகாதசி திதியில் இறைவனடி சேர்ந்த எமது குடும்ப ஒளிவிளக்கு திருமதி **யோகேஸ்வரி கதிர்காமநாதன்** அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (26.04.2014) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஈஸ்வரி இல்லம் பாடசாலை வீதி,
முத்தட்டு மட ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்.
(47174)(4.3.6)


## நெஞ்சு நோவுக்கு சிகிச்சை பெறச் சென்ற பெண் மருத்துவமனையில் உயிரிழப்பு

வலி. வடக்கு, ஏப். 26

நெஞ்சு நோவுக்குச் சிகிச்சை பெற தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பெண்ணொருவர் அங்கேயே மயங்கி வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் புதன் கிழமை பகல் இடம் பெற்றுள்ளது.

தெல்லிப்பழை ஆனைக்குட்டி மதவடியைச் சேர்ந்த வேலாயுதம் ஸ்ரீவதனி (வயது -56) என்பவரே இவ்விதம் உயிரிழந்தவராவார்.

சடலம் உடற்கூற்றுப் பாசோதனைக்காக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (வ-86)


## மரண அறிவித்தல்

### கந்தையா மாணிக்கலிங்கம்
(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், மண்டைதீவு ம.வி)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் கொழும்பு மோதரையில் வசித்தவருமான கந்தையா மாணிக்கலிங்கம் நேற்று முன்தினம் (24.04.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் -செல்லாச்சி தம்பதியரின் மரு மகனும், அம்பிகையின் (ஓய்வுபெற்ற ஆசிரியை மண்டைதீவு ம.வி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசபூபதி, அமிர்தலிங்கம், கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற வர்களான நடராசா, திருநாவுக்கரசு, கேதீஸ்வரி, முத்து லட்சுமி ஆகியோரின் மைத்துனரும், கேதாரகௌரி (விவேகானந்தாக் கல்லூரி, கொழும்பு), கேதாரநாயகி (ஆசிரியை, சேர்ராஸிக் பரீத் மகளிர் கல்லூரி மட்டக்குளி), கணேசலிங்கம் (UK), சசிகாந்தன் (France) திருலிங்கம் (ஆசிரியர், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற உமாதாரணி மற்றும் சிவகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா, நந்தினி (UK), ஜெகதீஸ்வரி (France) தயாபாலினி (ஆசிரியை - சண்டிலிப்பாய் இந்து கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும், அருணன், தினேஸ், சங்கீத், ஆதவலோஷன், பிரியங்கன் சாருகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.04.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கந்தரோடையிலுள்ள அன்னாரின் மகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தரோடை சங்கம் புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தையா உபாத்தியார் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.
(47186) (46.3.6)

தகவல் : மனைவி, பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**அந்தோனிராஜ் ஜோர்ஜ்**



பிறப்பு
03★03★1960

இறப்பு
06★05★2013

திதி: அபரபக்க துவாதசி

ஆண்டொன்று மறைந்து விட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டு எங்கு சென்றீர்கள்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்கமுடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவுகள் தொடரும்.
ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

230, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.
(47028)(3.6.4)

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## சார மரத்திலிருந்து தவறி வீழ்ந்து கை முறிந்தது

யாழ். மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் சார மரத்தில் இருந்து தவறி வீழ்ந்ததில் கைமுறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.
கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் கை முறிந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
சுன்னாகம் கந்தரோடை இக்கிரனையைச் சேர்ந்த செல்லையாவிஜயரெட்ணம்(வயது-23) என்பவராவார். (வ-86)

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கச்சியம்மா நல்லதம்பி

துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி தங்கச்சியம்மா நல்லதம்பி** (19.04.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நல்லதம்பியின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி, பூலோகம், காலஞ்சென்ற சோதிலிங்கம் (சோமு) மற்றும் பரமேஸ்வரி அருணகிரிநாதன் (நாதன் - கனடா), சந்திரபாலசிங்கம் (சந்திரன்), தனபாலசிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற ஜெயபாலகிருஸ்ணர் (பிரான்ஸ்) மற்றும் சிவபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், மகாலிங்கம், நடராஜா, சிவானந்தன், உதயமலர் (பிரான்ஸ்), ராஜேஸ்வரி, ரத்தினேஸ்வரி, ராசமலர் (சுவிஸ்), தயாநிதி (பிரான்ஸ்), சிவரஞ்சினி (தவம் -பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான ர்மலிங்கம், பவளம், குமாரசாமி மற்றும் பொன்னம்பலம் (பொன்னுச்சாமி), கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.04.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.
021 205 3955

துவாரகை வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

## சிகரெட் விற்பனை செய்யாத கடைகளுக்குச் சான்றிதழ்

### வலி.மேற்கு பிரதேச சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்.26
வலி. மேற்கு பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட வியாபார நிலையங்களில் சிகரெட் விற்பனை செய்யாத கடைகளுக்கு சான்றிதழ் வழங்குவதற்கு சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தெரிவித்துள்ளார்.
வலி.மேற்கு பிரதேச சபையின் கடந்த மாதாந்தக் கூட்டத்தின் போது வலி .மேற்கு பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட வியாபார நிலையங்களில் புகைத்தல் பொருள்கள் விற்பனை செய்வது தொடர்பில் ஆராயப்பட்டது.
இதன்போது பலசரக்கு கடைகளில் சிகரெட் வியாபாரம் செய்வதைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் பாடசாலைகளுக்கு அண்மையில் சிகரெட் விற்பனையை தடுத்தல் என்பன தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது
சிகரெட் விற்பனை செய்யாத வியாபார நிலையங்களின் தரத்தை பொது மக்களுக்கு சுட்டிக்காட்டும் நோக்குடன் சிகரெட் விற்பனை செய்யாத வியாபார நிலையங்களுக்கு பிரதேச சபையால் சான்றிதழ் வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-14)

## வியாபார விளம்பர ஒலிபரப்பால் கடை உரிமையாளர்கள் விசனம்

சங்கானை, ஏப். 26
சங்கானை-மரக்கறிச் சந்தைச் சுற்றாடலில் அண்மைக் காலமாக ஒலிபெருக்கி மூலம் வர்த்தக விளம்பர சேவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஒலிபெருக்கியின் அதிக சத்தம் காரணமாக கடைகளின் உரிமையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

> "ஒலிபெருக்கியின் பலத்த சத்தம் காரணமாக தமது கடைக்கு வரும் வாடிக்கையாளர்களுடன் கதைத்து அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய முடியாத நிலை உள்ளது.

ஒலிபெருக்கியின் பலத்த சத்தம் காரணமாகத் தமது கடைக்கு வரும் வாடிக்கையாளர்களுடன் கதைத்து அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய முடியாமல் போவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.
தினமும் காலை முதல் மாலை வரை குறித்த விளம்பர சேவை நடைபெற்று வருகின்றது.
பிரதான வீதிகளின் மின் கம்பங்களில் இதற்கான ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டுள்ளன.
இதேவேளை ஒலிபெருக்கிகளின் சத்தத்தால் பிரயாணிகளும், பாதசாரிகளும், பயணத்தின்போது பல இடர்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர். (வ-29)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### திருமதி தையலம்மை தம்பையா



நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தையலம்மை தம்பையா நேற்று (25.04.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவி யும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - தங்கமுத்து தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி - வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ் சென்றவர்களான வரதலட்சுமி, கணபதிப்பிள்ளை, தில்லைநாதன் மற்றும் குலசிங்கம் (J.P), யோகநாதன், சுலோசனாதேவி, குகதாசன் ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை மற்றும் நாகரெத்தினம், சண்முகநாதன் (J.P), வள்ளிப்பிள்ளை, அமுதாம்பிகை, விமலாதேவி, சிவகலை ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம், தில்லையம்பலம் மற்றும் கனகம்மா, செல்லம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.04.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

5 ஆம் வட்டாரம், நயினாதீவு.


## இலவச அழகு கலை பயிற்சி

(நிபந்தனைக்கு உட்பட்டது)





நாட்டின் பல பிரதேசங்களில் தனது சேவையினை வழங்கி வரும் ஒறிபிளேம் சுவீடன் நாட்டு நிறுவனம் மீண்டும் இலவச அழகு கலை பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளது.

பல வகையான **Facial, Bridal Make up, Bleaching, Hair Cut, Hair Styles, Pimple Treatment, Pedicure,manicure** என மேலும் பல செய்முறை விளக்கத்துடன் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக செய்முறை பொருள்கள் வழங்கப்பட்டு பயிற்சிகள் நடைபெறும்.

*பயிற்சியின் முடிவில் சர்வதேச தர சான்றிதழ்கள் வழங்கப்படும்.*

**பயிற்சியில் இணைய விரும்புவோர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.**

பிரிவு 1 : 28.04.2014 திங்கட்கிழமை மு.ப 10.00 மணி
பிரிவு 2 : 30.04.2014 புதன்கிழமை மு.ப 10.00 மணி

இடம் : 187/30, யூனியன் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(சத்திரசந்தி அருகில் கொட்டடி வீதியில்)

தொடர்பு : 0777 - 712604

குறிப்பு : முதல் 10 பதிவுகளுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் காத்திருக்கிறது.

### Chemistry Personal Classes

Therory (Organic, inorganic physical and 20 வருட கடந்த கால வினாக்கள் Tamil / English medium வீடு வந்து ஆசிரியரால் B.Sc(cey) M.Sc (cey) Chemistry கற்பிக்கப்படும். தொடர்பு: 077 6058915

### J.C.B.
### வாடகைக்கு வழங்கப்படும்



* குறிப்பு -
போக்குவரத்துக்கூலி அறவிடப்படமாட்டாது

தொடர்புகளுக்கு: 0777712482, 0779847285
புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்
இல. 207, K.K.S. றோட், சுன்னாகம்.

### ALL OUT
Pest control service




தொடர்புகளுக்கு
ந.ரூபகாந்த : 077 1515897, 021 4993200

### வேலையாள் தேவை

சிற்றுண்டி தயாரிப்போர், ஐஸ்கிறீம் தயாரிப்பவர் Order room இல் பணியாற்றக்கூடியவர்களும் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.)
அமுல் கிறீம் ஹவுஸ் (47217)(3.6.4)
இல.452, அஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P:021 222 5707


## கண்ணீர் அஞ்சலி



எமது ஆத்மஜோதி தியானமணிமண்டபத்திற்கும் அறநெறி பாடசாலைக்கும், திருமுறை, திருவாசக முற்றோதல் ஆகியவற்றுக்கும் தலைமை தாங்கி நடத்திய சிவநெறிச்செல்வர் **சிவசண்முகவடிவேல்ஐயா** அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஆத்மஜோதி தியான மணிமண்டபமும், அறநெறிப் பாடசாலையும்.
ஏழாலை.

# கொழும்பு நகரை அலங்கரிக்க ஒற்றைத் தண்டவாளத்தில் ரயில்

## ஆராய்கிறது குழு

கொழும்பு, ஏப்.26
கொழும்பு நகரின் அழகை அதிகரிப்பதற்கு நகர்ப்புற பிரதேசங்களில் ஒற்றைத் தண்டவாளத்தில் ஓடும் நவீன மான ரயில் வசதியை ஏற்படுத்துவது தொடர்பாக அரசு கவனம் செலுத்தி வருகின்றது. போக்குவரத்து அமைச்சால் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் அதிகாரிகளை உள்ளடக்கிய குழு ஒன்று நிறுவப்பட்டு அது தொடர்பான திட்டங்கள் தயாரிக் கப்பட்டு வருவதாகக் கூறப்படு கின்றது. இத்தகைய ரயில் வசதியொன்றை ஏற் படுத்தும் போது அதிக செலவினம் ஏற்பட் டாலும் கூட அதன் மூலம் கிடைக்கும் பயன்கள் பெறுமதியானவை என்று சுட் டிக்காட்டப்படுகிறது. (ச-22)

# ஜனாதிபதி தேர்தல் குறித்து வலுக்கிறது மோதல்கள்

## எதிரணிக் கட்சிகளுக்கு இடையே

கொழும்பு, ஏப்.26
எதிர்காலத்தில் இடம்பெறவி ருக்கும் ஜனாதிபதி தேர்தல் குறித்து எதிரணி அரசியல் கட் சிகளுக்கு இடையே மோதல் கள் உக்கிரமடைந்துள்ளன. இந்தத் தேர்தலில் எதிரணி களின் பொது வேட்பாளராக மாதுலுவாவவே சோபித தேரர் நிறுத்தப்படவுள்ளதாக வெளி வந்த செய்திகளை அடுத்தே மோதல்கள் அதிகரித்துள்ளன. பௌத்த மதகுரு ஒருவர் என்ற வகையில் சோபித தேரருக்கு சிறுபான்மை மதச் சமூகத் தவர்களின் ஒத்துழைப்பு கிடைக் காது என்று ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிரணிக் கட் சிகளில் உள்ள உறுப்பினர் கள் கருத்துத் தெரிவித்தனர். அதனை அடுத்தே எதிரணிக் கட்சிகள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் தலைதூக்கி யுள்ளன.

எதிரணியின் பொது வேட்பா ளராக மாதுலுவாவே சோபித தேரர் நிறுத்தப்பட்டாலும் கூட அவருக்கு சிறுபான்மை மக்க ளின் ஆதரவு கிடைக்காது என்று ஐக்கிய தேசியக் கட்சி யின் அரசியல் தகவல் மார்க் கங்கள் தெரிவித்தன. (ச-22)

# ஜனநாயக மக்கள் முன்னணியின் மே தின நிகழ்வு ஜிந்துப்பிட்டியில்

கொழும்பு.ஏப்.26
ஜனநாயக மக்கள் முன்ன ணியின் மேதின நிகழ்வுகள் கொழும்பு. ஜிந்துப் பிட்டி மைதா னத்தில் கட்சித் தலைவர் மனோ கணேசனின் தலைமையில் இடம் பெறவுள்ளன.

மே தின நிகழ்வுக ளில் எழுச்சி ஊர்வ லமும், பொதுக்கூட்ட மும் நடைபெற ஏற் பாடுகள் செய்யப்பட் டுள்ளன.

ஜிந்துப்பிட்டி வீதி, கன் னார தெரு, கதிரே சன் வீதி, புனித அந் தோனியார் வீதி, ஜம் பெட்டா வீதி, சங்க மித்தை மாவத்தை, புதுச்செட்டி தெரு, விவேகானந்தா மேடு, சென்ட்ரல் வீதி, ஆட்டுப்பட்டித் தெரு ஆகிய வீதிகளினூ டாக ஊர்வலம் நடை பெற்று ஜிந்துப் பிட்டி மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும். இந்த வருட மேதின ஏற்பாடுகள் தேசிய அமைப்பாளர் எஸ். ராஜேந்திரன் மற்றும் நிர்வாகச் செயலர் பிரி யாணி குணரத்ன ஆகியோர் பொறுப் பில் நடைபெற்று வரு கின்றன என்று ஜனநாயக மக் கள் முன்னணி ஊடக செயல கம் தெரிவித்துள்ளது. (ச)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப்.26
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அற நெறிப் பாடசாலை யின் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு அறநெறிப் பாடசாலை மண்டபத் தில் இடம்பெறவுள் ளது.

அற நெறிப் பாடசாலை அதிபர் வே. தம்பாப் பிள்ளை தலைமை யில் இடம்பெறும். இந்த நிகழ்வில் பிர தம விருந்தினராக சென்ரான்ஸ் றோ.க. பாடசாலை ஆசிரியை செல்வி சந்திரிக்கா கணேஸ்வரன் கலந்து கொள்வார். (400)

**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

**விற்பனைக்கு உண்டு**
ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யும் கொம்பிறேசர் வாத்துபிறிச் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு : 077 6523490

**வாகனம் விற்பனைக்கு**
நல்ல நிலையில் உள்ள TATA 207 Pickup Full அலுமினிய Body யுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : 077 5439044, 077 2487029

Architectural CAD Centre
Mathavady lane-Kondavil
Contact No:071 8617872
Civil Mech.
Auto CAD
2D-Drawing and 3D-Modeling
University of Peratheniya • University of Moratuwa

## மரண அறிவித்தல்

### திருமதி தயாமணி விஜயசிங்கம்

(முன்னாள் காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க உள்ளக கணக்காய்வாளர்)



அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தயாமணி விஜயசிங்கம் (25.04.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் விஜயசிங்கத்தின் அன்புமனைவியும் காலஞ் சென்றவர்களான சிவகுருநாதர் - பவளலக்ஷ்மி தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்றவர்களான கனகசிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்புமருமகளும் தனுஷ்யாவின் (முன்னாள் முகாமைத்துவ உதவியாளர் வடக்கு கிழக்கு வீடமைப்புமீள்நிர்மாணத்திட்டம் NEHRP- திருகோணமலை) அன்புத் தாயும் விஜித்குமார், அஸ்பெரியின் அன்புமாமியும் காலஞ்சென்ற நவமணி மற்றும் விக்கினேஸ்வரன், மகேஸ்வரன், சோமேஸ்வரன், மனோன்மணி மற்றும் பேரின்பமணி, பாலேஸ்வரன், விமலாமணி (ஆசிரியை விவேகானந்தா கல்லூரி கொழும்பு - 13), சர்வானந்தம், சற்குணதேவி, ஜெயந்தா, உமாமகேஸ்வரி, இரகுநாதன், சிவனேசகுமாரி, சிவதாஸ், ரவி ஆகியோரின் மைத்துனியும் கிருஷ்ணமதி, வளர்மதியின் சிறியதாயும் கோபிநாத். பிரதீபன். பிரியங்கா. சியானுகா .அபிக்கா ஆகியோரின் பெரியதாயும், மயூரதன். ராகவி. சர்மிளா. அமிதாப். சோபிதா. தருண். கௌசிகா. யசிந்தன் ஆகியோரின் மாமியும் யுகசிங்கம். யோகராணி. வரதராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (28.04.2014) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நாகேந்திரமடம், அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லக்கண்டு பொன்னையா (குஞ்சி)

யாழ்ப்பாணம், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கையை சொந்த இடமாகவும் தற்போது 27/11, 5 ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லக்கண்டு பொன்னையா நேற்றுமுன்தினம் (24.04.2014) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை (பிரபல வர்த்தகர்) - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னையா வின் (பிரபல வர்த்தகர். யாழ்ப்பாணம்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற வர்களான விசாலாட்சி அம்மாள், செல்லத்துரை, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சண்முகராஜா (உரிமையாளர், டைமன். தேயிலை கம் பனி). பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற யாழ்.மாநகர சபை உத்தியோகத்தர்) மற்றும் மங்களேஸ்வரி (கனடா). கமலநாதன் (உரிமையாளர். Toby's News Food and wine London), விமலநாதன் (லண் டன்). கம லேஸ்வரி (செந்தி - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் வடிவாம்பிகை (ஓய்வுபெற்ற ASR தொலைத் தொடர்புத் திணைக்களம்). ஜெயதீஸ்வரி (பவளம் - ஓய்வு பெற்ற ஆசிரியை), Dr.M.கனகசபை (கனடா). பிறையதாம்பாள்(லண்டன்). வத்சல்யா (லண்டன்). பவா னந்தன் (Thurrock Mini Market London) ஆகியோரின் அன்பு மாமியும் ஜெகதீசன் - சக்தி (நோர்வே). ஜெயகாந்தன் (பிரான்ஸ்). உஷாந்தி (B.A. முகாமைத்துவ உதவியாளர் மாவட்டச் செயலகம். யாழ்ப்பாணம்). சுதன் (ஸ்ரீசுதனா நகை மாளிகை). கௌரி - கணேசமூர்த்தி (கனடா). Dr.M.K.சிவகுமார் (M.B.B.S. Canada), தாரணி (Diploma Accou nting - Canada), Dr.பிரஷாந்தி (M.B.B.S., B.Sc. (Hons) London), வசீகரன் (ERP Consultant - B.Sc. (Hons) London) , பிரஷன்னா (AR Financial Officer - Bussin ess and Financial Management B.A. (Hons) London), அட்ஷரா (லண்டன்). நிரூஜன் (Bio Medical Scie nces M.Sc. Bio Chemistry, B.Sc. (Hons) London), பானுஷா (Bio Medical Sciences B.Sc.London) ஆகியோரின் அன்புப் பேர்த் தியும் சண்முகப்பிரியா (நோர்வே). கென்சு (பிரான்ஸ்). எலீனா(பிரான்ஸ்). அபிராமி (யாழ்ப் பாணம்). ரேனிஷா (கனடா). பவித்திரா (கனடா). காவ்யா (கனடா). ரூபியா (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.27/11, 5 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0776935610

தகவல்: சுந்தரலிங்கம் சுதன்
(பேரன் - ஸ்ரீசுதனா நகைமாளிகை)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் செயலாளர்
திரு. மா தியாகராஜா அவர்களின்
அன்புச்சகோதரன்



### அமரர் மாணிக்கம் மணிவாசகம் (செட்டி)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னா ரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர் ஆளுநர் சபை
உத்தியோகத்தர்கள்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் யாழ்ப்பாணம்.

## துயர் பகிர்கின்றோம்



அமரர் சிவஸ்ரீ

### முருகர் - இராசையா

ஐயா அவர்கள்

மண்டலாய் பிள்ளையார் ஆலயத்தின் முன்னை நாள் பிரதம பூசகரும். மண்ட லாய் பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குருமண்டலேஸ்வரக்குருக் களின் அன்புத் தந்தையுமான சிவஸ்ரீ முருகர் இராசையா ஐயா அவர்கள் 24.04.2014 அன்று சிவபதமடைந் துள்ளார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும் பத்தாருடன் துயர்பகிர்ந்து கொள்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காவும் பிரார்த்திக்கின்றோம்.

மண்டலாய் பிள்ளையார்
ஆலய பரிபாலன சபையினரும், அடியார்களும்

## மரண அறிவித்தல்

### திருமதி எலிசபெத் பீற்றர்



இல. 163 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப் பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி எலிசபெத் பீற்றர் (24.04.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப் - எமிலியா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பீற்றரின் அன்பு மனைவி யும் காலஞ்சென்றவர்களான சிறிலப்பு, நேச மணி, யேசுதாசன், செட்டியார், ஆசீர்வாதம் மற்றும் யோச், பிறேமா, யோகன் ஆகியோரின் சகோதரியும் கமிலஸ் (சுவிஸ்), றேணுகா (சுவிஸ்), ராஜ்மோகன், பிரசன்னா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயா (சுவிஸ்), செல்லா (சுவிஸ்), றோசலியா, சியா (லண்டன்) ஆகியோரின் அன்புமாமியும் சுலக்சன், யாழினி, ஜென்சியா, ஸ்ரெபானி, ரெனுசியா (சுவிஸ்), நிவேத், மடோனா (லண்டன்), ஹரன்சிகா, கிரிஷாந், நிருஷாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.04.2014) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு அடைக்கல அன்னை ஆலயத்தில் ஆராதனை ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
077 0870751

தகவல்:
பீ. ராஜ்மோகன் (மகன்)

உதயன்

# அடைவு நகைகளுக்கு முழுமையான பெறுமதி

## வருகிறது புதிய தீர்மானம்

கொழும்பு, ஏப்.26

தங்க ஆபரணங்களை வங்கிகளில் அடைவு வைக்கும் போது அந்த ஆபரணங்களின் முழுமையான பெறுமதியை அடைவு வைப்பவருக்குச் செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலர் டீ.பி.ஜயசுந்தர தெரிவித்தார். தற்போது வங்கிகளில் அடைவு வைக்கப்படும் தங்க நகைகளுக்கு அவற்றின் பெறுமதியில் ஒரு பகுதியே வழங்கப்படுகிறது.

இந்த நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவே புதிய தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அடைவு வைக்கப்படும் தங்க ஆபரணங்கள் தொடர்பாக முழுமையான பெறுமதி செலுத்தப்படும் போது அதனால் வங்கிகளுக்கு ஏற்படும் ஆபத்துக்கு இலங்கை மத்திய வங்கி பிணை நிற்கும் என்று அவர் கூறினார்.

அரச வங்கிகளான மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி ஆகிய நிறுவனங்கள் மூலம் தற்போது வழங்கப்பட்டு வரும் ஒட்டுமொத்த கடன் தொகையில் நூற்றுக்கு 30 வீதம் வரையான தொகை தங்க ஆபரண அடைவுக் கடன்கள் என்ற கணக்கில் இணைக்கப்படும். தங்க ஆபரணங்கள் அடைவு வைக்கப்படும்போது அவற்றின் முழுமையான பெறுமதி செலுத்தப்படாததனால் கிராமியப் பொருளாதாரத்துக்குக் கிடைக்க வேண்டியுள்ள இலாபம் இழக்கப்படுகிறது. அதனால் கிராமிய பொருளாதாரத்தில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது. புதிய



டீ.பி.ஜயசுந்தர

தீர்மானம் கிராமியப் பொருளாதாரம் பலமடைவதற்குப் பக்கபலமாக அமையும் என்று அவர்மேலும்கூறினார். (சு-22)

# ஆண் பாம்பை அடித்தவரை பழி தீர்த்தது பெண் பாம்பு

கொழும்பு,ஏப்.26

ஆண்புடையன்பாம்புஒன்றை அடித்துக் கொன்ற வரை பெண் புடையன் ஒன்று விரட்டி விரட்டி தீண்டியதில் அந்த நபர் உயிரிழந்த சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாத்தளை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மாத்தளை, உக்குவலை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறிப்பிட்ட நபர் பாதை ஓரத்திருந்த ஒருசோடிபுடையன்பாம்புகளை தடி ஒன்றினால் வேறுபடுத்தி அவற்றில் ஒரு பாம்பை



அடித்துக் கொன்றுள்ளார்.

தனது சோடியான ஆண் பாம்பு கொல்லப்பட்டதால் ஆத்திரமுற்ற பெண் புடையன் பாம்பு குறித்த நபரை விரட்டி விரட்டித் தீண்டியதில் உடலில் விஷம் ஏறி அவர் உயிரிழந்துள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மே 18 ஆம் திகதி

ஆம் ஆண்டு நினைவு தினத்தில் எழுச்சியுடன் அணிதிரளுமாறு கோரிக்கை விடுத்துள்ளது பிரிட்டன் தமிழர் பேரவை.

எதிர்வரும் மே 18 ஆம் திகதி பிரிட்டன் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் மத்திய லண்டன் டிரபால்கர் சதுக்கத்தில் முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின் 5 ஆம் ஆண்டுநினைவுதினம்மாலை 4 மணியில் இருந்து இரவு 8 மணிவரை எழுச்சியுடன் நினைவு கூரப்பட உள்ளது.

அதுகுறித்து அந்தப் பேரவை விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இலங்கையின் இனவாத அரசுகளினால் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனப் படுகொலையின் உச்சக்கட்டமாக, 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அன்று வரையில் முள்ளிவாய்க்காலில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டும், 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டும், 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறார்கள் அனாதைகள் ஆக்கப்பட்டும், மேலும் ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 தமிழ் அப்பாவி இளைஞர்கள், யுவதிகள், என்று பலர் கடத்தப்பட்டும் காணாமற்போயுமுள்ளனர்.

போர் முடிவடைந்து 5 வருடங்கள் கடந்த பின்னரும் இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் தமிழின அழிப்பும், நில அபகரிப்புகளும் தொடர்ச்சியாக துரிதகதியில் எமது தாயகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்பொழுது சர்வதேச சமூகம் எமக்கு நடந்த, நடந்து கொண்டிருக்கும் அநீதியின் ஒரு பகுதியை விளங்கிக் கொண்டிருக்கின்றது. இந்தநிலையில் சர்வதேச சமுகம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு எதிராக எடுக்கும் முயற்சிகளை முறியடிக்க இலங்கை அரசு தமிழ் மக்களை அச்சுறுத்தி எமது நீதிக்கான போராட்டத்தில் இருந்து விலக்கி வைக்கப் பார்க்கின்றது. எழுச்சிகொண்டதமிழ்மக்களை போராடும் சக்திகளிடமிருந்து அந்நியப்படுத்தி விடலாம் என்று நினைக்கின்றது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களாகிய நாம் அதைப் புரிந்து கொண்டு ஒற்றுமையுடன் முறியடிக்க வேண்டும். அதே வேளை 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின் தாயகத்தில் அவலப்படும் எமது மக்களுக்காகக் குரல் கொடுக்கும் புலம்பெயர் தமிழ்மக்களினதும், புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் நீதிக்கான போராட்டங்களை இலங்கை அரசு, தனது நாடு கடந்த பயங்கரவாத நடவடிக்கைகளின் மூலம் முடக்க முயல்கின்றது.

இதைப் புலம்பெயர் தமிழர்களாகிய நாம் அறிவுபூர்வமாக புரிந்துகொண்டு தக்க நேரத்தில் தக்க பதிலடிகொடுக்க மீண்டும் ஒருமுறை அனைத்து தமிழ்மக்களும் எழுச்சியுடன் அணி திரள வேண்டும்"- என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ந-5)

## பதில்

தற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கே வரவேண்டும் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இதுகுறித்து இரா.சம்பந்தனிடம் கருத்துக் கேட்ட போதே இவ்வாறு காட்டமாகத் தெரிவித்தார்.

தென்னாபிரிக்க அனுசரணையுடன் இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவதற்குத் தயார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்தது. அதையடுத்து அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையான பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்தநிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேசிய பத்திரிகை ஆசிரியர்களை நேற்று முன்தினம் அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார். அப்போது "இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக் குழுவிற்குத் தான் வரவேண்டும்" என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்துக் கருத்துக் கேட்ட போதே; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார். "அவர்கள் தங்கள் அரசியலுக்காக ஒவ்வொன்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. நாங்கள் நடத்தையால் தக்க பதிலடி கொடுப்போம்"- என்று கூறினார் அவர்.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு உதவுமாறு இலங்கை அரசு, தென்னாபிரிக்க ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க, தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கம் ஷூமாவினால், இலங்கை விவகாரங்களைக் கையாள்வதற்காக விசேட பிரதிநிதியாக சிறில் ரமபோஷா நியமிக்கப்பட்டதுடன், நல்லிணக்கம் தொடர்பான முயற்சிகளில் தென்னாபிரிக்க அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. (ற-5)

## ஊடகங்களில்

சியின் மாகாணசபை உறுப்பினர்களால் பல்வேறு பிரேரணைகள் சமர்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் மூன்று உறுப்பினர்களின் பிரேரணைகள் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்தினால் நீக்கப்பட்டுள்ளன.

அதில் ஒன்று யாழ். மாவட்ட உறுப்பினர் க.சர்வேஸ்வரனால் சமர்ப்பிக்கப்பட்ட, வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக் குட்பட்ட வைத்தியசாலைகளுக்கான உணவு விநியோகத்தில் நடந்த முறைகேடு தொடர்பில் விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்துக்கான முன்மொழிவு. விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் அது நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்மொழிவு ஏன் நிராகரிக்கப்பட்டது என்று மாகாண சபை உறுப்பினர் கேள்வி எழுப்பியபோது, அது பற்றி செய்தி ஏற்கனவே ஊடகங்களில் வெளியாகி விட்டதால் அதனை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று அவைத் தலைவரால் பதிலளிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

"எங்கள் முன்மொழிவுகளை நாம் பேரவைச் செயலகத்திடம் தான் கொடுக்கிறோம். அதன் பின்னர் அது ஊடகங்களில் வெளியாவதற்கு நாம் எப்படிப் பொறுப்பாக முடியும்? நிலைமை அப்படி இருக்கையில், ஊடகங்களில் தகவல் வெளியானதைக் காரணம் காட்டி தீர்மான முன்மொழிவு ஒன்றை நிராகரிப்பது எந்தவகையில் நியாயம்? இது அராஜகமல்லவா?" என்று தமது பெயரைக் குறிப்பிட வேண்டாம் என்ற நிபந்தனையுடன் பேசிய மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் அங்கலாய்த்தனர்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை நிலைப்பாட்டுடன் தொடர்புபட்ட காரணத்தால் இரு முன்மொழிவுகளை நிராகரிப்பதாக உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கு அவைத் தலைவரால் காரணம் கூறப்பட்டுள்ளது.

சிவாஜிலிங்கம் முன்வைத்தவற்றுள் இரு முன்மொழிவுகள் அப்படி நிராகரிக்கப்பட்டுள்ளன. 150 சொற்களுக்கு அதிகமாக இருந்ததால் நிராகரிக்கப்பட்டதாகவும் காரணம் கூறப்பட்டுள்ளது. (உ-5)

## வன்புணர்வை

குறித்துத் தான் கவலையடைகிறார் என்று கூறினார்.

இந்த அறிகைகள் மீது ஐ.நா. ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா என்று, இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியது.

அதற்குப் பதிலளித்த சாய்னா ஹவா பங்குரா, இது குறித்து தாம் கரிசனை கொண்டுள்ளார் என்றும் கவலையடைந்துள்ளார் என்றும் குறிப்பிட்டார். மேலும் இந்த விவகாரம் தொடர்பாக தாம் ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி பாலித கொஹன்னவுடன் பேசியுள்ளார் என்றும் தெரிவித்தார்.

"இது தொடர்பில் மேற்கொண்டு என்ன செய்வது என்பது தொடர்பாக நாம் ஆராய வேண்டும் என்பதை இருவருமே ஏற்றுக்கொண்டுள்ளோம். இருந்தாலும் இந்த விடயத்தைக் கையாள்வதற்கு வசதியாக இதற்கென அவர்கள் ஒருவரை நியமிக்க வேண்டும்" என்று தெரிவித்தார் பங்குரா. (உ-5)

## கோபியுடன்

முன்னாள் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தத் தகவலை பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், குருநகர் கடற்கரை வீதியைச் சேர்ந்த அருளானந்தன் டினேஷ்குமார் என்பவரே நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்ட கோபியின் தொலைபேசி ஆராய்த போது கிடைத்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. கோபியுடன் அவர் பல தடவைகள் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு அவர் பேசியுள்ளார் என்று பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது;

"கோபியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கைத்தொலைபேசி ஆராயப்பட்டு வருகின்றது. தற்போது கைது செய்யப்பட்டுள்ளவர் கோபியின் தொலைபேசி இலக்கத்துக்கு அடிக்கடி தொடர்பு கொண்டுள்ளார். இந்த மாத ஆரம்பத்திலும் - கோபி கொல்லப்படுவதற்கு முன்பாகவும் - அவருடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளார் என்று சந்தேகிப்பதுடன், அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினராவார்"- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

## தனுஷ்கோடிக்கு

இந்திய நாளிதழான 'த ஹிந்து'. அதன் காரணமாகதமிழக மீனவர்கள் அச்சமடைந்துள்ளனர் என்றும் மேலும் அந்த நாளிதழ் மேலும் கூறியுள்ளது.

தமிழகத்தின் தனுஷ்கோடிக்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையே உள்ள கடற்பகுதியில் 13 மணல் திட்டுக்கள் காணப்படுகின்றன. அதில் முதல் ஆறு திட்டுக்களும் இந்திய கடல் எல்லைக்குட்பட்டவை. 7ஆவது திட்டிலிருந்து 13 ஆவது திட்டு வரை இலங்கைக்குச் சொந்தமானவை. குறித்த மணல் திட்டுக்கள் பகல் நேரங்களில் நீர் வற்றி திட்டுக்களாகவும், இரவு நேரங்களில் நீரில் மூழ்கியும் காணப்படும்.

இந்த நிலையிலேயே தனுஷ்கோடிக்கு அண்மையில் உள்ள இலங்கைக்குச் சொந்தமான 7ஆவது மணல் திட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய முகாமில் இலங்கைக் கடற்படையினர் 24 மணி நேரமும் நிலைகொண்டுள்ளனர் என்று தமிழக மீனவர்கள் கூறுகின்றனர்.

இதுகுறித்து 'த ஹிந்து' நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தியில்-

இலங்கை கடற்படையினர் இராமேஸ்வரத்திற்கு வெகு அண்மையில் அமைந்துள்ள கச்சத்தீவில் 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சீனாவின் உதவியுடன் கடற்படை முகாமை நிறுவிவிட்டார்கள். தற்போது 7 ஆவது மணல் திட்டிலும் புதிய கடற்படை முகாமை அமைத்துள்ளனர். இலங்கை கடற்படையினரின் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதால், தமிழக மீனவர்கள் அச்சமடைந்துள்ளனர். மீனவர்களின் உயிருக்கும் எவ்விதமான உத்திரவாதமும் இல்லை என்று இராமேஸ்வரம் மீனவர் கூறினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## நெடுந்தீவு

விடயம் தொடர்பில் கேள்வியெழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"குதிரைகள் கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட தகவலையடுத்து நெடுந்தீவுப் பொலிஸ் பொறுப்பதிகாரியை முல்லைத்தீவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அது குறித்து விசேட புலனாய்வுப் பிரிவினர் விசாரணை முன்னெடுத்துள்ளனர். அதன் பின்னரே அவரை பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்வதா என்பது பற்றித் தீர்மானிக்கப்படும். அவரது இடத்துக்கு மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்"- என்று அவர் கூறினார். (ற-4)

## முத்துஐயன்

கின்றது. அந்தக் குளம் போரினால் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள நிலையில், அதனை புனரமைப்புச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளுக்கு மேலதிக நீரை சேமித்து வழங்கும் பொருட்டு முத்துஐயன்கட்டுக் குளம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. மேலும் 3 அடி வரையில் நீரை மேலதிகமாக சேர்த்து வைக்கக் கூடியதாக அணைக்கட்டு மற்றும் அதனோடு இணைந்த புனரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உலக வங்கி 600 மில்லியன் ரூபா நிதி வழங்க முன்வந்துள்ளது. இந்தக் குளத்தைப் புனரமைப்புச் செய்வதன் ஊடாக அந்தப் பகுதி விவசாயிகள் பெருமளவு நன்மையடைவர்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

## தமிழ்

சாதாரண தரத்தில் கணிதம் தாய்மொழி உட்பட 6 பாடங்களில் திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அவர்களுக்கு வடக்கில் வைத்து பொலிஸ் பயிற்சி வழங்கப்படும். 6 மாதகால பயிற்சியின் பின்னர் அவர்கள் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவர். 18 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடைய திருமணமாகாத பெண்களே இதில் இணைத்துக் கொள்ளப்படுவர். தவிர பெண் பொலிஸ் பரிசோதகர்கள் 100 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்."- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.26
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் 2 ஆவது அரையிறுதியாட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்.26
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் முறையிலான 2 ஆவது சுற்றுப்போட்டிகள் இன்று சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றன.
இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# அனல் பறந்தது ஆட்டம்; அராலி சரஸ்வதி சம்பியன்



15 வயதுப் பிரிவு அணி



17வயதுப் பிரிவு அணி

யாழ்ப்பாணம், ஏப்.26
யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயது, 17 வயது பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் இரண்டு பிரிவிலும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணிவெற்றி பெற்றுச் சம்பியனானது.
இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.
இதில் முதலில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 19:8 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.
தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 13:12 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது.
17 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 21:11 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.
தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 20:13 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.
(த-23-86-422)

## வடக்கு மாகாண மரதன் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.26
வடமாகாண ரீதியிலான ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டி இன்று சனிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு வவுனியா நகர சபை மைதானத்தின் முன்றலில் ஆரம்பமாகி ஓமந்தைவரை சென்று அங்கிருந்து மீண்டும் வவுனியா நகர சபை மைதான முன்றலில் முடிவடையும்.
இதேவேளை றைக் கோண்டோ போட்டிநாளைஞாயிற்றுக்கிழமை வவுனியா நகர சபை உள்ளக விளையாட்டு அரங்கில் இடம் பெறவுள்ளது. (த-23-86)

## கரப்பந்தாட்ட போட்டிகள்

வலி. வடக்கு, ஏப். 26
யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நடத்தப் படவுள்ளன.
இதற்கான விண்ணப்பங்களை யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் கோரியுள்ளது.
உரியகழகங்கள்யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர், செயலாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை எதிர்வரும்6ஆம்திகதிக்குமுன்னர் பெற்று அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

## திருமலை கரப்பந்தில் வெற்றி பெற்றோர்

திருகோணமலை, ஏப்.26
திருகோணமலை, பட்டினமும் சூழலும் பிரதேச இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் கடந்த சனிக்கிழமை பெரிய முறிவு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.
இதில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வில்லூன்றி இளைஞர் கழக அணியை எதிர்த்து வெள்ள மணல் இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் வில்லூன்றி இளைஞர் கழக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் இராஜகிய வித்தியலோக இளைஞர் கழக அணியை எதிர்த்து வில்லூன்றி இளைஞர்கழக அணி மோதிக் கொண்டது.
3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் இராஜகிய வித்தியலோக இளைஞர் கழக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (த-23)

## பச்சிலைப் பள்ளி, கரைச்சி அணிகள் சம்பியன்



கிளிநொச்சி, ஏப்.26
கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பச்சிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.
இதில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக அணியை எதிர்த்து பூநகரி பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.
5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக அணி 3:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.
தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணியை எதிர்த்து கரைச்சி பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.
3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.
(த-23)



யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம் நடத்திய 2013 ஆம் ஆண்டு அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க் கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன. இதில் பெண்களுக்கான கயிறு இழுத்தல் இறுதிப் போட்டியில் பங்குபற்றிய அணிகள். (த-23)

## மல்யுத்தப் போட்டியில் முல்லைத்தீவு முதலிடம்

யாழ்ப்பாணம், ஏப்.26
வடமாகாண ரீதியிலான ஆண்களுக்கான மல்யுத்தப் போட்டி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் இடம் பெற்றது.
இதில் முல்லைத்தீவு மாவட்டம் 29 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தையும், யாழ். மாவட்டம் 24.5 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், வவுனியா மாவட்டம் 7.5 புள்ளிகள் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றன.
(த-23)

## அரையிறுதிக்கு யங்கம்பன்ஸ்

யாழ்ப்பாணம், ஏப்.26
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் கடந்த திங்கட்கிழமை மாலை 4மணிக்கு இடம் பெற்ற 4ஆவது காலிறுதி ஆட்டத்தில் விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

## தெல்லிப்பழையில் கரப்பந்தாட்டம்

வலி. வடக்கு, ஏப். 26
யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்தின் ஆதரவுடன் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினால் நடத்தப்படும் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி இன்று காலை 9.00 மணிக்கு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (த-86)

## கிளிநொச்சியில் உதைபந்தாட்டம்

கிளிநொச்சி, ஏப்.26
கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்கும் இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை 4 ஆம் வாய்க்கால் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இடம் பெறவுள்ளது. (த-23)

## வவுனியா பிரதேச செயலகம் வலைப்பந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், ஏப்.26
வவுனியா பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்றது.
இறுதியாட்டத்தில் வவுனியா வடக்குபிரதேசசெயலகஅணியை எதிர்த்து வவுனியா பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.
இதில் வவுனியா பிரதேச செயலக அணி 15:10 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (த-23)

## மன்னார் மாவட்ட கிரிக்கெட் இன்று



யாழ்ப்பாணம், ஏப்.26
மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுவிழாவின் ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட் போட்டிகள் இன்று சனிக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
இதேவேளை மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டப் போட்டி இடம்பெறும்.
நாளை ஞாயிற்றுக்கிழமை மன்னார் உள்ளக விளையாட்டு அரங்கில் ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப் பந்தாட்டம், பூப்பந்தாட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.
(த-23)

## ஹற்றிக் வெற்யியை பதிவு செய்தது
# சென்னை சுப்பகிங்ஸ்





மும்பை இந்தியன்ஸ் அணியை 7 இலக்குகளால் தோற்றகடித்து ஹட்றிற் வெற்றியைப் பதிவுசெய்தது சென்னை சுப்பர்கிங்ஸ் அணி.
டுபாயில் இடம்பெற்று வரும் 7 ஆவது ஐ.பி.எல். 20/20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்று இடம்பெற்ற 13 ஆவது லீக் சுற்றுப்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணி என்பன மோதின.
நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித் தது. இதன் அடிப்படையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மைக் ஹசி, அதித்திய தரே ஆகி யோர் கழமிறங்கினர் களமிறங்கினர்.
மும்பை அணி 11 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஹசி ஒரு ஓட்டதுடன் ஆட்டமிழந்து வெளியே றினார். தொடர்ந்து களமிறங்கிய றோகித் சர்மா தரேயுடன் இணைந்து நிதானமாகத் துடுப் பெடுத்தாடி வந்தவேளை தரே 23 ஓட்டங் களுடன் வெளியேறினார். அடுத்து அன்டர்சன் சர்மா ஜோடி அணியை வலுவான நிலைக்கு இட்டுச் சென்றது. 15 ஆவது பந்துப் பரிமாற் றத்தில் அணி 109 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அண்டர்சன் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற றோகித் சர்மாவும் அரைச்சதம் கந்து பவிலியன் திரும்பினர்.
இதனையடுத்து பின்வந்த வீரர்கள் சோபிக்காத நிலையில் 20 பந்துப்பரிமாற்றங்களில் 141 ஓட்டங்களை மும்பை அணியால் பெறமுடிந் தது. சென்னையின் பந்துவீச்சில் ஹிபான் ஹஸ் 2 இலக்குகளையும் மோபித் சர்மா 4 இலக்குகளையும் கைப்பற்றினர். அதனைத் தொடர்ந்து 142 என்ற இலகுவான வெற்றி இலக் காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்னை சூப்பர்கிங்ஸ் அணி 19 ஆவது பந்துப் பரிமாற்றம் நிறைவில் மூன்று இலக்குளை மட்டும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைத் தனதாக்கி கொண்டது.
அவ் அணி சார்பாக மக்கலம் ஆட்டமிளக்காது 71 ஓட்டங்களையும் சிமித் 29 ஓட்ங்களையும் டியூபிளஸஸ் 20 ஓட்டங்களைம் அதிகபட்சமாகப் பெற்றது. பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 2 இலக்குகளையும் ஓஜா 1 இலக்கையும் கைப்பற்றினார்.
இப் போட்டியின் ஆட்டநாய கனாக சென்னை அணியின் மோகித் சர்மா தெரிவுசெய்யப்பட் டார்.
(400)

## இலங்கை அணி வீரர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்து





இலங்கை தேசிய கிரிக் கெட் அணி வீரர் கள் இலங்கை கிரிக்கெட் சபையுடன் ஒப்பந்தத் தில் கைச்சாத்திட்டுள் ளனர். எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கான ஒப்பந்தத்திலேயே வீரர்கள் கைச்சாத் திட்டுள்ளனர். இலங்கை கிரிக்கெட் அணி தலை வர் அஞ்சலோ மத்தியூஸ் இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகளு டன் நடத் திய பேச்சில் உடன்பாடு ஏற் பட்டுள்ளது.
இதன்போது வீரர்களுக்கு 20 வீதம் பங்குபற்றல் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என மத்தியூஸ் கோரிக்கை முன்வைத்துள்ளார். எனினும் 10 வீத பங்குபற்றல் கொடுப்பனவு வழங்க முடியும் என இலங்கை கிரிக்கெட் சபை இணங்கியுள்ளது. இதற்கு மத்தியூஸும் இணக்கம் தெரிவித் துள்ளார்.
அதன்படி, நடந்து முடிந்த 20/20 உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றி வீரர்களுக்கும் அதற்கான பங்குபற்றல் கொடுப்பனவு வழங்கப் படவுள்ளது. வெற்றி பணத் தோடு தலா 1,500,000 அமெரிக்க டொலர் ஒவ்வொரு வீரர்களுக்கும் வழங்கப்பட வுள்ளது.
இலங்கை கிரிக்கெட் சபைப் பொருளா ளர் நுஸ்கி மொஹ மட், தேர்வுக் குழுத் தலை வர் சனத் ஜயசூரிய மற்றும் பிர தான நிறைவேற்று அதி காரி ஆஸ்லி டி சில்வா ஆகி யோர் கிரிக்கெட் வீரர் களின் ஒப்பந்தம் குறித்து அஞ்சலோ மத்தியூஸுடன் பேச்சு நடத்தி யதாக இலங்கை கிரிக்கெட் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(த)

## இலங்கை அணியின் பயிற்றுநர் அத்தபத்து


அத்தபத்து

இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுநராக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மாவன் அத்தபத்து நியமிக்கப்பட் டுள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.
அத்துடன் இடைக்கால உதவிப் பயிற்றுநராக இலங்கை அணியின் முன்னாள் வீரர் ருவன் கல்பகே நியமிக்கப்பட்டுள்ளார். உடனடியாக நடைமுறைக்கு வரும் வகை யில் இந்த நியமனங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.
(த)


நாமல் ராஜபக்ஷ

## இலங்கை றக்பி அணியின் தலைவராக நாமல் ராஜபக்ஷ

தென் கொரியாவுக்கு எதிராக இவ் வார இறுதியில் நடைபெறவுள்ள ஆசிய ஐந்து நாடுகள் பிரதான பிரிவு றக்பி போட்டியில் பங்குபற்றும் பொருட்டு இலங்கை றக்பி அணி அங்கு புறப்பட்டுச் சென் றது.
ஆசிய றக்பி தரப்படுத்தலில் முதல் ஐந்து இடங் களை வகிக்கும் ஜப்பான், ஹொங்கொங், தென் கொரியா, பிலிப்பைன்ஸ், இலங்கை ஆகிய நாடுகள் இப் போட்டியில் லீக் அடிப்படையில் ஒன்றையொன்று எதிர்த்தாடும்.
இப் போட்டிகளை முன்னிட்டு இலங்கை றக்பி தெரிவுக் குழுவினரால் 23 வீரர்கள் அடங்கிய இலங்கை றக்பி குழாம் பெயரிடப்பட்டுள்ளது.
கொழும்பில் கடந்த வருடம் நடைபெற்ற செரெண டிப் மும்முனை சர்வதேச றக்பி போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்ற இலங்கை அணிக்கு தலைவராக விளையாடிய நாமல் ராஜபக்ஷ, தற்போதைய இலங்கை றக்பி அணிக்கும் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
அத்துடன் கொழும்பில் கடந்த வருடம் நடைபெற்ற ஆசிய ஐந்து நாடுகள் முதலாம் பிரிவுப் போட்டிகளில் சம்பிய னானதன் மூலம் பிரதான பிரிவுக்கு தரமுயர்த்தப்பட்ட இலங்கை அணியின் தலைவராக விளையாடிய யோஷித ராஜபக்ஷவும் தற்போதைய அணியில் இடம்பெறுகின் றார். இவர் உபாதைக்குள்ளாகியிருந்ததன் காரணமாக செரெண்டிப் மும்முனை சர்வதேச றக்பி போட்டிகளில் விளையாடவில்லை.
இம்முறை தெரிவுசெய்யப்பட்டுள்ள 23 வீரர்களில் பத்து வீரர்கள் கடற்படை அணியைச் சேர்ந்தவர்களாவர்.
நடந்து முடிந்த டயலொக் ஏ பிரிவு லீக் றக்பி போட்டிகளிலும் டயலொக் க்ளிபர்ட் கிண்ண நொக் அவுட் றக்பி போட்டிகளிலும் முதல் தடவையாக சம்பியனான கடற் படை அணியில் அதித் திறமையை வெளிப்படுத்திய பத்து வீரர்களே இலங்கை றக்பி குழாமில் சேர்த்துக்கொள் ளப்பட்டுள்ளனர்.
எவ்வாறாயினும் அணியை இரட்டை வெற்றிக்கு வழிநடத் திய அணித் தலைவர் ரோஹித ராஜபக்ஷவுக்கு இலங்கை அணியில் வாய்ப்பு வழங்கப்படாதது வியப்புக்குரியதாகும்.
தென் கொரியாவுடனான போட்டி இன்று 26ஆம் திகதி சனிக்கிழமை இன்ச்சொன் ஒக்சிலரி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.
இதனைத் தொடர்ந்து ஹொங் கொங் அணியை கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் மே மாதம் 3ஆம் திகதி இலங்கை அணி சந்திக்கவுள்ளது.
ஜப்பானை டோக்கியோ றக்பி அரங்கில் மே மாதம் 10ஆம் திகதி சந்திக்கவுள்ள இலங்கை அணி, தனது கடைசி லீக் போட்டியில் பிலிப்பைன்ஸ் அணியை குதிரைப் பந்தயத் திடலில் மே 17ஆம் திகதி எதிர்கொள்ளவுள்ளது.
இந்த நான்கு போட்டிகளில் ஏதாவது ஒரு போட்டியில் இலங்கை வெற்றிபெறும் பட்சத்தில் தொடர்ந்தும் பிரதான பிரிவில் நிலைத்திருக்க சந்தர்ப்பம் கிடைக்கும். (இ)

# அதிரடியாக வென்றது சன் ரைசர்ஸ்






பரபரப்பான ஆட்டத்தில் அணி டெல்லி அணியை நான்கு ஓட்டங்களால் வெற்றி கொண்டது ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணி. டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் டெல்லி - ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக தவானும், பிஞ்சும் களமிறங்கினர். இருவரும் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தனர். டெல்லி அணியின் இடது கை சுழற்பந்து வீச்சாளரான நதீம் வீசிய ஆட்டத்தின் 7 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 22 பந்துகளில் 33ஓட்டங்களைக் குவித்த தவான் ஆட்டமிழந்தார். இதனால் 3ஆவது ஆட்டக்காரராக டேவிட் வார்னர் களமிறங்கினார்.

பிஞ்சும், வார்னரும் டெல்லி அணியின் பந்து வீச்சை அடித்து நொறுக்கி மைதானத்தின் நாலாபுறமும் சிதறடித்தனர். இருவரும் கடைசி வரை விளையாடி ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்டத்தின் முடிவில் பிஞ்ச் 53 பந்துகளில் 8 நான்கு ஓட்டங்கள் 4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 88 ஓட்டங்களும், வார்னர் 45 பந்துகளில் 3 நான்கு ஓட்டங்கள் 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக58ஓட்டங்களும் எடுத்தனர். இதனால் சன் ரைசர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 184 ஓட்டங்களைக்களை குவித்தது.

பின்னர் கடினமான இலக்கைத் துரத்த களமிறங்கிய டெல்லி அணிக்கு டி கொக்கும், முரளி விஜயும் இணைந்து அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். இருவரும் முதல் இலக்குக்கு 99 ஓட்டங்கள் சேர்த்தனர். ஆட்டத்தின் 12ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 30 பந்துகளில் 48 ஓட்டங்களைக் குவித்த டி கொக் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்தில் முரளி விஜய்யும் 52 ஓட்டங்களில் வெளியேறினார். பின்னர் வந்த பீற்றர்சன்னும், கார்த்திக்கும் வெற்றி இலக்கு கடினமானதால் அடித்து ஆட முயன்று தங்கள் இலக்குகளை பறிகொடுத்தனர். ஆனாலும் டுமினியும், திவாரியும் இணைந்து கடைசி வரை போராடினர்.

கடைசி பந்துப்பரிமாற்றத்தில் வெற்றிக்கு 20 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் இருவரும் அதிரடியாக ஓட்டங்களை குவித்தனர். கடைசி இரண்டு பந்துகளில் 13 ஓட்டங்கள் தேவை என்றிருந்தபோது ஐந்தாவது பந்தில் டுமினி எல்லை கோட்டைத் தாண்டி ஆறு ஓட்டங்கள் அடித்தார். கடைசி பந்தில் சிக்ஸ் அடித்தால் ஆட்டத்தை சமன் செய்யலாம் என்ற விறுவிறுப்பான நிலையில் கடைசி பந்தில் 2 ஓட்டங்களை மட்டுமே டுமினியால் எடுக்க முடிந்தது. இதனால் சன் ரசர்ஸ் அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக சன் ரைசர்ஸ் அணியின் ஆரேன் பிஞ்ச் தெரிவு செய்யப்பட்டார். (கு- 400)

# ஐ.பி.எல் கிண்ணம் யாருக்கு?




ஐ.பி.எல். தொடர்நடந்து கொண்டிருக்கும் இந்த வேளையில் கிண்ணத்தை வெல்வது யார் என்று முன்னாள் அணித் தலைவர் கங்குலி கருத்து தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் பரபரப்புடன் நடந்து வருகின்றது. கிண்ணத்தைக் கைப்பற்றும் முனைப்புடன் அணிகள் போட்டி போட்டுக் கொண்டுள்ளன. ரசிகர்களிடையே உள்ள ஆர்வமும் அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் முன்னாள் இந்திய வீரரும், அணித் தலைவருமான கங்குலி கிண் ணத்தை வெல்லப் போகும் அணிகள் பற்றி கருத்து கூறுகையில், இந்த ஐ.பி. எல். போட்டியில் எல்லா அணிகளும் சிறப்பாக விளையாடி வருகின்றன.

இதனால் எந்த அணி கிண்ணத்தை வெல்லும் என்பது கணிக்க முடியாதபடி உள் ளது. பஞ்சாப் அணி வீரர் மக்ஸ் வெல்லின் ஆட்டம் நம்ப முடியாதபடி உள் ளது. டேவிட் மில்லர் ஆட்டமும் பிரமிப்பாக இருக்கிறது என்று கூறியுள்ளார். (த)

# மிகவும் கவனமாகவே துடுப்பாட்டம் செய்தேன்



ராஜஸ்தானுக்கெதிரான ஆட்டத்தில் துடுப்பாடியது கடினமாக இருந்ததாக சென்னை அணியின் அதிரடி வீரர் ஜடேஜா கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் ராஜஸ்தானுக்கெதிராகச் சென்னை அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தனது இடண்டாவது வெற்றியை பதிவு செய்தது. 36 ஓட்டங்களுடன் 4 இலக்குகள் வீழ்த்திய ஜடேஜா ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆட்டம் குறித்து ஜடேஜா கூறுகையில், நான் துடுப்பெடுத்தாட வந்தபோது மிகவும் கடினமாக இருந்தது. கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தது சந்தோஷம். கடைசி வரை களத்தில் இருக்க வேண்டும் என்றே விரும்பினேன்.

அதன்படி களம் மெதுவாகவும், பந்து நன்றாகத் திரும்பும் விதமாகவும் இருந்தது. இதனால் நேர்த்தியாக பந்து வீசினால் 140 ஓட்டங்கள் போதுமானது என்று நினைத்தோம். களம் பந்து வீச்சுக்கு சாதமாக இருந்ததால் அனுபவித்து பந்து வீசினேன். இதனால் 4 இலக்குகள் வீழ்த்த முடிந்தது என்று கூறியுள்ளார். (த)

# ஷிகர் தவான் கவலை



ஹைதராபாத் அணியின் மோசமான களத் தடுப்பால் அணி தோல்வியடைந்தது வருத்தமளிக்கிறது என ஹைதராபாத் அணியின் தலைவர் ஷிகர் தவான் கூறியுள்ளார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணியும் பஞ்சாப் அணிகளும் மோதின. இதில் மக்ஸ்வெல் அதிரடியால், பஞ்சாப் அணி ஹைதராபாத் அணியைத் துவம்சம் செய்து 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இந்தப் போட்டிக்குப் பிறகு ஹைதராபாத் அணியின் தலைவர் ஷிகர் தவான் தோல்வி பற்றி கூறுகையில், அணியின் மோசமான களத்தடுப்பு கவலை அளிக்கிறது. அதிக பிடிகளை நாங்கள் தவறவிட்டோம்.

குறிப்பாக நாங்கள் மக்ஸ்வெல் கொடுத்த பிடியைத் தவறவிட்டதால் அவர் பெரிய ஓட்டங்களை அடித்துவிட்டார். இலக்கை நோக்கி செல்லும் போது நாங்கள் நிறைய விக்கெட்டுகளை இழந்துவிட்டோம் என்று கூறியுள்ளார். (த)

# கைவிடப்பட்டது விசாரணை




மஹேல ஜயவர்த்தன மற்றும் குமார் சங்கக்கார ஆகியோருக்கு எதிராக மேற்கொள்ளப்படவிருந்த ஒழுக்காற்று நடவடிக்கையை கைவிட இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைவர் ஜயந்த தர்மதாச, பொதுச் சபை. கூட்டத்தின் பின்னர் இந்த அறிவித்தலை ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

20/20 உலக கிண்ணத்தை வெற்றி கொண்டதன் பின்னர் நாடு திருப்பிய வேளையில் விமான நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மஹேல மற்றும் சங்கக்கார ஆகியோர் இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பில் கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

இந்த நிலையில் இது தொடர்ப்பில் இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள இலங்கை கிரிக்கெட் சபை முன்னர் தீர்மானித்திருந்த போதிலும் அந்தத் தீர்மானம் தற்போது கைவிடப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. (த)

**கட்டார் நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு**

கட்டார் நாட்டிலுள்ள முன்னணி நிறுவனத்தில் கீழ் காணும் வேலை வாய்ப்புக்கள் உடன் காத்திருக்கின்றன.
*Plumber-1200+OT *Plumber helper - 900+OT *Welder-1200+OT *Welder helper-900+OT *Electrician-1200+OT
தங்குமிடம், மருத்துவம், மூன்று வேளை உணவு என்பன இலவசம். இரண்டு வாரத்தில் பயணம்.
(43269) (3.8.4)
தொ.பே:LANKA VOICE 077 058 4658
Jaffna Branch 077 952 7575

**DIGITAL COLOUR PRINTING**
hp Indigo 12 COLOUR - 2800dpi
New Syenthetic Album Print
10 x 30 -12 x 30 - 225.00
4R ( 4x6) - 8.50 - invitation,visiting card
A4 - 12.00 -A3 - 25.00
A2 - 75.00 -A1 -150.00
(minimum order 100 print)
200YEARS NOT COLOUR FADE
மூர்த்தி டிஜிற்றல்கலர் லாப்
62/20,ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்~ 021 2219399
(LV13511)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.